# விடுதலைச் சிந்தனையாளர் வ.உ. சிதம்பரனார் தமிழியல் பண்புகள்

புலவர் பூவை. சு. செயராமன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பார்வை

# விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனாரின் தமிழியல்பண்புகள்

புலவர் பூவை. சு. செயராமன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

வ.உ.சிதம்பரனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பலர்)

வரிசை எண் : 12 நாள்: 5.2.2013

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் தமிழியல் பண்புகள் |
| ஆசிரியர் | : | புலவர் பூவை. சு. செயராமன்<br>உதவிப் பேராசிரியர் (ம) துணை முதல்வர்<br>தமிழ்த்துறை<br>மீனாட்சி இராமசாமி கல்வியியல் கல்லூரி<br>அரியலூர் |
| பொதுப்பதிப்பாசிரியர் | : | முனைவர் தி. மகாலட்சுமி<br>ஆய்வுஅலுவலர்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>தரமணி, சென்னை-600 113 |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>தரமணி, சென்னை-600 113<br>தொலை பேசி எண். 044 - 22542992 |
| வெளியீட்டு எண் | : | 742 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2012 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 அளவு |
| பக்க எண்ணிக்கை | : | viii+168 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 80/- (ரூபாய் எண்பது மட்டும்) |
| அச்சகம் | : | இலட்சுமி ஏஜென்சிஸ்<br>23/11, பெருமாள் முதலித் தெரு. ராயப்பேட்டை<br>சென்னை-600 014 |
| பாடம் | : | வ.உ.சி.யின் தமிழியல் மாண்பு |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

**முனைவர் கோ. விசயராகவன்,** எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

## அணிந்துரை

இந்தியத் திருநாட்டில் அரசியல் வித்தகப் புண்ணியர் பலர் தோன்றினர். அவர்களுள் அண்ணல் காந்தி, நேரு, வல்லபாய் படேல், நேதாஜி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். நம் தென்னிந்தியாவில் தோன்றிய முதன்மையர் பலருள் ஒருவரான வ.உ.சிதம்பரனார் அவர்களது வாழ்வினை, அறப்பண்பினை அவர் குறித்த அறிஞர் கூற்றினைத் தெள்ளிதின் உரைப்பதாக **விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் தமிழியல் பண்புகள்** என்ற இந்நூல் அமைந்துள்ளது. வ.உ.சி. அவர்கள், பாரதி, சுப்ரமணிய சிவா ஆகியோரது அன்பிற்கினிய நண்பராக; சமரசச் சிந்தனையாளராக; இல்லற ஞானியாக; துறவற யோகியாக விளங்கிய தன்மை இந்நூலில் தெள்ளிதின் விளக்கப்பட்டுள்ளது; மானம் போயின் சாதல் நன்று எனும் அரிமா நோக்காளராக வ.உ.சி. அவர்களை மக்களுக்குக் காட்டியுள்ள விதம் மிகவும் நன்று. காந்தியடிகளின் மது விலக்குக் கொள்கையிலும், வெள்ளையருக்கு எதிராகக் கப்பல் வணிகம் செய்ய முற்பட்டதிலும் அவரது மனவுறுதி போற்றுதற்குரியது என்பதை இந்நூல் சுட்டிச் செல்கின்றது.

புலவர் பூவை சு. செயராமன் தன்நலம் கருதாது இந்நூலினை இயற்றியுள்ளார். உலகப் பொதுமறைக்கு உரைகண்ட ஒண்டமிழ் அறிஞர் வ.உ.சி.யைப் பற்றிய நூலாசிரியரின் இந்நாடகம் படித்தற்கும், நடித்தற்கும் சுவையைத் தரக்கூடியது. இதைக் களமாகக் கொண்டு இந்நூலை உருவாக்கிய ஆசிரியர், கவிஞர்; உரையாசிரியர்; படைப்பாளர் எனப் பன்முகப் பரிணாமம் கொண்டவர் என்பதனை தனக்கே உரிய மிடுக்கான வசனங்களின் வாயிலாகவும் ஆய்வுச் சிந்தனை வாயிலாகவும் தெளிவுபடுத்தியுள்ளார். இவர் இன்னும் பல நற்றமிழ் இயல், இசை, நாடக நூல்களையும் ஆய்வு நூல்களையும் இயற்றி அன்னைத் தமிழுக்கு அரும் பணியாற்றிட வாழ்த்துகின்றேன்.

அரிதின் முயன்று இந்நூல் தொடர்பான பணிகளைச் சிறப்புடன் மேற்கொண்ட இவ்வறக்கட்டளையின் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் மாண்புமிகு பள்ளிக்கல்வி, தொல்லியல், விளையாட்டு(ம)இளைஞர் நலம், தமிழ் ஆட்சிமொழி, சட்ட அமைச்சர் என்.ஆர். சிவபதி அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், ஒளியச்சுக் கோர்வை செய்த இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் எம் பாராட்டுகள். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த இலட்சுமி ஏஜென்சிஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

# முன்னுரை

இயலிசை நாடகமாய்த் திகழும் அன்னைத் தமிழின் திருவடி பணிவதிலே மகிழ்வடைகின்றேன். அடியேன் படைத்து வழங்கிய நாடகமாம் விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் என்னும் நடிப்பியல் நாடகத்தில் காணப்படும் வ.உ.சிதம்பரனாரின் தமிழியற் பண்புகளை நாடகத்தின் வழி தொகுத்துப் பொழிவாக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளமைக்கு முதற்கண் நல்லோர்க்கு நன்றி பகர்கின்றேன்.

எமது பள்ளிப்பணிக் காலத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடகங்களைப் படைத்து வழங்கியுள்ளேன். இதன்வழி வீர அரிமா வ.உ.சிதம்பரனாரின் சீர் புகழ் கூறும் நாடகமும் படைக்க வாய்ப்பு எய்தப் பெற்றேன்.

இந்தியத் திருநாட்டின் வெற்றியில் தமிழரின் பங்கு என்றும் போற்றுதற்கு உரியதாகும். தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற காந்தியடிகளின் சத்தியாகிரகப் போரின் வெற்றிக்குப் பெருந்துணையானவர் தமிழரே! தில்லையாடி வள்ளியம்மை முதலானோரின் தன்னலமில்லாத் தொண்டே அவ்வெற்றிக்கு உதவியது.

அந்நிய ஆட்சியை அகற்ற வடவரை விஞ்சும்படித் தென்னவரும் போராடி வெற்றிக்கு உழைத்துள்ளனர். வீரபாண்டிய கட்டபொம்மன் முதலான வீர மன்னர் தமதுயிர் ஈந்து தமிழ்ப் பண்பும், தமிழர் மானமும் காத்தனர். அஞ்சாத அவர் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவரே நமது வ.உ.சி.

வ.உ.சி.யின் குடிப்பிறப்பும்; கல்வி, துறவுச் சிந்தனையும்; இல்லற ஒழுக்கமும்; அழுக்காறு; அவா கொள்ளாப் பண்பும்; அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலான சால்பும்; பிறப்பொக்கும் என்றுணர்ந்த பேரறிவும்; பெண்ணடிமை கொள்ளாப் பெருமாண்பும்; நாட்டுப்பற்றும்; நன்றிமறவாத நன்னெஞ்சும்; தீண்டாமை எண்ணாச் சிறப்பும்; மது விலக்கிய மாண்பும்; கூட்டுறவுச் சிறப்பும்; தமிழ்த் தொண்டாற்றிய பண்புகளும் இப்பொழிவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அறிஞர் பெருமக்கள் கண்டு விண்டுரைத்த தனிப்பெரும் கருத்துகளும் தொகுக்கப்பட்டுள்ளன. நிறைவாக நாடகக் காட்சிகளில் அமைந்துள்ள வ.உ.சி.யின் தமிழியற் பண்புகள் சுட்டப்பட்டுள்ளன.

'வ.உ.சி. அஞ்சா நெஞ்சினர்; முன்னறி ஞானி; அடிமைத் தளை நீக்கவந்த அறநெஞ்சர்; அகப்பற்று துறந்த அறிஞர், உழைக்க அஞ்சா உத்தமர். அடிமைத் தளை அறுக்க வந்த ஆற்றலின் சக்தி. ஒழுக்கத்தின் நிறைஞர். அஞ்சுவன அஞ்சி அஞ்சத் தகாதன அஞ்சா மாவீரர். இல்லறச் செம்மல். இனிய வேதாந்தி; எதிரில்லாச் சித்தாந்தி; அணி செய்த அகத்தழகர். மாந்தப் பண்புகளின் மணிமகுடம். எளியர்க்கு இரங்கும் இனியவர். புரட்சியின் வித்து, புதிய பாரதம் படைக்க வந்த அக்கினிக் குஞ்சு. என்றும் நன்றி மறவா ஏந்தல்...'

இப்படி பலபடச் சொல்லும் பாராட்டிற்குரிய பைந்தமிழ்ச் சிந்தனையாளர் வ.உ.சி.யை நெஞ்சில் நிறுத்தி விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் என்னும் நாடகத்தைப் படைத்துள்ளேன். இந்நாடகத்தை அடியொற்றி அதன்கண் கூறப்பட்டுள்ள– சான்றோர் பகர்ந்துரைத்த – வ.உ.சிதம்பரனாரின் தமிழியற் பண்புகளை முன்னியெடுத்த 'விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனாரின் தமிழியற் பண்புகளாக' இப்பொழிவு நூலைப் படைக்கின்றேன். இப்பொழிவுவழி வ.உ.சி.யின் பண்பு நலன்களை வெளிக் கொணர முயன்றுள்ளேன்.

இந்நாடகச் சிறப்பினை வெளிக்கொணரும் வண்ணம், ஏற்பளித்து வெளியீட்டிற்கு உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் அன்பின் பேராசிரியர் முனைவர் திருமிகு கோ.விசயராகவன், நல்லார்க்கும், ஒருங்கிணைப்பாளராகத் திகழும் அன்புநிறை முனைவர் திருமிகு தி.மகாலட்சுமி அன்னையார்க்கும்; தமிழ் நெறியில் வழிகாட்டியாகத் திகழும் தொல்காப்பியச் செம்மல் திருஅடிகள் ஆசிரியனார்க்கும்: தொடர்புப் பாலமாக விளங்கும் அன்பிற்குரிய அன்னார் இளைய மகன் திருமிகு முனைவர் அ.சிவபெருமானார்க்கும், எமது மன மொழி மெய்யின் நன்றியைக் கூறி மகிழ்கின்றேன்.

எமது மீனாட்சி இராமசாமி கல்லூரியில் நடைபெற்ற அற இலக்கியப் பயிலரங்கில் பங்கு பெற வருகை தந்த சென்னைப் பல்பலைக்கழக முன்னைத் துணைவேந்தர் திருமிகு பொற்கோ (பொன்.கோதண்டராமன்) அய்யன் இந்நாடகத்தைக் கண்ணுற்று மகிழ்ந்து, மகிழ்ச்சியைத் தெரிவித்தார். அன்னார்க்கு இந்தப் பொன்னான வேளையில் நன்றியைப் பேரன்புடன் அணிவித்து மகிழ்கின்றேன்.

நாடகம் படைக்க ஊக்கமும், ஆக்கமும் வழங்கிய வரதை தொன்போசுகோ நிறுவனத்திற்கும், பொழிவில் பங்காற்ற பேருதவியும் இசைவும் வழங்கிய மீனாட்சி இராமசாமி (மெரிட்டு) கல்வி நிறுவனங்களின் செயலர், இயக்குநர், முதல்வர் முதலான அனைவர்க்கும் எமதினிய நன்றியை அன்புடன் அணிவிக்கின்றேன்.

வையம் போற்ற – வையத்துள் வாழ்ந்த – வான்புகழ் வ.உ.சி.யின் பண்புகள் நம்மை வியக்க வைக்கின்றன. நல்லாரைப் போற்றும் நற்பண்பால் அவர் பண்பு போற்றுவோம். நல்லோராய் வாழ்வோம்.

புலவர் பூவை.சு.செயராமன்.

## ஆசிரியர் குறிப்பு



தத்தனூர் மீனாட்சி இராமசாமி (மெரிட்டு) கல்வியியல் கல்லூரியில் துணை முதல்வராகவும், தமிழ்த்துறை உதவிப் பேராசிரியராகவும் பணிபுரியும் இப்பொழிவின் ஆசிரியர் திரு.புலவர் பூவை சு.செயராமன் நல்ல தமிழ்ப்பற்றாளர். இவர் திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பூந்தோட்டம் என்னும் ஊரினர். (இவ்வூர் ஒட்டக்கூத்தன் பிறந்த ஊராகும்). பெற்றோர் திருமிகு கோ.சுப்பிரமணியம், திருமதி சு.பத்மாவதி ஆவார்.

தமிழ் அரங்கங்களில் நன்மதிப்பைப் பெற்றவர். கட்டுரை, சிறுகதை, நாடகம், கவிதை நாடகம் படைப்பதில் வல்லவர். ஐம்பத்திரண்டிற்கும் (52) மேற்பட்ட சிற்றிலிக்கியங்களை யாத்த உரையெழுதியவர்.

நாற்பத்து ஐந்திற்கும் (45) மேலான சிற்றிலக்கிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டவர்.

தினகரன் விருது (2001), இராதாகிருட்டிணன் (நல்லாசிரியர்) விருது (2006), செந்தமிழ்ச் சுடர் விருது (2009), புலவர் மாமணி விருது (2009), கவிமாமணி விருது (2009), தமிழன்னை விருது (2010), தமிழ்மாமணி விருது (2011) முதலான விருதுகளைப் பெற்றவர்.

இலக்கியத்தில் கலைமகள் என்ற ஆய்வினையும், பழமலைநாதர்த் திருக்கோயில் வரலாறு என்ற ஆய்வையும், உடையார்பாளையம் வட்டம், ஆண்டிமடம் ஒன்றிய பெண்குழந்தைப் பாகுபாடு என்ற ஆய்வையும் செய்திட்ட ஆய்வாளர்.

பல்வேறு பல்கலைக்கழகக் கருத்தரங்குகளில் பங்குபெற்று கருத்தாளராகவும், கட்டுரையாளராகவும் திகழ்ந்தவர். இவர் ஐம்பதிற்கும் மேற்பட்ட குறு, சிறு, பெரும் நாடகங்களைப் படைத்து இயக்கியவர். பல்வேறு பொறுப்பேற்று நடிக்கும் திறனாளர்.

வில்லுப்பாட்டிலும், கதைப்பாட்டிலும் பயிற்சியுடையவர். ஆழிப் பேரலை வருத்திய காலத்தில் உருவான, இவரது, தொண்டு மனத்தால் ஒன்று படுவோம் என்ற மனிதப் பொம்மலாட்ட நாடகம் பெருமைக்குரியது.

இவரின் நாடகப் படைப்பாகிய, ‘விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார்’ பெருமைக்குரிய நாடகமாகும். இது படித்தற்கும், நடித்தற்கும் சுவையைத் தரக்கூடிய நாடகமாம். இந்நாடகத்தைக் களமாகக் கொண்டு விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனாரின் தமிழியற் பண்புகளை இவண் தொகுத்துள்ளார்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வ.உ.சி.யின் பிறப்பும் பண்பும் | 1 |
| 2. | வ.உ.சி.யின் நாடக மாண்பு | 20 |
| 3. | விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் நாடகம் | 75 |
| | பின் இணைப்பு-1 | *164* |
| | பின் இணைப்பு-2 | *166* |

# 1. வ.உ.சி.யின் பிறப்பும் பண்பும்

## 01. முன்னுரை

அன்னைத் தமிழுக்கும், அவைநிறை சான்றோர்க்கும் அருமைத் தமிழால் வணக்கம் கூறித் தொடங்குவேன்.

'தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவர் இருப்பதால் (உண்மையால்) இவ்வுலகம் நிலைபெற்று உள்ளது' என்பது தமிழ் மன்னனும் புறநூனூற்றுப் புலவனுமான 'கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின்' தெரிந்து தெளிந்த கூற்றாகும்.

'தோன்றின் புகழொடு தோன்றுக.' என்றான் வள்ளுவன். தன்னலம் பாராது பிறர்நலம் பேணி, நாட்டு விடுதலையைத் தனது மூச்சாகக் கொண்டு, புகழ் தோற்றி நின்ற பெருமகனே செக்கிழுத்த செம்மல், விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சி. என்று அழைக்கப்படும் வ.உ.சிதம்பரனார் ஆவார்.

இவர் மாந்தப் பண்பென்னும் தமிழியற் பண்புகளில் தலைசிறந்து விளங்கினார். அவர்தம் தமிழியற் பண்புகளை விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சி என்னும் நாடக வழியும், நற்பெரும் சான்றோரின் பதிவுகள் வழியும் விளக்குவதே இவ் வரலாற்றுப் பொழிவின் முதன்மை நோக்கமாம்.

நல்லாரைக் காண்பதும், நல்லார் சொல் கேட்பதும் நல்லார் குணங்கள் உரைப்பதும், அவரோடு இயைந்து (இணங்கி) இருப்பதும் நன்மையைத் தரும் என்பதால் நல்லார் வ.உ.சி.யின் வரலாறு கண்டு, நன்மொழி கேட்டு, நல்ல தமிழியற் பண்புகளைக் கொண்டு, அவர்தம் இயல் வாழ்வை நோக்கப் புகுவோம்.

## 02. குடிப்பிறப்பும் கல்வியும்

தமிழர் தந்தை யென்று போற்றப்படும் வ.உ.சி. திருநெல்வேலி மாவட்டத்து ஒட்டபிடாரம் என்ற நல்லூரில் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டு, செப்டம்பர்த் திங்கள் ஐந்தாம் நாள் (05-09-1872) வழக்குரைஞர் உலகநாதன்பிள்ளைக்கும், பரமாயி அன்னைக்கும் மகனாகப் பிறந்தார்.

தம்மில் தம்மக்கள் அறிவுடையர் என்ற ஆக்கம் விழைந்த தந்தையின் எண்ணப்படி கல்வி கற்கப் புகுந்தார்.

ஒட்டப்பிடாரம் வீரபெருமான் அண்ணாவியாரிடம் திண்ணைப்பள்ளிக் கல்வியைத் தொடங்கி, உள்ளூரில் தந்தை ஏற்படுத்திய ஆங்கிலப் பள்ளியில் தொடக்கக் கல்வி கற்று, தமது பதினான்காம் அகவையில் தூத்துக்குடி புனித பிரான்சிசு சேவியர் உயர்நிலைப்பள்ளியில் கல்வி முடித்து, திருநெல்வேலி இந்துக் கல்லூரி மற்றும் கால்டுவெல் கல்லூரியில் மெட்ரிக்கில் சிறந்தார். தந்தையின் வழிகாட்டலில் திருச்சிராப்பள்ளி கணபதியார், அரிகரரிடம் பயின்று வழக்குரைஞர்க்கான தேர்வெழுதி 1894 - இல் வெற்றி பெற்றார்.

வ.உ.சி. இளமையில் கல்லென்ற ஒளவை மொழிக்கு - தமிழியற் பண்பிற்கு - எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து, கற்பன கசடற கற்றுத் தேர்ந்தார்.

### 03. துறவுச் சிந்தனையில் வ.உ.சி.

உறவோர் தந்த கசப்பினால் இல்லம் துறந்து (விவேகானந்தர் போல) துறவியாகப் புறப்பட்டார். மதுரையில் இருக்கும் பொழுது தந்தையால் திருப்பி அழைத்து வரப்பட்டு இல்லற ஒழுக்க நெறி கொண்டார்.

**நினைத்தேன் துறவினை, நீக்கினேன் சிகையினை,**
**புனைந்தேன் கௌபீனம், பொன்னென நடந்தேன்,**
**நன்னினேன் மதுரையை, நாளிரண்டுக் குள்ளே**
**எண்ணினேன் துறவினை இடையில் துறந்திட....**

என்று இதனை அவர்தம் வரலாற்றுப் பதிவில் பதித்துள்ளார்.

(விவேகானந்தர்போல, தாயுமானவர்போல இளந்துறவு கொள்ள நினைத்தாலும்; இல்லறமே அவரை நாடி இழுத்தது.)

### 04. இல்லறச் சீர் ஒழுக்கம்

மங்கலம் என்பது மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. (குறள். 60)

என்பது திருவள்ளுவரின் திருவாக்கு. 1895ஆம் ஆண்டு திருச்செந்தூர் சுப்பிரமணியர்த் திருமகள் வள்ளியம்மையை மணம் புரிந்தார். ஆறாண்டுகள் இனிய இல்லறம் நடத்திய வள்ளியம்மை தமது தலைப்பேற்றில் உயிர் துறந்தார்.

குடும்பத்தார் வலியுறுத்தலில் வள்ளியம்மைக் குடும்பத்தைச் சார்ந்த ஆழ்வார் திருநகரி பாப்பு என்று அழைக்கப்படும் ஞானதேசிகனார் திருமகள் மீனாட்சியைத் திருமணம் கொண்டு இல்லறச்சீரை மீண்டும் தொடங்கினார்.

இல்லறச்சீரின் நன்மக்கட் செல்வமாய் உலகநாதன், ஆறுமுகம், ஞானாம்பிகை என்ற ஞானவல்லி, வேதவல்லி, ஆனந்தவல்லி, சுப்பிரமணியம், வாலேசுவரன் எனும் திருமக்களைப் பெற்றுத் திகழ்ந்தார்.

அரசிறை கொடுத்தல், ஆணைவழி நிற்றல், ஒழுக்கம், ஒற்றுமைக்கோடல், கைக்கடன் ஆற்றல், சுற்றம் பேணல், மனத்துக்கண் மாசிலாமை, முயற்சி, மாண்புறு செயல்களைத் தேடியாற்றல், விருந்தோம்பல் முதலான தமிழ்க் குலப் பண்புகள் சாலப் பெற்றவராய், இல்லற நல்லறம் ஏற்றுத் திகழ்ந்தார்.

இல்லறம் உணர்ந்த இயலொழுக்கச் செம்மலராக வ.உ.சி. திகழ்ந்தார்.

(வ.உ.சி.யின் இல்லறச் சிறப்பு மூன்றாம் காட்சியில் தெள்ளிதின் விளக்கப்பட்டுள்ளது.)

### 05. வாய்மையர், தூய்மையர், நடுநிலையாளர்

வள்ளுவர் தாம் மெய்யாகக் கண்டவற்றுள் தலை சிறந்ததாக வாய்மையைச் சொல்லுவார். தன்னெஞ்சிற்குச் சிறப்பெனப் பட்டதை (தன்னெஞ்சு அறிவதை)ப் பொய்யாது செய்து வாழ்ந்த சிறப்பிற்கு உரியவர் வ.உ.சி. ஆவார்.

இவர் தமது வாழ்வில் தவறுகளோடு ஒருபோதும் சமரசம் செய்து கொண்டவர் அல்லர். ‘தூய மனத்தோர் பேறு பெற்றோர்’ (திருவிவிலியம்) என்பதற்கு ஒப்பாக வாழ்ந்தவர். புறத்தூய்மையோடு அகத்தூய்மை உள்ள உள்ளத்தார். மனத்துக்கண் மாசிலாமையை அறமாகக் கொண்ட தூயவர்.

நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்பதில் நிலைத்து நின்றவர். ஏழை, எளியர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் பாராது நீதியை நிதிக்கு ஆக்காத செம்மையர்.

தவறு இழைத்த நீதியரசர், அரசு அலுவலர்மீது வழக்கு தொடுத்து நடுநிலைமை நிலைநாட்டியுவர். தமக்கு அவரால் தீங்கு வருமென்று அறிந்தும் சான்றாண்மையின் ஐந்து தூண்களில் ஒன்றாகிய வாய்மை தவறாத தூய நடு நிலையராகத் திகழ்ந்தவர்.

சிறையில் சிறைக்காவலர் செய்த தவறுகளை எடுத்துக் கூறியவர். அதற்காகத் தண்டனை கூடியபோதும் அஞ்சாது நடுநின்றவர்.

(காட்சிகள் தோறும் வ.உ.சி.யின் வாய்மை, தூய்மை, நடுநிலைக் கூறுகளை நாடக மாந்தர்வழி நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன)

### 06. அழுக்காறும் அவாவும் கொள்ளா அன்பர்

வ.உ.சி. அழுக்காறு என்னும் பொறாமையும், அவா என்னும் ஆசையையும் அறவே துறந்தவர்.

ஆங்கிலக் கப்பல் கம்பெனியார் வ.உ.சியிடம் சுதேசி கப்பல் ஓட்டாது விலகிக் கொள்ள வேண்டி, கொடுத்த பல நூறாயிரங்களைத் தூசென உதறித் தள்ளியவர். ஆசை நீங்கிய அறத்தின் காவலராகவே திகழ்ந்துள்ளார்.

தன்னைச் சார்ந்தவரின் தவறுகளைப் பொறுக்காதவராக இருந்தாலும், அவர் பிறர் வளர்ச்சி கண்டு பொறாதவராக ஒருபோதும் இருந்ததில்லை.

இப் பண்பே இவரோடு பாரதி, சுப்பிரமணிய சிவா முதலானோரை இணைத்தது எனலாம்.

(வ.உ.சி. யின் அழுக்காறாமையை, அவா கொள்ளாத செம்மாந்தப் பண்புகள் இவண் நாடகத்துள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. பட்டம், பதவி, பணம் இவற்றிற்காக எக்காலத்தும் அடிபணியாதவர் என்பது நாடகத்துள் விளக்கப்பட்டுள்ளது)

### 07. சால்புத் தூண் அமைந்த சான்றோர்

வள்ளுவம் சால்பின் தூண்களாக அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையைக் கூறும். இப் பண்புகளில் உயர்ந்தவர் வ.உ.சி..

வ.உ.சி. என்பும் உரியவர் பிறர்க்கு என்பதற்கு ஒப்ப அன்பு பூண்டு ஒழுகியவர். எல்லோர் மாட்டும் அன்பு மிகுந்தவர். தம்மனை, மக்கள், ஏழை, எளியோர், நண்பர், அன்பர், சுற்றம், மற்றோர் எல்லோரிடமும் அன்பின் தோன்றலாகவே விளங்கியுள்ளார்.

அந்நியரால் இந்தியத் தாய்த்திரு நாட்டு மக்கள் விலங்கினும் கீழாக நடத்தப்படுவது கண்டு, அவர்பால்

அன்புகொண்டு, பேருதவிகளைச் செய்தவர். அடைக்கும் தாழ் இல்லா அன்பினர்.

இதேபோல அஞ்சுவன அஞ்சி வாழ்ந்த நாணச் சீலர்.

கண்ணுக்கு அழகாகும் கண்ணோட்டம் என்னும் இரக்க குணமும், பிறர்க்கு உதவும் ஒப்புரவும் விஞ்ச விளங்கப் பெற்றவர்.

கோரல் மில் தொழிலாளர் உண்ண உணவின்றி வாடுகையில் கண்ணோட்டம் கொண்டு ஒப்புரவு காட்டி வன்பசியை ஓட்டிய வளமைச் சான்றோர்.

மக்கள்பால் அன்பு கொண்டும்; அஞ்சுவன (பழிக்குரியன) அஞ்சும் நாணம் கொண்டும்; ஏழைக்கு உதவும் ஒப்புரவு கொண்டும்; கண்ணோட்டம் மிக்கக் காவலராகவும்; வாய்மை நிலை நாட்டிய வள்ளலாகவும் திகழ்ந்து சால்பின் சால்புணர்ந்து வாழ்ந்து, சான்றாக விளங்கியவர் வ.உ.சி..

*(வ.உ.சி.யின் சால்புப் பண்புகள் நாடகக் காட்சிகளில் விளக்கப்பட்டுள்ளன.)*

### 08. பிறப்பொக்கும் என்றுணர்ந்த பேரறிவாளர்

**யாதும் ஊரே! யாவரும் கேளிர்!**

என்றார் கணியன் பூங்குன்றனார்,

**பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்**

என்றார் பேரறிவின் ஞான வள்ளுவர்,

**சாதிகள் இல்லையடி பாப்பா - குலம்**
**தாழ்த்தி இகழ்ச்சி சொல்லல் பாவம்**

என்றார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார்.

**தீண்டாமை பாவச் செயல்!**
**தீண்டாமை பெருங் குற்றம்!**
**தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்!**

என்றார் மனிதகுலச் செம்மல் மகாத்துமா காந்தியண்ணல்.

இவை உணர்ந்தவர் வ.உ.சி.. கண்கள் தெரியாத தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த இராமையா தேசிகர் என்பவரைத் தமது இல்லில் வைத்துக் காத்தார்.

ஊரவர், இனத்தவர் ஏச்சும் பேச்சும் எண்ணாது அவர்க்கு உதவியவர் வ.உ.சி.. இவர்தம் மனைவி வள்ளியம்மை ஒருபடி மேலவராய் உணவைப் பிசைந்து அவர் கையில் இட்டு உண்ணச் செய்த உயர்ந்த பண்பினார்.

**சிவத்தை உணர்ந்த தேசிகன் ஒருவன்என்**
**தவத்தால் என்னில்லம் தங்க பெற்றேன்.**
**ஊனக் கண்ணினை ஒழித்தவன் நின்றதால்**
**தானக் குறையினைத் தவிர்த்திட ஊட்டினாள்**

என வள்ளியம்மையின் செயற்பாட்டை வளர்தமிழ் வரலாறாக வ.உ.சி. வடித்துள்ள வரலாற்றில் காணமுடிகிறது.

வ.உ.சி.யிடம் சுப்பிரமணிய சிவம், சகசானந்தர் முதலான துறவியரைப் போற்றும் பண்பு நிறைந்தே இருந்துள்ளது.

**துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்**
**மற்றை யவர்கள் தவம் (குறள். 263)**

என்பதையும்,

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை. (குறள். 42)**

என்பதையும் மறவா வ.உ.சி. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ (குறள்-246) என்பதை உணர்ந்து ஏற்றத் தாழ்வுகளின்றி தொண்டாற்றியுள்ளார்.

‘உடுக்கை இழந்தவன் கைபோல’ (குறள். 197) இடுக்கண் களைந்த செம்மலாக இவர் திகழ்ந்துள்ளார்.

### 09. பெண்ணடிமை கொள்ளாப் பேராளர்

பெண்ணடிமை தீருமட்டும்
பேசும்திரு நாட்டிலே
மண்ணடிமை தீருவது
முயற்கொம்பே

என்பது புரட்சிக் கவிஞன் உளம் பூத்த கொள்கையாம்.

**நல்லில்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றும் உண்டோ?**

தாழ்த்தப்பட்ட கண்தெரியாத இராமையாவிற்கு உணவூட்டிய வள்ளியம்மையை முன்னர்க் கண்டோம். மேலும் அவர் ஊரும் இனமும் எதிர்க்கும் வேளை ஊரையும், இனத்தையும் துச்சமெனக் கருதி,

*கற்பனை யாகக் காணும் குலத்தின்*
*சொற்பிழை கொளல்*

எனச் சொல்லி,

*துறந்தவர் தம்மையும் தொடுமோ குலம்! இவண்*
*மறந்தம் மொழியினை மதியா(து) ஒழிப்போம்*
*.........................................................................*
*பழமை பாராட்டிப் பகுத்துப் பிரித்தல்*
*நன்றோ நல்லோய்! நவிலுவார் நவிலுக!*

(வள்ளியம்மை சரிதம்)

என்று கூறிய வள்ளியம்மை கொண்ட கருத்திற்கு இசைவும் புகழும் தந்த பெருமையார் வ.உ.சி..

'கணவன் உண்ட எச்சில் இலையில்தான் மனைவி உண்ண வேண்டும்' என்ற மடமையை ஒழித்தார்.

மீனாட்சியிடம் இல்லறப் பொறுப்புக்கள் முழுவதும் அளித்தவர் வ.உ.சி.. நாட்டுப் பொறுப்பிலும்,. வீட்டுப் பொறுப்பிலும் பெண்ணுக்கு முன்னுரிமை தந்து உயர்த்தியவர் வ.உ.சி..

அடக்கம் இருபாலருக்கும் பொது. ஆனால் பெண்ணடிமை ஆகாதென இவர் மொழிவார். பெண்ணடிமையே நாட்டடிமைக்குக் காரணம் என்று உணர்ந்திருந்தார்.

பெண்டிர் அடிமைச் சிந்தனை நீக்கி, புரட்சிச் சிந்தனையுடன் செயல்பட விரும்புபவர் வ.உ.சி..

(இவர்தம் பெண்ணடிமை இல்லாப் பெருமையைக் காட்சி மூன்றிலே தெளிவுபடுத்தியுள்ளேன்.)

### 10. நாட்டுப் பற்று கொண்ட அக்கினிக் குஞ்சு

*பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்*
*பாரத நாடு*

என்று பாடினர்ர் பாரதியார்.

இந்நாடு எந்தையும் தாயும் மகிழ்ந்து வாழ்ந்தது; அவர்தம் முன்னோர் ஆயிரம் ஆயிரம் (கோடி) ஆண்டுகள் வாழ்ந்து நிறைந்தது; அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் வளர்த்த சிறப்பை உடையது; என்றாலும் தாழ்வுற்று வறுமை மிஞ்சி,

விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்றது. அவ்வேளை பாரதம் காக்கும் நாட்டுப் பற்றாளராக - விடி வெள்ளியாகத் - தோன்றியவர், பாரதி கண்ட அக்கினிக் குஞ்சென்னும் மாவீரர் வ.உ.சி..

நாட்டில் எங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய் - கனல் - மூட்டினாய்
வாட்டி உன்னை மடக்கிச் சிறையில்
மாட்டுவேன் - வலி - காட்டுவேன்

என்ற வெள்ளை அரசிற்கு எதிராக,

சொந்த நாட்டினில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் - இனி - அஞ்சிடோம்
எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம் பார்க்குமோ?

என்று முழக்கிட்டவர் வ.உ.சி..

சுட்டு வீழ்த்திக் குத்திக் கொல்லுவேன்...

தட்டிப் பேசுவோரைச் சிறையில் தள்ளுவேன்...

என்றபோதும்,

சதையைத் துண்டுதுண்டு ஆக்கினும் என்எண்ணம்
சாயுமோ? - சீவன் - ஓயுமோ?

என்று எதிர்க்குரல் கொடுத்தவர் வ.உ.சி..

அடக்கு முறைகளுக்கு அஞ்சாத
புல்லடி மைத்தொழில் பேணிப் - பண்டு
போயின நாட்களுக்கு, இனிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர - இந்தத்
தொண்டு நிலமையைத் தூவென்று தள்ளி...

வந்தே மாதரம் என்னும் நெருப்புத் துண்டாக, அஞ்சாது வீர வலம் வந்தவர் வ.உ.சி. ஆவார்.

நாமிருக்கும் நாடு நமதென்ப தறிவோம் - இது
நமக்கே உரிமையாம் என்ப தறிவோம்
பூமியில் எவர்க்குமிங்கு அடிமை செய்யோம்...

என்ற பாவிற்கு நல்லெடுத்துக் காட்டாக வ.உ.சி. விளங்கினார்.

அடி மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்

என்ற பாவடிகளைத் தனது மனங்கொண்டு புதுப்பாதை அமைத்துக் காட்டியவர் வ.உ.சி..

வணிகம் செய்து நம்மை அடிமைப்படுத்திய அந்நியர்க்கு வாணிகமே சிறந்த எதிர் மருந்தெனக் கண்டறிந்தவர் வ.உ.சி.. சுதேசி பண்டகச் சாலை அமைத்து விதேசிகளை வெருளச் செய்தார்.

வடவையர் நாட்டுப் பற்றுக்குத் தமிழர் நாட்டுப்பற்று 'துமியளவு' கூட, குறைந்தது இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக வ.உ.சி.விளங்கினார்.

நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் இல்லார் செய்த வஞ்சனை பொறுத்து, வீரம் தளராத வேந்தராகவே வ.உ.சி. விளங்கினார்.

இந்த அக்கினிக் குஞ்சு ஏற்றிய கனல் வெள்ளை அரசாட்சியைச் சுட்டது.

(வ.உ.சி.யின் வீரச் செயற்பாடுகள் இந்நாடகம் முழுவதும் காட்டப்பட்டுள்ளது.)

***11. நன்றி மறவா நன்னெஞ்சர்***

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு** **(குறள் - 110)**

என்பதனையும்;

**நன்றி மறப்பது நன்றன்று** (குறள்-35) என்பதனையும் மறவாத நற்சீலர் வ.உ.சி..

இவர் நன்றி மறவாச் செயல்களுக்கு ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதமாகக் கொண்டு அவர்தம் மக்களுக்கிட்ட பெயர் வழி காண இயலுகின்றது.

தம் எண்(எட்டு) மக்களுள் பலருக்குச் சூட்டப் பெற்ற பெயர்கள் நன்றியின் வெளிப்பாடாகவே அமைந்தன.

தம் மூத்த மகன் உலகநாதனுக்குத் தம் தந்தையின் பெயர் வைத்து குடும்ப மரபையும், நன்றியையும் போற்றியுள்ளார்.

அடுத்த மகன் ஆறுமுகனார். தமக்கு உதவி செய்த அன்பு நண்பர் சி.த.ஆறுமுகனார் பெயர் சூட்டி நன்றியைக் காட்டியுள்ளார்.

அடுத்த மகள் ஞானாம்பிகையார், கோவை பேரூரில் பிறந்தவர். பேரூர் இறைவியின் பெயரைச் சூட்டி இறை நன்றியைக் காட்டியுள்ளார்.

அடுத்து வேதவள்ளி ஆவார். ஆப்பிரிக்க நாட்டில் வாழ்ந்த தில்லையாடி திருமிகு வேதியப்பிள்ளை (வறுமை காலத்துள் வாட்டம் போக்க பேருதவியாக இருந்தவர்). வள்ளாளர்பால் கொண்ட நன்றியால் இப் பெயரைச் சூட்டினார்.

ஐந்தாம் மகளார் ஆனந்தவள்ளியார். ஆறாம் மகளார் மரகதவல்லியார் இருவருக்கும் நன்றி கருதியே பெயர் சூட்டப் பட்டிருக்கவேண்டும் (காரணம் கிடைத்தில.).

ஏழாம் மகனார் சுப்பிரமணியனார். சிறைப்பட்ட காலத்தில் சீர் குடும்பம் காத்த சேக்கிழார் தொண்டர், கோவைக்கிழார் சி.கே.பாலசுப்பிரமணியனார்பால் கொண்ட நன்றியின் சிறப்பாலே இவர்க்குச் சூட்டி மகிழ்ந்தார்.

எட்டாம்மகனார் வாலேசுரனார் வெள்ளையர் உள்ளத்தும் சில நல்ல உள்ளங்கள் இருந்துள்ளன. சிறை விடுதலைக்கும் பிறகு தமது வழக்குரைஞர் உரிமம் பெற உதவிய நீதியரசர் 'வாலேசு'-இன் பெயரைச் சூட்டி தமது நன்றியைக் காட்டியுள்ளார்.

(இந்நாடகம் சிறை விடுதலையுடன் நிறைவதால் இந்நன்றிச் சீரை இந்நாடகத்துள் வழங்க வழியில்லை. ஆதலால் அவர்தம் நன்றிப் பண்பை - தமிழர்ப் பண்பை - இவண் விளக்கியுள்ளேன்.)

## *12. வீரமும் வீரச் செயல்பாடுகளும்*

இம் மென்றால் சிறையும் ஏனென்றால் நாடுகடத்தலும் பல்கி விளையாடிய வெள்ளையர் ஆட்சியுள், வீறுகொண்டு எழுந்த கட்டபொம்மனாக, பூழித் தேவனாக, மருது பாண்டியராக, தீரன்சின்னமலையாக, திலகராக வீறுகொண்டு எழுந்த தீரச் செம்மலே வ.உ.சி..

வ.உ.சி. அடக்குமுறைக்கு அஞ்சாத வீரராக 'விபின் சந்திரபால்' விடுதலையைக் கொண்டாடிய வீரர். நாட்டடிமையைத் தகர்த்தெறியும் வீரராகத் தீரமுடம் போராடியவர் வ.உ.சி..

**கொண்ட மடையால் வடிப்பதுபோல';**
**கொதி அடங்க தீயை அவிப்பது போல;**
**முள்ளை முள்ளால் எடுப்பது போல;**

வணிகத்தால் ஆட்சிகொண்ட வெள்ளையரை வணிகத்தால் இறக்க முற்பட்டார். அஞ்சல், தொடர்வண்டி, கப்பல் துறையில் கைவைத்தால் அந்நியம் அழியும் என்று போராடியவர்.

உலகில் எந்தவொரு விடுதலைப் போராட்ட வீரனுக்கும் கிடைக்காத நாற்பது (40) ஆண்டு கடுஞ்சிறை பெற்றும் கலங்காத வீரமும், கவலாத தீரமும் வ.உ.சி. யிடம் மட்டுமே காணப்பட்டன.

ஆதிக்க வெறியர்க்கு அஞ்சாமல், சாதித்துக் காட்டிய வீரச் சான்றோராம் வ.உ.சி.,

**வெள்ளிப்பனி மலையின் மீதுலாவுவோம் - அடி**
**மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்**

என்ற பாரதியின் பாவடிகளுக்கு இணங்க, தூத்துக்குடியில் கப்பல் விட்ட போது ஆங்கில ஆட்சியின் சூழ்ச்சிக்கும் சூதிற்கும் பலியாகி சூசன் கப்பல் நிறுத்தப்பட, இலங்கையில் இருந்து வேறு கப்பல் கொண்டுவர அதுவும் வீணாக, சொந்தக் கப்பலை ஒன்றிற்கு இரண்டாகப் பிரான்சிலிருந்து சுதேசிக் கப்பலாகக் கொண்டுவந்த பெருமை அவரையே சாரும்.

'வந்தால் கப்பலுடன் வருவேன் இல்லையேல் வங்கக் கடலுள் வீழ்ந்து மாய்வேன்' என்ற கொள்கை வீரத்தோடு சென்றவர். மனைவி நோயுற்றும், மகன் நோயுற்று இறந்தபோதும் தாமேற்ற செயல் முடித்த தீரரே சிதம்பரம்.

**மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி**
**அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார்**
**கருமமே கண்ணா யினார்** (நீதி நெறி விளக்கம் -53)

என்ற வெண்பாவின் எடுத்துக்காட்டாக விளங்கியவர் விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சி. யே ஆவார்.

வெள்ளையனை எதிர்த்த அவர் தமது வீரமும்; அவர் தமது செயல்பாடும் இன்றும் நம்மை வியக்க வைக்கிறது.

*(வ.உ.சி.யின் வீரச் செயல்கள் பல காட்சிகளில் விளக்கப்பட்டுள்ளன.)*

### *13. மது எதிர்ப்பில் நிறை மனத்தார்*

வ.உ.சி. முழு மதுவிலக்கை விரும்பியவர். வெள்ளையர் ஆதிக்கம் பெறவும், பாரதச்செல்வத்தார் மாண்புகள் அழியவும் மதுவே காரணம் என்று எண்ணியவர் வ.உ.சி..

காய்ச்சும் மதுவை மட்டுமன்று, இறக்கும் கள்ளையும் எதிர்த்தவர் இவர்.

வள்ளுவர் கள்ளுண்ணலைப் பெருங்குற்றம் (குறள் - 924) என்றும்,

**உண்ணற்க கள்ளை** (குறள். 922) என்றும்,

**கள்ளுண்பவன் நஞ்சுண்பவன்** (குறள். 926) என்றும்,

**எல்லாத் துன்பங்களையும் பொறுக்கும் தாயின் முகத்தில் இன்னாதன தோற்றுவிக்கும் கள்** (குறள். 923) என்றும்; பகர்வார். கள்ளின் இழிவை முழுவதும் போக்கக் கருதியவர் வ.உ.சி..

கோவையில் வாழ்கின்றபொழுது ஒற்றை மாட்டு வண்டியில் ஏற்றிவரப்பட்ட கட்பானைகளை, தன் மகன் ஆறுமுகனை அழைத்து, கையில் கல்லைக் கொடுத்து உடைக்கக் சொன்னவர். முழு மதுவிலக்கை விரும்பியவர். கள்ளுண்ணலின் கேட்டைத் தமது மெய்யறிவு நூலில்,

**கள்ளுண்ணக் காசளித்தல், கள்விற்றல், கள்ளாக்கல்,**
**கள்ளுண்ணும் தீயரைக் காதலித்தல், - உள்ளறிவை**
**மாய்க்குமதன் தன்மையுள மற்றவற்றை**
**உட்கொள்ளத்**
**தாய்க்குமடும் கள்ளருந்தல் தான்** (மெய்யறிவு. 54)

எனச் சாடியுள்ளார்.

(வ.உ.சி. மது எதிர்ப்புச் சிந்தனையாளர் என்பதனைக் காட்சி - 2 மற்றும் காட்சி - 3இல் குறிப்பாய்ச் சுட்டியுள்ளேன்.).

**14. கூட்டுறவில் நாட்டுயர்வு கண்டவர்**

பாரதம் தாழ்வுற்றுக் கிடந்த காலத்தில், ஒற்றுமை ஒழித்து மக்கள் அஞ்சி அஞ்சி நின்ற காலத்தில், விடிவெள்ளியாய்த் தோன்றியவரே வ.உ.சி..

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில்**
**ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வே.**
**நன்றிவை தேர்ந்திடல் வேண்டும் - இந்த**
**ஞானம் வந்தால் பின்பு நமக்கெது வேண்டும்**
(பாரதியார் பாடல்கள்)

என்பதனை உள்வாங்கி நாட்டுயர்வுக்குக் கூட்டுறவே சிறந்ததென்று செயல்பட்டார்.

நெல்லையில் தேசாபிமானச் சங்கம் நிறுவுவதற்கும், இரயில்வே தொழிலாளர்ச் சங்கம் தோன்றுவதற்கும், சென்னையில் பல சங்கங்கள் தோன்றுவதற்கும் வ.உ.சி. யே காரணம் எனலாம்.

தூத்துக்குடி சுதேசிக்கப்பல் குழுமத்திற்கு முதலீட்டாளர் ஏழையாரே. ஏழையர்க்கு ஏற்ற சிறு சிறு பங்குகளாக்கி ஏழையரைப் பங்கு பெறவைத்து, கூட்டுறவை நாட்டுயர்வுக்கும் கொண்டு வந்தவர் வ.உ.சி. யே ஆவார். எங்கெல்லாம் பாரத மக்கள் துன்புற்றனரோ அங்கங்கெல்லாம் தோன்றி விடிவு ஏற்படுத்திய வீர வேந்தரே வ.உ.சி..

*(காலச் சோதனைகள் வந்தாலும் நாட்டுயர்வை மறவாத செம்மல் வ.உ.சி.யின் கூட்றவுக் கொள்கை இந்நாடகத்துள் 'கோரல் மில் தொழிலாளர்' வழியும், சுதேசிக் கப்பல் முதலீட்டின் வழியும் நிலை நாட்டப்பட்டுள்ளது.)*

### *15. தமிழ்த் தொண்டர் வ.உ.சி.*

வ.உ.சி.யின் விடுதலைச் சிந்தனையை எண்ணும் நாம், அதற்குச் சிறிதும் குறைவில்லாத வ.உ.சி.யின் தமிழ்த் தொண்டையும் எண்ணிப் பார்ப்பது கடமையாகும்.

உலகப்பொது மறையாம் 'திருக்குறளுக்கு' மணக்குடவர் உரையை அடியொற்றி விருத்தியுரை வழங்கியுள்ளார். பரிமேலழகர் உரையின் 76 குறட்பாக்களின் இடர்ப்பாடுகளையும், 74 பாட பேதங்களையும் சுட்டிக்காட்டிய பெருமைக்குள்ளவராக உள்ளார்.

தொல்காப்பியத்தில் ஆர்வம் கொண்ட வ.உ.சி. அதற்கு உரை வழங்க எண்ணியபோது இளம்பூரணர் உரையின் இனிமையும், அருமையும், எளிமையும் கண்டு தாம் உரை எழுதுவதை நீக்கி முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போலப் போற்றினார். எழுத்ததிகாரம் முழுமையும் பதிப்பித்துப் பதிப்பாசிரியராகத் திகழ்ந்தார்.

நாலடி, மூதுரை, நன்னெறி போல 'மெய்யறிவு' என்னும் இலக்கியத்தை நேரிசை வெண்பாவில் படைத்துரைத்தார். கண்ணனூர்ச் சிறையில் கைதிகளுக்காக எழுதத் தொடங்கிய அறச் சிந்தனைகளை 'மெய்யறிவு' என்ற அற இலக்கியமாய் மலர்வித்தார்.

வ.உ.சி. மொழிபெயர்ப்புக் கலையிலும் மீச்சிறந்தவர். பாரதியின் கனவுகளில் ஒன்று பன்னாட்டுக் கலைகளைத் தன்னாட்டுத் தாய்மொழித் தமிழுள் கொண்டு வருதலாம்.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்
(பாரதியார் பாடல்)

என்றார் பாரதி. இப்பா விழைவைச் செயலில் காட்டியவர் வ.உ.சி..

சேம்சு ஆலனின் ஆங்கில நூலை 'மனம் போல வாழ்வு' என்று மொழி பெயர்த்தார். இந்நூல் கோவைச் சிறையின் கொடுமைகளுக்கு இடையே படைக்கப்பட்ட அரிய நூலாகும். 'இந் நூலைப் படைப்பதற்காகவே இறைவன் தன்னைச் சிறைக்கு அனுப்பினானோ?' என்று அவரே எண்ணும் சிறப்பினை உடையது.

எளிமையிலிருந்து வலிமை (From Poverty to Power) என்ற சேம்சு ஆலனின் இரண்டாம் தொகுதியாகிய 'அமைதிக்கு வழி' என்னும் நூலைச் 'சாந்திக்கு மார்க்கம்' என்றும் பேரின்ப மார்க்கமென்றும்; ஊழை வெல்லுதற்கு உபாயம் என்றும்; வலிமைக்கு மார்க்கமென்றும் மொழிபெயர்த்துச் சிறந்த மொழி பெயர்ப்பாளராகத் திகழ்ந்தார். தொடர்ந்து சேம்சு ஆலன் கருத்துகளைக் கூறும் 'அகமே புறம்' என்ற நூலையும் வெளியிட்டார். இவர் இந்நூலில்,

அறத்தைக் காணா அறிவே மரமாம்
அறத்தைப் பிழைத்த அறிவே மிருகம்
அறத்தைப் புரியும் அறிவே மனிதம்
அறத்தைக் காக்கும் அறிவே கடவுள் (அகமே புறம்)

என்ற அறச்சிந்தனையையும், மெய்ப்பொருள் நாட்டத்தையும் அள்ளி வழங்கியுள்ளார்.

மெய்யுணர்வு மேலோங்க மெய்யறம் என்ற நூலையும் யாத்து வெளியிட்டுள்ளார்.

தந்தைதாய் பேணல் முதலான நன்மையைப் போற்றி, மது, சூது முதலான தீமைகளைக் களையக் கூறுகின்றார். இந்நூலில் மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல், மெய்யியல் எனும் ஐஞ்சீர் இயலாகப் பகுத்துள்ளார், இந்நூலைத் திருக்குறளின் வழி நூலாகக் கருதலாம். (மெய்யறம், மெய்யறிவு எனும் இருநூல்களின்வழி வ.உ.சி. யின் பண்பு நலன்களைப் பின்னர் மேலும் விரிவாகக் காண்போம்.)

மெய்யறம் புகன்ற அவரே பன்னிரண்டு நூற்பாக்களில் திகழும் சிவஞான போதம் என்னும் சைவ சித்தாந்த நூலிற்கு உரைகண்டு தமிழுக்குத் தொண்டு செய்துள்ளார்.

வாழ்க்கை வரலாறு எழுதுதற்கு மிகப்பெரும் தூய்மையும், மெய்மையும், வலிமையும் வேண்டும். காந்தி போன்ற மிகச் சிலரே தமது வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளனர்.

தமது வாழ்க்கை வரலாற்றைத் தம் முதல் மனைவியின் ' சீர் விளங்க வள்ளியம்மை சரிதம்' என்ற வாழ்க்கை வரலாற்று நூலாய் அளித்து தாம் வாழ்வாங்கு வாழ்ந்த வரலாற்றைப் பாநடையில் விளக்கியுள்ளார்.

தாசுமகாலைக் கட்டிய சாசகானினும் தன் மனைவிக்கு இவர் கட்டிய இலக்கியக் கோயில் இது எனலாம்.

வ.உ.சி.யின் விடுதலைச் சிந்தனை அவர் வாழ்ந்த காலத்திலேயே கிளை ஒடிக்கப்பட்ட மரமாக, சிறகு ஒடிக்கப்பட்ட பறவையாக ஆகிப் போனாலும், அவர் மறைந்த பிறகு துளிர்விட்டு, மரமாகி, இன்று பெருமரமாகி அரும்நிழல் தருகிறது. ஆனால் வ.உ.சி.யின் தமிழ்ப்படைப்புகள் அவர் வாழ்ந்த காலத்தும் பெருமையும் புகழும் தந்தன; இன்று மறைந்த காலத்தும் பெருமையும் புகழும் கொடுத்துக் கொண்டே உள்ளன.

இதனால்தான் "தமிழுக்குத் தொண்டு செய்தார் சாவதில்லை" என்றனர் போலும்.

தமிழ் அன்னையின் சீர்பரவும் மகனாக வ.உ.சி. தமிழுக்குச் செய்துள்ள தொண்டுகளை விரிக்கின் அது ஒரு தனி நூலாகவே ஆகும். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். விவேக பானுவில் பல கட்டுரைகளை எழுதிய அறிஞர். அந்நூலின் வளர்ச்சிக்குத் திங்கள் தோறும் பொருள் வழங்கிய அருளாளர். இலக்கணம், இலக்கியம், சமய இலக்கியம் முதலான நூல்களுக்கு உரை கண்ட உரையாசிரியர். திருக்குறள், தொல்காப்பியம் வெளியிட்ட வெளியீட்டாளர். நல்ல மொழிபெயர்ப்பாளர். கவிதையில் கருத்துகளைக் கூறும் கவிஞர். மடல்களையும் கவிதையில் வழங்கியவர். சுமைமிகுந்த நாட்டுப்பணியோடு சுவை மிகுந்த இலக்கியப் பணி கண்ட பேராளர். மெய்ஞானம் கூறிய வேதாந்தி. மெய்ப்பொருள் கண்ட சித்தாந்தி. சிறையிலும், சிறை விடுதலைக்குப் பின்னும் இவரை அமைதியுற வாழவைத்தது தமிழே ஆகும்.

## *16.* சிறை கண்ட செம்மல் வ.உ.சி.

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட வ.உ.சி.க்கு அந்நிய அரசாலும், அதன் அடிவருடிகளாலும் கிடைத்த சிறை தண்டனை நாற்பதாண்டுகள் ஆகும். பொய் வழக்கு என்பதால் அது பின்னர் ஆறாகக் குறைந்தது. பாளையங்கோட்டை, கோயம்பத்தூர், கண்ணனூர்ச் சிறைகளில் அவர்பட்ட துன்பம் போல் விடுதலை வீரருள் எவரும் பெற்றிலர். கல்லுடைத்தும், செக்கிழுத்தும், சணல் கிழித்தும், நூல் முறுக்கேற்றியும், அச்சுக் கோர்த்தும், பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் வார்த்தும், ஏன் துப்புரவுப் பணிகூட செய்தும் துன்பப்பட்டார்.

**... சணல்பிழியச் சுற்றெனச்**
**சுற்றினேன்; என்கை தோலுரித்து இரத்தம்**
**கசிந்தது, என்னரும் கண்ணீரும் பெருகவே.**

*(சுயசரிதை ப. 116)*

தான்பட்ட துயரினை விளக்கியுள்ளார். எண்ணெய்ச் செக்கில் மாட்டிற்குப் பதிலாகப் பகலெல்லாம் பூட்டிய வெள்ளையரின் பண்பினை எள்ளி...

**.......... அவன் எண்ணெய்**
**ஆட்டும் செக்கினை மாட்டிற்குப் பதிலாகப்**
**பகலெல்லாம் வெயிலில் நடந்து தள்ளிட**
**அனுப்பினர், அவருடைய அன்புதான் என்னே?!**

*(சுயசரிதை, ப.117)*

மேலும் சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்ற முனைந்த மணிமேகலையைப்போல வ.உ.சி.யும் சிறைக்கூடத்தை அறிவுபகர் கூடமாக மாற்றியுள்ளார். சிறைக் கைதிகளுக்காகவே 'மெய்யறம், மெய்யறிவு' எனும் நூல்களை யாத்து நல்வழிப்படுத்தியுள்ளார்.

துன்புறுத்திய சிறை அலுவலரைக் கொல்லக் கருதிய கைதிகளைத் திருத்திக் காத்துள்ளார். மேல் அலுவலரிடம் சிறைக்குறையைச் சொல்லி கைதிகளைக் காத்துள்ளார். இதனால் பலமுறை வெள்ளையரால் உணவு அளவீடு (இரேசன்) குறைத்து வழங்கப்பட்டும் அஞ்சாது கைதிகளுக்காகப் போராடினார்.

சிறைவாழ்வில் நல்ல நூல்களைப் படித்தும், மொழிபெயர்ப்பு செய்தும் தமிழ்த் தொண்டு செய்துள்ளார்.

நாட்டு விடுதலைக்காகச் சிறைபட்ட வ.உ.சி. சிறைக்கோட்டத்தில் பல்வேறு இடையூறுகளுக்கு இடையே தொண்டும் செய்துள்ளார்.

### *17. சிறப்புடைய வழக்கறிஞர்*

பொய்மை வன்னெறியில் வெற்றியே குறிக்கோளாகக் கொண்ட வழக்கறிஞர் தொழிலில் காந்தியைப்போல மெய்மைச் சென்னெறியில் வெற்றி கண்டவர் வ.உ.சி..

நீதித்துறை, காவல் துறை எனப் பல்துறைகளில் புரையோடிய கையூட்டை (இலஞ்சத்தை) எதிர்த்து வழக்கு தொடுத்தவர். ஏழை எளியோர்க்காகப் பண முதலைகளைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி வெற்றி கண்டவர் வ.உ.சி.. நீதிக்காகத் தந்தையையும் வழக்கில் எதிர்கொண்டவர். ஆட்சி அதிகாரங்களைக் கண்டு அஞ்சாதவர். ஓட்டப்பிடாரத்தில் தொடங்கிய வழக்குரைஞர் தொழிலைத் தந்தையின் விருப்பத்தால் தூத்துக்குடியில் தொடங்கினார் (இக் கருத்தை முதற் காட்சியில் காணலாம்). ஒருபோதும் தவறுகளோடு சமாதானம் செய்துகொள்ளதவர். தரகு கொடுத்து வழக்குப் பணி செய்யாதவர். குலசேகரநல்லூர் ஆசாரி கொலை வழக்கில் வெற்றி பெற்று பெரும்புகழைச் சூடியவர்.

அஞ்சாது முரண்பட்ட பல்லோரிடம் கொண்ட முரணியம் பிற்காலத்தில் அவர்க்கு எதிரான 'சூழ்நிலையை' உருவாக்கி நாற்பது ஆண்டு தண்டனையைத் தந்தது என்பார். அஞ்சாநெஞ்சர் வ.உ.சி. அத்துன்பத்தையும் ஏற்று வெற்றிகண்டார். அந்நியராலும், அடாத மண்ணியராலும் பழிவாங்கப்பட்டு வழக்குரைஞர் தொழிலையும் இழந்தார். பின்னர் வாலேசின் உதவியால் மீண்டும் பெற்றார்.

### *18. தொழிலாளர்த் தலைவர் வ.உ.சி.*

வ.உ.சி. ஒரு சிறந்த தொழிளாலர் தலைவர் எனலாம். தொழிலார் நலனுக்காகப் பல சங்கங்களை நிறுவியவர். மக்களின் சமூகக் கல்வி மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவர். கோரல் மில் தொழிலாளர் போராட்டத்தில் தொழிலாளர்களை ஒருங்குதிரட்டிய தலைவர். சென்னையில் திரு.வி.க. வுடன் இணைந்து பல சங்கங்கள் உருவாகக் காரணமானவர். பஞ்சாலை ஊழியர்ச் சங்கம், அஞ்சல் ஊழியர்ச் சங்கம் உருவாக ஒத்துழைத்தவர். வறுமையில் வாடிய ஏழைத் தொழிலார்க்குப் பன்னாள் உணவிட்ட வள்ளலாம் தலைவர். இவரே தொழிலாளர்த் தலைவர்.

## 19. சிறை நாட்களில் வ.உ.சி.

வ.உ.சி.யின் சிறை நாட்கள் எண்ணிப் பார்க்கும் சிறப்பிற்கு உரியனவாம். வாணிகத்தால் வந்தானை ஓட்ட வாணிகமே சிறந்த வழியெனத் தேர்ந்து வெள்ளைக் கொள்ளை அரசிற்கு எதிராகக் கப்பல் விட்ட கப்பலோட்டிய தமிழன், 'தனது கைகளே தனது கண்களைக் குத்துவதுபோலத் தனது கூட்டாளிகளே தம்மைப் புறம் குத்தியது கண்டு மனம் ஒடிந்தவர். எவருக்கு எதிராகக் 'கப்பல்' விட்டாரோ அவரிடமே கப்பலை விற்றது கூட்டாளியரின் வஞ்சகம் ஆம்.நாட்டிற்காக எல்லாம் இழந்து, ஏன் கற்ற பட்டமாம் வழக்குரைஞர் தொழிலும் பறிக்கப்பட்டுப் பின் வழங்கப்பட்டு வாழ்ந்த காலமே இறுதிக் காலம். ஒழுக்கம், நேர்மை, விடாமுயற்சி, தியாகப் பண்புகளால் உயர்ந்த வ.உ.சி. சிறையில் பட்ட கொடுமையினும், வெளிப்பட்ட பின்பட்ட கொடுமைகளும் பெரியனவாம்.

உள்ளே செக்கிழுத்து இற்றார் வெளியே மண்ணெண்ணெய் வண்டி இழுத்து விற்றார். என்றபோதும் வறுமையில் செம்மை கொண்டே வாழ்ந்தார். பாரத அன்னைக்குச் செய்த தொண்டு பாதிக்கப்பட்டுப் போனாலும், தமிழ் அன்னைக்குச் செய்த தொண்டால் இன்னும் வாழுகின்றார். வாழும் முறைக்கும், நெறிக்கும் இலக்கியமாகவும் அதன் இலக்கணமாவும் திகழ்ந்தது இவர் வாழ்வெனில், இது மிகைச் சொல் அன்று. நாடு வாழ பெரும்பகுதியும், மொழி வாழ நிறை பகுதியும் வாழ்ந்து நிறைந்தவர் வ.உ.சி.. நோயுற்று நிறை நாளை உணர்ந்த வ.உ.சி. 'நான் மரணத்தை எண்ணிக் கலங்கவில்லை. நான் இறப்பதற்குமுன் எனது நாட்டு விடுதலையைக் காணக் கொடுத்துவைக்க வில்லையே' என்று வருந்தினார். பாரதியின் தேசியப் பாடல்களைக் கேட்டுக்கேட்டு உருகி 1936ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 18 ஆம் நாள் நள்ளிரவில் உயிர் துறந்தார். அயராது உழைத்த வ.உ.சி. அமைதியடைந்த அந்நாள் மறக்கற்பாலதன்று.

## 20. குடும்பச் செவ்வியர் வ.உ.சி.

வீட்டிற்காக(வீடுபேற்றிற்காக) வீட்டைத் துறந்தவர் துறவியர்; சுப்ரமணிய சிவா போன்று நாட்டிற்காக வீட்டைத் துறந்தவரும் உண்டு. வ.உ.சி. நாட்டையும் வீட்டையும் இருகண்களாக் கருதியவர். வீடும் நாடும் முரணியம் கொண்டால் இரண்டும் செழிப்பு அடையாது. ஒவ்வொரு நாட்டுத்

தொண்டனின் முன்னேற்றத்தில் இன்றியமையாத பங்கு வகிப்பது வீடே. நாட்டிற்காக வீடு வறுமையுற்றாலும், வீட்டை விட்டுக்கொடுக்காத வீரர் வ.உ.சி.. இறுதிக்கால வறுமையிலும் செம்மைகண்டு நிறை மனிதனாக வாழ்ந்தவர் இவர்.

காலச் சூழலால் இரு மனைவிக்கு உரியவராகத் திகழ்ந்தவர் வ.உ.சி. துறவைத் துறந்து இல்லறம் கண்டவர். முதன்மனைவி. வள்ளியம்மையின் அன்பு என்றும் அவர் நெஞ்சுவிட்டு நீங்கவில்லை. அவர் மறைவிற்குப் பிறகு அவர் உறவின் செல்வி மீனாட்சியை மணந்தவர். இவரும் மங்கையர்க்கு அரசியாக வாழ்வு நடத்தியவர். வறுமை காலத்தில் உடனிருந்த இல்லறச் செல்வி. வ.உ.சி.யுடன் நல்லில்லறம் நடத்தி நன்மக்களைப் பெற்றவர்.

வறுமைக் காலத்தில் மண்ணெண்ணெய் விற்றும் அரிசி விற்றும், கணக்கராகப் பணியாற்றியும் வாழ்ந்தவர். சுற்றம் போற்றிய செம்மல், தாம் சிறைபட்டது அறிந்து சித்தம் பேதளித்த தம்பிக்குக் கூட சிறப்பளித்த செம்மல். நிறை நாள்வரை நல்லொழுக்கச் சீலராகவே வாழ்ந்து நிறைந்தவர்.

# 2. வ.உ.சி.யின் நாடக மாண்பு

## 21. நாடக மாந்தரும் வ.உ.சி யின் மாண்பும்

விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் எனும் நாடகத்தின் மாந்தர்வழி வ.உ.சி.யின் மாண்பினைக் காண விழைவோம். இந்நாடகத்தில் அப்பாதுரை முதலாக வெள்ளைத்துரை நிறைவாக முப்பத்தெட்டு (38) கதை மாந்தர் வழியே வ.உ.சி. யின் பண்புநலன்கள் விளக்கப்பட்டுள்ளன. இந்நாடகம் வரலாற்று நாடகமாம். அதனால் இந்நாடகத்தில் வரலாற்று நாயகருடன், நாடக நயம் கருதி பெரியசாமி, சின்னசாமி, பட்டப்பன், கட்டப்பன் முதலான ஒன்பது (9) கற்பனை நாயகரும் அமையப் பெற்றுள்ளனர். இவர்களுள் பி.எ.ஐயர், வெள்ளைத்துரை எனும் முரணியலர் வாயிலாகப் பெயர் மாற்றி வழங்கப்பட்டுள்ளனர். இனி நாடக மாந்தரை அகரமுதலியாகக் கொண்டு வ.உ.சி.யின் மாண்புகளை அறிய முயல்வோம்.

### முதலாம் மாந்தர்: அப்பாதுரை

இவர் ஆசிரியரால் படைத்துக் கொள்ளப்பட்ட கற்பனைக் கதை மாந்தர் ஆவார். இவர் 1,2,3,6,7,10,13,14,16,23,24 எனும் பதினொரு காட்சிகளில் இடம்பெற்றுள்ளார்.

> தம்பி நல்ல புள்ளதாங்க... தப்பு செஞ்சா அதுக்குப்
> புடிக்காதுங்க... அப்பத்தான் கொஞ்சம்
> கோபப்படுதுங்க

என்றும்,

அதான் இந்தத் தானாக்காரன் வருகையா? சிவம் ஐயா, வெள்ளைக்காரன் ஒன்றை நினைக்கும் முன்னே... உங்கள் நண்பர் ஒன்பதை முடிக்கிறார்.

என்றும் கூறும்வழி இவர்தம் பண்பு நலமும், வ.உ.சி.யின் பண்புநலமும் விளங்கப்பெறுகின்றன. இக்கதை மாந்தர்வழி

வ.உ.சி. நல்லவர், கள் வெறுப்பவர், தவறைக் கண்டிப்பவர், இரக்ககுணம் உடையவர் என்பன முதலான பண்புநலன்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இவர் பி.எ.ஐயரோடு நடத்தும் உரையாடல் நகைச்சுவைக்கு உரியன ஆம். வ.உ.சி.யின் மகன் இறக்கும் தருவாயில் மீனாட்சிக்குத் துணையாக இருந்தவரும் இவரே.

**இரண்டாம் மாந்தர்: ஆரிசு**

இவர் கும்பினிப் படைத்தலைவர் ஆவார். தீரன் சின்னமலையோடு நட்பு பாராட்டிப் பின்னர் தீரன் சின்ன மலையைக் கைது செய்தவர். இந்நாடகத்தில் விடுதலை வேட்கைக்குத் துணையாய் இருந்தாரைப் பெரியசாமி, சின்னசாமி வழியாகக் கனவுக் காட்சியின்வழி காட்டப் பட்டுள்ளனர். இவரால் வெள்ளையர் கொடுங்கோன்மை விளக்கப்பட்டுள்ளது. இவர் பதினேழாம் (17) காட்சியில் மட்டும் வருகின்றார்.

**மூன்றாம் மாந்தர்: இராமையா**

இவர் இருபத்திரண்டாம் (22) காட்சியில் மட்டும் வருபவர். கோவை முதலியார்க் கூற்றின்படி, சிறையில் வ.உ.சி.க்கு உதவியவர். வ.உ.சி. மறுத்தும் அவர்க்கு உதவமுன் வந்தவர்.

“எந்தத் தவறும் செய்யாமல் சிறையிலே கல்லுடைத்தும்,செக்கிழுத்தும் நீங்க துன்பப்படும்போது... உங்களுக்கு உதவுவதால் உயிர் போனாலும் தவறில்லை”

என்று கூறிய சிறப்புடையவர். வ.உ.சியின் சோர்ந்த நெஞ்சிற்கு ஆறுதல் அளித்தவர். இவர்வழி வ.உ.சியின் மாண்பு வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

**நான்காம் மாந்தர்: இலார்டு மெர்லி**

இவர் ஆங்கிலேயருள் மாமனிதர். இவர் காட்சி பத்தொன்பதில் (19) வரும் மாந்தர். வ.உ.சி.க்கு எதிராக ஆங்கிலேயரும் அடிவருடிகளும் கூட்டமிட்டுக் கைது செய்யும் வழியைத் தேடும் போது (காட்சி. 18)

“சரியில்லை! நீதிமன்றத்தீர்ப்புகள் நீதிமன்றத்திற்கு வெளியே எழுதுவது சரியில்லை! ஒரு விடுதலை விரும்பியின் வாய்ச் சொல்லிற்கு நாற்பது ஆண்டுகள் தண்டனை என்பது டூ...மச்...(Too

Much) மிக அதிகம். இது நடந்தால் இலார்டு மெண்டோலுக்கு எதிர்ப்பு தெரிவித்து எழுதுவேன் இது உறுதி... வருகிறேன்!" .

என்ற உரையில் அவரின் பண்பும், அயலாரும் போற்றும் வ.உ.சி.யின் மாண்பும் வெளிப்படுகின்றன.

**ஐந்தாம் மாந்தர்: உதவிக் கலெக்டர் ஆசு**

இவரும் பத்தொன்பதாம் காட்சியில் வருபவர். நேர்மையிலார். கையூட்டு பெற்றவராகக் கருதப்படுபவர். வ.உ.சி.யை வஞ்சித்தவர். பின்னர் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டவர்.

"நேரில் ஒழிக்க முடியாத எதிரியை மறைமுகமாக ஒழிக்கச் சரியான திட்டம்"

என்று கூறுவதன் மூலம் இவரது கீழ்மனம் புரிகிறது.

**ஆறாம் மாந்தர்: உலகநாதன்**

முதற்காட்சியில் வருபவர். வ.உ.சி.யின் தந்தை ஒட்டப்பிடாரத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றியவர். வ.உ.சி.யின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். கையூட்டு வாங்கிய நீதிபதி, காவல் துறையர்மீது வழக்கு தொடுத்த வ.உ.சிக்கு ஒட்டப்பிடாரத்தில் இடர்வரும்போது தூத்துக்குடி செல் என்று கூறி வ.உ.சி.யின் விடுதலைப் போருக்கு வித்திட்டவர்.

இவன வக்கீலுக்கு மட்டும் படிக்க வைச்சிருக்கணும்... தமிழ் வேதாந்தம் சித்தாந்தம் எல்லாம் படிச்சிட்டான்... நீதியைக் கைக்கொண்டவனுக்குச் சத்திய சோதனைத்தான்...! உம்.. நீதிய கொல்கிறவனுக்கு அடிமையாக இருக்கணுமா? அடிமையாய் வாழ்ந்து நம்ம காலம் முடியப்போகுது. சிதம்பரமாவது சுதந்திர சிந்தையில் செயல்படட்டும். அப்பனே நீயே துணை?

என்று மகனின் செயல்பாட்டை ஏற்றுக்கொண்டவர். இவர்வழி வ.உ.சி.யின் நேர்மையும், வீரமும், தீரமும் இந்நாடகத்துள் விளக்கப்பட்டுள்ளன.

**ஏழாம் மாந்தர்: ஊமைத்துரை**

பதினோராம் காட்சியில் வருபவர், பெரியசாமியின் கனவுக் காட்சியில் வருபவர்.

அண்ணன் வீரபாண்டிய கட்டபொம்முவிற்குக் கயத்தாறு! தம்பியெனக்குத் திருப்பத்தூர் கோட்டைத் தென்மூலை... நாடு

நகரங்களை மண்ணோடு மண்ணாக்கிய வெள்ளைப் பேடியே...! நட்பை... மதிக்காத துரோகியே...! எனது நாட்டில் எம்மைத் தூக்கிலிடும் நீயும் உன்னாட்சி அதிகாரமும் மண்ணோடு மண்ணாக வேண்டும்! தமிழ் மண்ணே! அண்ணா! உன் தம்பி வீரப் போரில் மடியாமல் கோழையாகத் தூக்கில் சாகிறான். அதுவும் அடைக்கலம் தந்த இரு நண்பர்களின் உயிர்க்கு எமனாய்.

இவற்றால் வீரம் செறிந்த தமிழ் மண்ணின் வீரமகனார் ஊமைத்துரையை ஒத்த வீரர் வ.உ.சி. என்று காட்டப் பெற்றுள்ளது.

**எட்டாம் மாந்தர்: கட்டப்பன்**

கட்டப்பன் இந்நாடகத்துடன் 2,6,7,8,20,24 எனும் ஆறுகாட்சிகளில் வருபவன். முரணிய (VILLAIN) கதை மாந்தன். ஆங்கில எடுபிடியாய்த் திகழ்ந்து, அவர் பழக்கமாகிய மதுவைப் பிறர்க்குப் பழக்கி அடிமைப்படுத்தும் அடிமை ஏமாற்றுக்காரன். ஆட்சி மாற்றங்கள் நிகழும் என்று நிறை காட்சியில் புதுக்கட்சித் தலைவன் கருணை மறவனாய்க் காட்சி தரக் கூடியவன். அவன் வாய்வழி ‘கடுகு சிறுத்தாலும் காரம் குறைவதில்லை... சிதம்பரம் சிதம்பரந்தான்’ என்று நாடகம் நிறைக்கப்பட்டுள்ளது. இவன் வழி வ.உ.சியின் புகழ் விளக்கப்பட்டுள்ளது.

**ஒன்பதாம் மாந்தர்: கட்டபொம்மன்**

இவர் வரும் காட்சி நான்காம் காட்சியாம். பெரியசாமி காணும் கனவுக் காட்சியில் வருகிறார்.

“வீணம் பேசும் எத்தனே! வீரம் எங்கள் பிறவிக்குணம்! வீரம் இருந்தால் நேருக்கு நேர் நில்...” என்றும்.,

‘எலியென நினைத்தாயோ வெள்ளையனே! கட்டபொம்மன் புலியடா!’

என்றும் சீறும் காட்சிவழியும் இம்மண்ணில் வீரம் பேசப்பட்டது.

இவர் வழி வ.உ.சியின் வீரமும் குறிப்பாக உணர்த்தப் பட்டது.

**பத்தாம் மாந்தர்: கர்னல் வேல்சு**

கனவுக் காட்சி பதினொன்றில் வரும் மாந்தன் இவன். மூவாயிரம் வெள்ளிக்காசுக்காக நட்பைக் கொன்ற வெள்ளையன்.

மருது இணையருடன் நட்பைப் பாராட்டி அவர்க்கு வஞ்சகம் செய்தவன்.

ஊமைத்துரையைச் சிறைப்பிடித்தவன். மூவர்க்கும் தூக்கை நிறைவேற்றியவன். இவன்வழி வெள்ளையர் கொடுமையை வ.உ.சி. எப்படி அனுபவித்திருப்பார் என்பது குறிப்பால் சுட்டப்பட்டுள்ளது.

**பதினொன்றாம் மாந்தர்: கலெக்டர் விஞ்சு**

காட்சி பத்தொன்பதின் மாந்தரிவர். வ.உ.சி. சிறை செல்வதற்கு வழிவகுத்த குழுவில் இவரும் ஒருவர்.

'இந்த ஆளால் (வ.உ.சி.யால்) பெரிய தலைவலி...' என்பது அவர் கூற்று. வ.உ.சியைத் தூத்துக்குடியில் கைது செய்யாமல் பேச்சுக்கு என்று அழைத்து திருநெல்வேலியில் கைது செய்தவர். வெள்ளையர் சூதினால் வ.உ.சி. பட்ட வேதனையை இவர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பன்னிரண்டாம் மாந்தர்: கவிஞர்**

இவர் மூன்றாம் காட்சியின் மாந்தர் ஆவார். வ.உ.சி. கவிஞர் போற்றும் பண்பினர் என்பதும்; உற்றுழி பயன் கருதாது உதவுபவர் என்பதும்; இவர்மூலம் காட்டடப்பட்டுள்ளன. ஐயா இன்று வெள்ளிக்கிழமை, நினைவூட்டத்தான் வந்தேன் என்று கூறும் கவிஞரிடம்

"வெள்ளியும் செவ்வாயும் வெள்ளிப்பணத்திற்கில்லை மனத்திற்குத்தான். எனது வீடு தேடிவந்த தமிழ்ப்புலவர், வெறுங்கையோடு திரும்பக் கூடாது. பெற்றுக்கொண்டு திருமணத்தைச் சிறப்பாய் நடத்துங்கள்"

என்று கூறி ஆயிரம் வெள்ளிக்காசினை அள்ளித்தந்தார்.

இக்கவிஞர்வழி வ.உ.சி.யின் கொடைப் பண்பு வெளிப்பட்டு நிற்கின்றது. மூட நம்பிக்கை அற்றவர் என்பதும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

**பதிமூன்றாம் மாந்தர்: காவலர்**

இவர் காட்சி பதினாறு தன்னில் காணப்படும் மாந்தராவார். தூத்துக்குடியில் போராட்டம் நிகழ்த்த தடை விதிக்கப் பட்டதையும், நீதிபதி வாலேசுவின் எச்சரிக்கையைக் கூற வந்த

காவலர் இவர். இவர்க்குத் திரு.வ.உ.சி.யின் பதிலாக 'ஐயா காவலரே! 'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' எங்களை இதைச் செய், இதைச் செய்யாதே என்று கூறுவதற்கு எவர்க்கும் அதிகாரம் இல்லை. விபின் சந்திரபால் அந்நியர்க்கு அடிபணியா விடுதலை வீரர். உமது அடாத செயற்கெல்லாம் வால்பிடிக்கும் கோழையர் அல்லர் யாம். திருநெல்வேலிச் சீமையிலே பேரணி நடத்தப்படும்... தாமிரபரணி ஆற்றங்கரை தைப்பூச மண்டபத்திலே பொதுக் கூட்டமும் நடக்கும்...

என்றார் வ.உ.சி..

இதை அப்படியே துரையிடம் சொல்லிவிடவா என்று கேட்ட காவலனுக்கு வ.உ.சி. கூறும் விளக்கம் அவரது வீரத்தையும் அஞ்சா நெஞ்சப் பண்பையும் உணர்த்துகிறது.

**பதினான்காம் கதைமாந்தர்: சாக்சன் துரை**

பெரியசாமி காணும் கனவுக் காட்சி நான்கில் வரும் மாந்தர் ஆவார்.

கட்டபொம்மன்... நீ எங்களுக்குச் செலுத்த வேண்டிய திரையையும் அதன் காலதாமதத்திற்கான வட்டியையும் செலுத்தவில்லை... பலமுறை ஆணை அனுப்பியும் நீ கீழ்ப்படிவதில்லை... வாட் மேன்? (What man?)'

என்று கட்டபொம்மனுடன் வாதிட்டவன். வஞ்சகமாய்க் கட்டபொம்மனை அழைத்து சிறைபிடிக்க எண்ணியவன்.

'கட்டபொம்மா மீசையை முதுக்காதே (முறுக்காதே!) பின் விளைவுகளைச் சந்திக்கும் படியிருக்கும்'

என்று எச்சரித்தவன்!. இவன்வழி ஆங்கில அரசின் கொடுமை விளக்கப்பட்டது.

**பதினைந்தாம் மாந்தர்: வ.உ.சிதம்பரம்**

வ.உ.சி.யின் சீர்மிகு பண்புகள் 1,3,5,7,9,10, 12,15,16,18,21,22,24 என பதின்மூன்று (13) காட்சிகளில் விளக்கப்பட்டுள்ளன.

முதற்காட்சியில் அஞ்சா நெஞ்சராகவும் நேர்மையராகவும் சுட்டப்படுகின்றார்.

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே" என்றார் பாரதி.

'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திரு நாட்டிலே மண்ணடிமை தீராது.' என்றார் அவர்தாசன். வ.உ.சி. ஆணாதிக்க காலத்தில் பெண்ணுக்கு முழு உரிமை தந்தமை மூன்றாம் காட்சியால் விளங்குகின்றது.

வ.உ.சி.யின் வீரமும், போராட்ட குணமும் காட்சி ஐந்திலே விளக்கம் பெறுகின்றன.

வெள்ளையர்க்கு அஞ்சா வீரர் என்பதனை ஏழாம் காட்சியும், வேறுபாடு கருதாத நடுநிலையாளர் என்பதனை ஒன்பதாம் காட்சியும், கோரல் மில் போராட்ட வெற்றியைப் பத்தாம் காட்சியும்; அந்நியர்க்கு எதிராகத் தூத்துக்குடியில் கப்பலோட்டிய செம்மையைப் பன்னிரண்டு, பதினைந்தாம் காட்சிகளும் காட்டுகின்றன.

தேசப்பற்றாளர் விபின் சந்திரபால் விடுதலை விழாவை வீரமுடன் கொண்டாடிய செய்தியைப் பதினாறு, பதினெட்டாம் காட்சிகளிலும் சிறையில் கல்லுடைத்த செக்கிழுத்த காட்சிகளை இருபத்தொன்றிலும் கூறப்பட்டுள்ளன.

சிறையில் பெற்ற அனுபவங்களைக் காட்சி இருபத்திரண்டு காட்டுகின்றது. இருபத்து நான்காம் நிறை காட்சி வ.உ.சி.யின் சிறை விடுதலை பெற்ற செய்தியையும், நாடு யாரிடம் செல்கின்றது என்பதனையும் விளக்குகிறது.

வ.உ.சி.யின் பண்பு நலன்கள் காட்சிகள் தோறும் விளக்கப்பெற்றுள்ளன.

**பதினாறாம் மாந்தர்: சிவன், சக்தி**

நூலோர் வெஞ்சிறையும், செக்கடியும் வாடுதல் கண்டு சிவசக்தியிடம் வேண்டுவதுபோல் அமைந்த பாடற்காட்சி இருபத்தொன்றாம் காட்சியாகும். அக்காட்சியில் சிவசக்தி உருத்திரத் தாண்டவம் ஆடுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சியின் விளக்கம் பின்னர் கூறப்பட்டுள்ளது.

**பதினேழாம் மாந்தர்: சிறைக்காப்பாளர்**

இருபத்திரண்டாம் காட்சி சிறைக்காட்சியாம்: இராமையா சென்றபின்பு வந்த ஆங்கிலச் சிறைகாப்பாளரால் வ.உ.சி. மிகவும் துன்புறுத்தப்பட்டார்.

சி.காப்பாளர்: அவர் வாஞ்சிநாதன் என்னும் இளைஞன் மணியாட்சியில் சுட்டுக்கொன்றதால் இறந்து விட்டார்...! அந்த இளைஞனும் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு இறந்துவிட்டான்.

சிதம்பரம் : வருந்துகிறேன்...!

சி.காப்பாளர்: பரவாய்இல்லையே!... உம்மிடம் மாற்றம் தெரிகிறது. உமது எதிரியின் இறப்பிற்கும் வருந்துகின்றாயே.

சிதம்பரம் : தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம்! ஒரு ஈனனைக் கொன்றதற்காக நான் வருந்தவில்லை ஒரு விடுதலை போராட்ட வீரன் மறைந்தானே என்று வருந்துகிறேன்.

சி.காப்பாளர்: நீ திருந்தவே மாட்டாய்...! நாளைக்கு இரேசனைப் பாதியாக வெட்டிவிடுகிறேன்.

என்பதன் மூலம் இச்சிறைக்காப்பளரால் வ.உ.சி. அடைந்த துன்பங்கள் (காட்சி: 22) அறியக் கிடைக்கின்றன.

பதினெட்டாம் மாந்தர்: சின்ன மருது

இவர் பெரியசாமி காணும் கனவுக் காட்சியான பதினோராம் காட்சியின் மாந்தர் ஆவார். கர்னல் வேல்சால் நட்புக்கேடு அடைந்தவர். கர்னல் வேல்சு சின்ன மருது உன் கடைசி ஆசை என்னவென்று கேட்க

'மூவாயிரம் வெள்ளிக் காசுக்காக நட்பை மறந்தவேல்சு...! நீயும் மனிதனா...? என்னினிய தாய் நாட்டு மக்களே.. என்றும் அந்நியன்அந்நியன் தான்... அன்பு நண்பன் ஊமைத்துரைக்காக உயிர் விடுதலைப் பெருமையாக நினைக்கிறேன். போலிகளின் நட்புறவை விட, புகழ்மிக்க வீர நண்பனுக்காக எனதுயிர் போகட்டும்.'

என்று வீர உரையாற்றியவன். வ.உ.சி.யும் இவ்வீரம் படைத்தவர் என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

பத்தொன்பதாம் மாந்தர்: சின்னமலை

தீரன் சின்னமலை எனும் இவர் வெள்ளையரை எதிர்த்த மாவீரன் ஆவார். இவர் பதினேழாம் காட்சியான கனவுக் காட்சியில் இடம் பெற்றுள்ளார். ஆரிசின் மொழி கேட்டு வெகுண்டு 'ஆரிசு

இது எம்குடிமரபு' என்றார். 'கட்டபொம்மன்முதலானோர் புதைக்கப்பட்டவர் அல்லர் விடுதலைக்காக விதைக்கப்பட்டவர்' என்ற வீர உரைக்குச் சொந்தக்காரர்.

**இருபதாம் மாந்தர்: சுப்பிரமணிய சிவா**

இவர் இந்நெடு நாடகத்தின் துணை நாயகர். *3,5,6,7,9,10,12,13,15,16,18,24* எனும் பன்னிரெண்டு காட்சிகளில் வருகின்றார். இவர் ஒரு துறவி. இவர் வ.உ.சி. யின் வலக்கையாக இருந்து எல்லாச் செயல்களிலும் ஈடுபட்டார். இவரை ஆங்கில அரசு தீவிரவாதியென்றும் அவர்க்கு அ டைக்கலம் தந்ததால் வ.உ.சி. க்குச் சிறைதண்டணையும் வழங்கியது. இவரே வ.உ.சி.யின் புகழுக்கு அடிப்படையாக விளங்கினார். காட்சி ஐந்தில்

சிவம் : சிவம்... சுப்பிரமணியசிவம்... அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்த வீர இந்தியத் திருநாட்டின் மக்களே! அண்டிப் பிழைக்க வந்த வெள்ளைக் கூட்டம் நம்மை ஆள நினைக்கிறது. இம் என்றால் சிறையும் ஏனென்றால் நாடு கடத்தலும் செய்கிறது. தட்டிக் கேட்க ஆளில்லாம் கெட்டுவிட்டனர்...! வீரம் சிறந்த தீரப்படையே எழுக! எழுக!! இன்று நாம் மூட்டும் எதிர்ப்புத் தீயில் வெள்ளைப் பேய்கள் வெருண்டு ஓடட்டும். 'சுயராசியம் எனது பிறப்புரிமை' என்ற திலகரின் குரல்ஒலி எட்டுத் திக்கும் எதிரொலிக்கட்டும்! சுயராசியம் எங்கள் பிறப்புரிமை...!

என்று உரைப்பதன் மூலமும்; காட்சி ஒன்பதில்

சிதம்பரம் : மீனாட்சி... எல்லா மில் தொழிலாளர் வீட்டிற்கும் சாப்பாடு ஏற்பாடு செய்து விட்டாயா...?

சிவா : சிதம்பரம்... மீனாட்சியிடம் எந்த செயலை ஒப்படைத்தாலும் சிறப்பாகவே செய்வாள்... அவள் யாரின் மனைவி...? அதுமட்டுமல்ல என் தங்கை...

மீனாட்சி : (கண்ணீர் மல்க நிற்றல்) என் கூடப் பிறந்தவர்கள் கூட என்மீது இவ்வளவு பாசமாக இருப்பார்களா...?

சிவா : என்ன மீனாட்சி... இப்படிச் சொல்லிவிட்டாய்! நான் ஒரு துறவி... என்னால் நாட்டுப்பற்றையும்... இந்த வீட்டுப்பற்றையும் மட்டும்தான் துறக்க முடியவில்லை... ஏனென்றால் என் நண்பர்

சிதம்பரமும்... என் தங்கை நீயும், என் மருமக்களுமே இதற்குக் காரணம்... நாட்டுக்காக வீட்டைத் துறந்தேன். இன்று நாட்டுப்பற்றாளர் வீட்டில் இருக்கிறேன்...! என்னைப் பற்றாளன் ஆக்கிவிட்டீர்.

என்று மொழிவதன் மூலமும்; காட்சி பதினாறில் 'ஆம் எண்ணித் துணிபவர் நம் சிதம்பரம்' என்பதன் மூலமும்

வெள்ளைச் சிறைவாசம் தந்த பரிசு... தொழு நோயளருடன் இருக்க வைத்து என்னை இந்த அலங்கோலப் படுத்திவிட்டனர். உம் சிவத்தைச் சவமாக்கி அனுப்பிவிட்டனர். என்னைத் தொடாதீர்...

எனக் கூறிய மொழியில் இவர் சிதம்பரம்பால் கொண்டிருந்து அன்பும் மதிப்பும் நாட்டுப்பற்றும் நன்கு விளங்குகின்றன.

## இருபத்தொன்றாம் மாந்தர்: துபாசு முதலி

இவர் பெரியசாமியின் கனவுக்காட்சியாம் காட்சி எட்டில் வருபவர். வெள்ளைக் கும்பினியின் மொழி பெயர்ப்பாளர் (துபாசு) ஆவார்.வெள்ளையர் சார்பில் பெயரளவில் 2,000 உரூபாய் வரியெனக் கட்டும்படி பூழித்தேவனிடம் கேட்டவன்.

## இருபத்திரண்டாம் மாந்தர்: தொழிலாளர்

இவர் பத்தாம் காட்சியில் வரும் மாந்தர். கோரல்மில் தொழிலாளர். அடிமைத்தனத்தை எதிர்த்து ஒற்றுமையாக நின்று வெற்றி கண்டவர். வ.உ.சி. யின் தலைமையில் செயற்பட்டு வெற்றிகண்டவர். வ.உ.சி. தொழிற்சங்கம் உருவாகக் காரணமானவர்.

## இருபத்து மூன்றாம் மாந்தர்: நீதிபதி வாலேசு

இவர் பத்தொன்பதாம் காட்சியில் வருபவர். வ.உ.சி. க்கு எதிரான நின்ற வெள்ளையருள் இவரும் ஒருவர்.

'இந்த மனிதன்(வ.உ.சி.) யாருக்கும் பயப்படமாட்டேன் என்கிறான். சட்டம் படிச்சதால் சட்ட ஓட்டைகளை வைச்சு நம்மை மடக்குறான்!'

என்ற இவர் உரைவழி வ.உ.சி.யின் பண்பு நலன் விளக்கப்பட்டுள்ளது.

**இருபத்துநான்காம் மாந்தர்: பட்டப்பன்**

இவர் இரண்டாம், இருபதாம் காட்சிகளில் வருபவர். கட்டப்பனுடன் இவரது உரையாடல் நகைச்சுவை மிக்கது.

'வியாபாரம் பண்ண வந்த வெள்ளைக்காரன்க நம்மல நாய், பன்றி, பிச்சைக்காரன்னா சொல்றாங்க? இதுக்கெல்லாம் ஒரு நாள் பதில் இருக்கு...'

என்றும்;

"வெள்ளையன இந்தியாவை விட்டே வெரட்டுனும்னு முடிவுகட்டி போராட்டம் நடக்குது. இந்த வெள்ளைக்காரன் கிட்டேபோய் எடுபுடியா இருக்கச் சொல்றீயே"

என்றும்;

"நம்ம நாட்டிலே கள்ளே குடிக்கக் கூடாதுன்னு போராட்டம் நடத்துறாங்க... நீ போடா"

என்றும் கூறும் வழியே இவரது நாட்டுப்பற்றும், அடிமையிலாச் சிந்தனையும், மதுவுண்ணாச் சிறப்பும் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

**இருபத்தைந்தாம் மாந்தர்: பத்மநாப ஐயங்கார்**

இவர் 7,12,18 எனும் காட்சிகளில் வருபவர். வ.உ.சி. யின் நண்பர். போராட்டங்கிளில் பங்குபெற்று சிறை சென்றவர். கோரல்மில் தொழிலாளர்க்காக வ.உ.சி. யுடன் இணைந்து செயலாற்றியவர். வெள்ளையரை எதிர்க்கத் தயங்காதவர். வ.உ.சி.யுடன் சிறை சென்றவர்.

**இருபத்தாறாம் மாந்தர்: பாரதியார்**

இவர் இந் நாடகத்தின் 9,10,15,21 எனும் நான்கு காட்சிகளில் விளங்குகின்றார். காட்சி ஒன்பது பாரதி மாறு வேடத்தில் வ.உ.சி. யைச் சந்திப்பது போல அமைக்கப்பட்டுள்ளது. பாரதி வள்ளியம்மையுடன் பேசும் பேச்சுக்கள் கல் மனத்தையும் உருகச்செய்து கண்ணீர் பெருக்கெடுக்கச் செய்யும் காட்சியாகும்.

(உணர்ச்சிவசப்பட்டு, மண்டியிட்டு) அம்மா வள்ளியம்மை! என் சுதந்திர தேவியே...! என் சுதந்திர தேவியே! உன்னைப்

போன்றவர் இம்மண்ணில் தோன்றிவிட்டனர். இனி இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்துவிடும்...! உறுதியாகக் கிடைத்துவிடும்... உன்னைக் கண்ட எனக்கு ஆனந்தப் பள்ளு பாடத் தோன்றுகிறது. (பாடுதல்)

ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று...
ஆடுவோம்... ஆடுவோம்... ஆடுவோமே!

என்று பாடி, விடுதலை கிட்டுவது உறுதி என்பதை இக்காட்சி காட்டுகிறது. வெள்ளையருக்கு உடந்தையாக இந்தியரே இருப்பது கண்டு,

நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த
நிலை கெட்ட மாந்தரை நினைந்து விட்டால்

என்று இயம்பியது இக்காட்சியில் காட்டப்பட்டுள்ளது. சாதி பாகுபாடு அற்றவராகப் பாரதியும், வ.உ.சி.யும் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளனர். காட்சி பத்தில் அயலானுக்கு அடிமை யில்லை என்று இம்மண்ணின் பெருமை காக்கும் கோரமில் தொழிலாளர் நல்லினமே! வணக்கம். நம் சிதம்பரம் பிள்ளை திலகர் கண்டெடுத்த நல்முத்து... வடக்கே திலகரின் குரல் ஓங்கி ஒலிக்கிறது என்றால்; தெற்கே சிதம்பரத்தின் குரல் ஒலிக்காமாலா இருக்கும்...? இத்தன்னலமற்ற தியாகியை நம்புக... இவர் மட்டுமல்ல, இவர் குடும்பமே உங்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளது. இன்று காலை இவரின் மகள் வள்ளியம்மை... நமக்கெல்லாம் உணவில்லை என்றபோது தமது கையணி, காலணி, காதணிகளைக் கழட்டித் தந்தாள்... இது எனது உள்ளத்தை நெகிழ வைத்தது. இத்தகைய சிறப்பு மிக்க தலைவரை நாம் பாராட்டுகிறோம். நீங்களும் பாராட்டுங்கள். வந்தே மாதரம்.

பாரதியின் வீரவுரைவழி வ.உ.சி.யின் புகழ் பேசப்பட்டுள்ளது. காட்சி பதினைந்தில்:

'எம்மினிய இந்தியத் திருநாட்டின் மக்களே! வந்தேமாதரம் என்ற சொல்லின் ஆற்றலாய் விளங்கும் நம் சிதம்பரம்... நமக்குக் கப்பல் ஓட்டிக் காட்டப் புகுந்துவிட்டார்... இது எவர்க்கும் எதிராகத் தொடங்கப்பட்ட துறையன்று... நமக்கு நாமே தொடங்கியுள்ள துறை... சில துரைகளின் கொள்ளிக்கண் இதன்மேல் விழுந்துள்ளது, எமக்குத் தெரிகின்றது...! எத்தனை

சோதனைகள் வந்தாலும் எதிர்த்துப் போராட வேண்டியது நமது கடன்...! நம்மைப் பிரிக்கக் காலனே வந்தாலும் காலால் உதையுங்கள்...! அன்று தமிழன் கப்பலோட்டித் திரைகடல் ஓடி பொருள் சேர்த்தான்... இன்று இங்கு இந்தத் தமிழர் திரைகடலில் கப்பலோட்டித் தமது மானம் காத்தார்...! அதனால் என் அன்பிற்குரிய நண்பரை... நண்பர் சிதம்பரத்தைக் 'கப்பலோட்டிய தமிழர்' என்று அழைத்து வாழ்த்துதிக் கூறுகிறேன். கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி...வாழ்க!'

**வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் - அடி**
**மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்.**
**பள்ளித்தளமனைத்தும் கோயில் செங்குவோம் -**
**எங்கள் பாரத தேசமென்று தோள் தட்டுவோம்.**

என்று பாடி கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் செயல்பாட்டைப் பாரதி புகழ்வது பாங்குடைத்து. காட்சி இருபத்தொன்றில் இதுவென்ன வேதனை... என்று வேளாளன் சிறைபட்ட செய்தியைப் பாடுவது போன்ற ஒரு கற்பனைப் பாடற்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாகப் பாரதியின் வழி வ.உ.சி. பாராட்டப்பட்டுள்ளார்.

**இருபத்தேழாம் மாந்தர்: பி.எ.ஐயர்.**

இவர் காட்சி 7,10,19,23 எனும் நான்கு காட்சிகளில் இடம் பெற்றுள்ளார். நீதித் துறையில் பணியாற்றி கையூட்டு பெற்றதால், வ.உ.சி. வழக்குத் தொடுக்கப் பணியிழந்தவர். வெள்ளையர்க்குத் துணையாகச் செயல்பட்டவர். ஏழு, பத்து காட்சிகளில் இவர் வெள்ளையர்க்குத் துணையாகச் செயல்பட்டமை கூறப் பட்டுள்ளது.

பத்தொன்பதாம் காட்சியில் வ.உ.சி.க்கு நாற்பதாண்டுகள் சிறை தண்டனை பெற வழிவகுத்த சூத்திரதாரியாகக் காட்டப்பட்டுள்ளது.

இருபத்துமூன்றாம் காட்சியில் வ.உ.சி. சிறை தண்டனை கிடைத்ததற்குத் தாமே காரணம் என்று முடிதிருத்தும் முனியனிடம் கூறி, பாதிப்பணியில் முனியன் 'உன் போன்றவர்க்கு ஊழியம் செய்யமாட்டேன்' என்று சொல்லிச் சென்றமை கூறப்பட்டுள்ளது. அக்காலத்தில் பாமரரும் நாட்டுப்பற்று கொண்டு விளங்கினர் என்று இச்சொல்வழிக் காணமுடிகிறது.

முற்பகல் வ.உ.சி.க்குச் செய்த கேடு பிற்பகல் முனியனால் பி.எ.ஐயர் அடைந்தார்.

காட்சி ஏழில் இவரின் வில்லங்கச் செயல்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன. வெள்ளைத்துரை சின்னசாமியை அடித்த அடி ஐயர் கன்னத்தில் பட

சம்பளம் கொடுக்கிற எசமான்... அடிச்சுட்டேள்... பரவாயில்லே... கண்ட்டினியூ (continue) பண்ணுங்கோ... அப்பா... கன்னம் புளிச்சு போச்சு...

என்று கூறி, தான் ஆங்கிலேயர்க்கு அடிவருடி என்பதனைக் காட்டுவார்.

பிள்ளைவாள்... நோக்கு ஏன் இந்த வெட்டி வேலை. நாட்ட ஆள்றதும் அவாதான். நம்மல ஆள்றது அவாதான். ‘கோரல் மில்’ எவாளுக்குச் சொந்தமுன்னு தெரியுமா ஓய்..? வெள்ளைக் காரனுக்குச் சொந்தமானது. இங்கே அவா வெச்சதுதான் சட்டம்... அதபோயி கேட்டு ஏழை பாழைக்குக் கிடைக்கிற அரைவயிறு கஞ்சியும் கெடுத்துடாதீர்... கூட வந்திருக்கேளே ஓய் ஐய்யங்கார்...! ஓய்... உம்மத்தான் ஓய்... சிவா... உம்மையும்தான் இவாளுக்கு எடுத்துச்சொல்லி அழைச்சுண்டு போயிடுங்கோ... வெள்ளைக்காரன் பொல்லாப்பு வேண்டாம். என்பதன் வழியாகவும் அதனை உணரலாம்.

ஏய் முனியா! சித்தாம்பரம்... சீ... வெள்ளக்காரனோட சேர்ந்து சேர்ந்து அவனபோல பேசுறோம்... உம்... சிதம்பரத்துக்குச் செஞ்சிட்டா என்றேளே... சிதம்பரம் அவாளுக்கு என்ன செஞ்சிருப்பான்னு உனக்குத் தெரியுமா? நான் யாருன்னாவது தெரியுமா? ஒரு காலத்துல நான் சட்சுடா (Judge)! நீதிபதி...! எல்லாரும் பண்ணுறாளேன்னு... கொஞ்சம் அப்படி இப்படிக் கையை நீட்டிட்டடன்... இத மோப்பம் புடிச்சி வழக்குப் போட்டு எனது வேலையைப் போக்குனது யார் தெரியுமில்லே...!

என்ற வழியும்,

ரெண்டு முண்டாசுகாரனும் சேர்ந்து உங்கள கெடுத்துட்டான்க...? அடே... அடே முனியா! நேக்கு அவமானம் ஆயிடும் செத்தமுடிச்சிட்டு போடா...

என்ற வழியும் இவர் கதை மாந்தருள் முரணியர் என்பதையும் அறியலாம்.

**இருபத்தெட்டாம் மாந்தர்: பிச்சைக்கார இளவரசன்.**

இவர் 2,6,12,17,18,20 எனும் ஆறு காட்சிகளில் இடம் பெற்றுள்ளார். உடல் ஊனமுற்றவர். இரண்டாம் காட்சியில் பிச்சைக்காரராக வருபவர். பசியின் கொடுமை அறிந்தவர். பட்டப்பன் இட்ட இரண்டணாவைத் திருப்பித் தந்தவர். கட்டப்பன் இட்ட வெள்ளிக்காசை விட்டெறிந்தவர். உழைத்துண்ணும் உறுதி பெற்றவர்.

ஆறாம் காட்சியில் காலணிகளைத் தூய்மைசெய்து ஒளியேற்றும் பணியாளராக வருகின்றார். பன்னிரெண்டாம் காட்சியில் வ.உ.சி. உதவியால் சிறுகடை வைப்பவர் என்று காட்டப்படுகிறார். 17,18 ஆம் காட்சிகளில் திருநெல்வேலி போராட்டத்தில் பங்குபெறத் துடிக்கும் துடிப்பாளராகக் காட்டப்படுகிறார். 20 ஆம் காட்சியில் போராட்டத்தில் ஈடுபட்டு கட்டப்பனால் தூண்டப்பட்டு காவலரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். இக்காட்சியில்

இளவரசன் : ஏன் அஞ்சுகிறீர்...? ஏன் ஓடுகிறீர்? நில்லுங்க! இந்த ஊனமுற்றவனக்கு இருக்கின்ற தைரியம் கூட உங்களுக்குக் கிடையாதா...? 'வெள்ளையனுக்கு அஞ்ச வேண்டாம்'. ஆறிலும் சாவு நூறிலும் சாவு அதில் நம்முயிர் நாட்டுக்காக... நாட்டு விடுதலைக்காகக் குரல் கொடுத்துப் போகட்டுமே... அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

கட்டப்பன் : ஓ சிப்பாய்! அதோ தடி ஊன்றி எம்பி, எம்பி பேசுகிறானே! அவன் சிதம்பரத்தின் ஆள்...! விட்டா ஊரைக் கூட்டி உன்ன அடிச்சிக் கொன்னுடுவான்! அவன...குண்டுப்பட்டா என்ன ஆகுமுன்னு கொஞ்சம் போட்டுக் காட்டு

இளவரசன் : வெள்ளைக் காட்டாச்சி ஒழிக... (சிப்பாய் சுடுதல் - இளவரசன் வீழ்தல்) வந்தே மாதரம்... வந்தே மாதரம்...

பெரியசாமி : (தாங்கிப் பிடித்தல்) சின்னசாமி அந்தக் கட்டப்பயல விடாதே! (சின்னசாமி கட்டப்பனைப் பிடித்துக் கொள்ளுதல்) தம்பி இளவரசா...!

இளவரசன் : அண்ணே! கவலைப் படாதீங்க! எனக்கு வாழ்வு தந்தசிதம்பரம் ஐயாவுக்காக உயிர் விடுவதைப் பெரிதாகக் கருதுகிறேன்...! வந்தே மாதரம்...! வந்தே மாதரம்... (உயிர்விடுதல்)

என்று இளவரசன் வாயிலாய் வ.உ.சி. புகழ் நிறுவப்பட்டுள்ளது. இவர் வரலாற்று ஆசிரியரின் கற்பனை மாந்தராவார்.

**இருபத்தொன்பதாம் மாந்தர்: பூழித்தேவன்.**

காட்சி எட்டில் பெரியசாமியின் கனவுக் காட்சியில் வருபவர். வெள்ளையர்பற்றி அச்சுறுத்திக் கூறும் துபாசு முதலியின் உரைக்கு,

பூழித்தேவன்: வெள்ளைக் கும்பினியின் துபாசு முதலியே... போரென வந்துவிட்டு, சமாதானக் கொடியேன்? வென்றால் கொக்கரிப்பும் தோற்றால் கால்பிடிப்புமா...? அக்...அக்...க... (சிரித்தல்)

துபாசு முதலி: மன்னர் பூழித்தேவனே... வெள்ளையர்கள் சாதாரணமானவர் அல்லர்...அ வ ர் க ள் திண்டுக்கல் மதுரையைப் பிடித்த ஆற்றல் உடையவர்கள்... என்றாலும் உங்களிடம் சமாதானமாகப் போக விரும்புகிறார். நீங்கள் பெயரளவில் உரூபாய். 2000 மட்டும் வரியாக...

பூழித்தேவன் : முதலியே, ஒன்று கேள்... சமாதானம் என்றால் வரச்சொல் - உடன் உண்ணச்சொல் பரிசாய் இரண்டு என்ன இருபது ஆயிரம் தருகின்றேன். பெறச்சொல்... ஆனால் வரி... வட்டி... என்று எம் பாளைய மண்ணுள் எவர் வரினும் அவர் தலையிருக்காது... ஓடும்...

இதன்வழி பூழித்தேவன் வெள்ளையனை எதிர்த்த வீரன் என்பது இவண் காட்டப்பட்டுள்ளது.

**முப்பதாம் மாந்தர்: பெரியசாமி.**

நாடகச்சீருக்காகக் கற்பனையாகப் படைக்கப்பட்டவரே பெரியசாமி. இவர் 4,5,6,7,8,9,10,11,14,15,17,18,20 எனும் பன்னிரண்டு காட்சிகளில் அமையப் பெற்றவர். விடுதலை விரும்பி கட்டபொம்மன் முதலான வீரர்களைக் கனவில் காணும் வீர

உணர்வினர். கோரல் மில் தொழிலாளர், தொழிலாளர் ஒற்றுமைக்கு உதவியவர். சின்னசாமியோடு இவர் நிகழ்த்தும் உரை நகைச்சுவைக்கு உரியது. கோரல் மில் போராட்டம் திருநெல்வேலி போராட்டம்வரை அனைத்துப் போராட்டங்களிலும் வ.உ.சி.க்குத் துணையாய் இருந்தவர்.

*நாட்டடிமை போகணுமின்னா...! நம்ம மனசுல அடிமை புத்தி போகணும்...! அதான் சிவாசிக்கு அவங்க அம்மா வீரக் கதைகளாய்ச் சொன்னாங்களாம்...*

என்னும் உரையாடல் அவர்தம் விடுதலைப் பற்றை உரைப்பதாகும்.

### முப்பத்தொன்றாம் மாந்தர்: பெரியமருது

இவர் பெரியசாமி கூறும் கனவுக்காட்சி பதினொன்றில் வருபவர். ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததற்காகப் பிடிபட்டார். கர்னல் வேல்சிடம்

*எந்நாட்டு மக்களே! நட்புக்காக உயிர்விடும் எங்கள் வரலாறு என்றும் நிலைத்திருக்கும்...! எங்களைக் காட்டிக் கொடுத்தவர் முகங்களில் காறி உமிழுங்கள்! இறப்பிற்குப் பிறகு எனது தலையைக் காளையார் கோயில் கோபுரம் முன் புதையுங்கள்! எனது உடலைத் திருப்பத்தூரில் புதையுங்கள்! வணிகம் செய்ய வந்த அந்நியன் இன்று நாடாளும் பேராசை கொண்டுவிட்டான். பொங்கியெழுங்கள்... அந்நியம் பொடியாகட்டும்.*

என்னும் உரையில் இவர்தம் வீரஉள்ளம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

### முப்பத்திரண்டாம் மாந்தர்: மக்கள்

மக்கள் எனும் கதை மாந்தர் 10,15,18 ஆம் காட்சிகளில் தோன்றுகின்றனர். கோரல்மில் கூட்டத்திலும், தூத்துக்குடி சுதேசிக்கப்பல் விடும் நாளிலும், திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றின் கரையிலும் இவர்கள் கூடி நின்று வ.உ.சி.க்குத் துணையாய் நின்றவர்.

### முப்பத்துமூன்றாம் மாந்தர்: மகராசன் என்னும் உலகநாதன்

இவர் காட்சி பதிமூன்றில் மட்டும் வருபவர். வ.உ.சி.யின் மகன். நோய்வாய்ப்பட்டு, தந்தையின் நினைவோடு உயிர்

துறந்தவர். 'கப்பல்' வாங்கும் நோக்கத்தால் வ.உ.சி. பம்பாய் சென்ற காலத்தில் இறந்தவர். நாட்டுப்பற்று நிறைந்தவர் வீட்டு இழப்பு இவர்மூலம் காட்டப்பட்டது.

### முப்பத்துநான்காம் மாந்தர்: மீனவர் இணையர்

மீனவ இணையர் இவர் பதினைந்தாம் காட்சியில் வருபவர். ஆசிரியரின் கற்பனை மாந்தர். தூத்துக்குடி கப்பல் விழா கலை நிகழ்ச்சியின் உறுப்பினர். தடைவிடை பாடல் மூலம் நாட்டு நடப்புகளைப் பாடி ஆடியவர். இவர் பாடல் வழி வ.உ.சி. பொங்கி எழுந்த சிங்கமாகவும், வெள்ளையரைத் தலைகுனிய வைத்தவர் என்றும் கூறப்பட்டுள்ளன. (இவர் பாடற் கருத்துக்களை நாடகத்துள் எடுத்தாளப்பட்ட இலக்கியங்கள் பாடல்கள் என்ற தலைப்பிற் காணலாம்)

### முப்பத்துஐந்தாம் மாந்தர்: மீனாட்சி

மீனாட்சி இவர் வ.உ.சி.யின் மனைவி. இவர் நாடகத்தின் 3,9,12 ஆம் காட்சிகளில் வருபவர். வ.உ.சி.யுடன் இவர் செய்யும் உரையாடல் இல்லற இணையர் சிறப்பினைக் காட்டுகிறது. இல்லறச் செயல்களைச் சிறப்பாய்ச் செய்த நல்லறப் பெண்மணி!.

உங்கள் (வ.உ.சி.) ஆழ்மனம் புரிகிறது. நாட்டடிமைக்குப் பெண்ணடிமையும் காரணம் என்கின்றீர்கள்; என்றும்; 'எனது மனச்சாட்சியே நீங்கள்தாங்க...'

என்றும், மூன்றாம் காட்சியிலே இல்லறச் செல்வியராக விளங்குகின்றார்.

"நகை எப்ப வேண்டுமாலும் கிடைக்கும் தொழிலாளர் வயிறு காத்திருக்காது... அக்கா திதியன்னைக் கிடைக்காத வாய்ப்பு இப்ப கிடைச்சிருக்குங்க"

என்று ஒன்பதாம் காட்சியில் கூறுவதன் மூலம் இவர் கொடைப் பண்பு அறியலாம்.

சுப்ரமணியசிவா சிதம்பரனாரைத் தெய்வம் என்று கூறுகையில்... மீனாட்சி

"தொழிலாளரும் சரி, நீங்களும் சரி அவரைச் சரியாய்ப் புரிந்துகொள்ளவில்லை. அவர் தெய்வமில்லை எல்லோரின் உள்ளம் கவர்ந்த பெருந் தெய்வம்"

என்று பன்னிரண்டாம் காட்சியில் புகழ்வதன் மூலம் வ.உ.சி.யின் செவ்வியப் பெருமை வெளிப்படுத்தப்படுகின்றது. மகன் இறப்புற்ற பதின்மூன்றாம் காட்சியில் சிவாவிடம்

'அண்ணா எங்கே போகின்றீர்கள் என் மகனின் இறப்பை அவருக்குத் தந்தி கொடுத்துத் தெரிவிக்கவா? வேண்டாமண்ணா இவர் செயலுக்கு எனது வீட்டு நிகழ்வுகள் தடையாக இருக்கக்கூடாது'

எனக் கூறும் சிறப்பே சிறப்பு. நாட்டுப்பற்றில் வ.உ.சி.க்கு இணையான நாட்டுப்பற்றாளர் மீனாட்சி என்று இந்நாடகத்துள் காண முடிகின்றது.

**முப்பத்துஆறாம் மாந்தர்: முடிதிருத்தும் முனியன்.**

முனியன் ஒரு முடிதிருத்தும் தொழிலாளி. இவர் இந் நாடகத்துள் இருபத்துமூன்றாம் காட்சியில் வருகின்றார். பி.ஏ.ஐயர் வீட்டில் ஐயர்க்கு முகமழிப்பு செய்யும்பொழுது பி.ஏ.ஐயர் தாமே சிதம்பரம் சிறை சென்றதற்குக் காரணம் என்கையில் பணியைப் பாதியில் நிறுத்திய அஞ்சா நெஞ்சினர்.

'ஐயரே நீர் என்ன கெஞ்சினாலும் உமக்கு ஊழியம் செய்யமாட்டேன்' என்றும்; உன்மேல் வழக்குதொடுத்து உள்ளே தள்ளுவேன் என்று ஐயர் கூறியபோது 'உம்மால அதுதான் முடியும். அப்படியாவது உள்ள போடு. சிவ ஐயா, சிதம்பர் ஐயாவை நான் அங்கேயாவது பார்க்க வாய்ப்பு கிடைக்கும்' என்றும்; முனியன் கூறியவழி பாமரனுக்கும் வ.உ.சி.யின் புகழ் தெரிந்திருக்கின்றதைக் காண முடிகின்றது.

**முப்பத்தேழாம் மாந்தர்: வள்ளியம்மை.**

இவர் வ.உ.சி.யின் மகள் ஆவார். ஒன்பதாம் காட்சியில் இவர் வருகின்றார். பாரதியோடு இவர் பேசும் பாங்கு சிறப்புடையது. கோரல் மில் தொழிலாளர்ப் போராட்டத்தில் பணத்தட்டுப்பாடு வந்தபோது 'சிலம்புள கொண்ம்' என்று கொடுத்த கண்ணகியைக் காட்டிலும் மேலாகக் 'கவலை படாதீர்கள் அப்பா! எனது கைவளையல்கள் இருக்கின்றன' என்று கூறியவள். நாட்டிற்குத் தொண்டு செய்வதில் வ.உ.சி., அவர் மனைவி மீனாட்சி, மகள் வள்ளியம்மை போட்டிப் போட்டுக் கொண்டு உதவியதை இக்காட்சி வழி அறியலாம். பாரதியோடு வள்ளியம்மை உரையாடும் உரையாடல் கருத்தாழம் பொதிந்தது.

*முப்பத்தெட்டாம் மாந்தர்: வெள்ளைத்துரை.*

இவர் கோரல் மில் மேலாளர். தொழிலாளரை மதியாச் சிறுமதியார். 7,19 ஆகிய இருகாட்சிகளில் வருபவர். ஏழாம் காட்சியில் வ.உ.சி.க்கு அஞ்சுபவராகவே காட்டப்பட்டவர். எனினும் வெள்ளை மேலாதிக்கம் நீங்கப் பெறாதவர் என்றும் காட்டப்பட்டுள்ளார். பத்தொன்பதாம் காட்சியில் வ.உ.சி.க்கு எதிரான சதிக் கூட்டத்தில் ஒருவராகக் காட்டப்பட்டுள்ளார்.

"சித்தாம்பரத்தால் (சிதம்பரத்தால்) நான் பட்டதெல்லாம் நட்டம், அவமானமே"

என்றும்,

"மூடிய மில்லைப் போராடித் திறக்க வைத்தார். பிரிட்டீசு கப்பல் கம்பெனியை மூடும்படியான நிலைமையும் வந்தாச்சு; இந்த சித்தாம்பரத்தை ஏதேனும் ஒன்று செய்தாக வேண்டும்"

என்றும் கூறியவழி இவர் வ.உ.சி.மீது கொண்டுள்ள வெறுப்பு புலப்படுகின்றது. இவரால் ஏற்பட்ட சோதனைகளையும் துன்பங்களையும் வ.உ.சி. உறுதியோடு வென்றுள்ளார்.

மேற்கூறிய ஒவ்வொரு நாடகக் கதை மாந்தவர் வழியே வ.உ.சி.யின் பண்பு நலன் விளக்கப்பட்டுள்ன.

## 22. நாடகத்தில் எடுத்தாளப்பட்ட இலக்கியங்களும் பாடல்களும்:

விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் என்னும் நாடகத்தில் நான்கு முழுப் பாடல்களும், பாரதியார்ப் பாடல்களும், திருக்குறள் செய்யுட்பகுதியும் பிறவும் எடுத்தாளப்பட்டுள்ளன. இவை குறித்து இவண் காணவிழைவோம்.

### 22.1. நாடகத்தில் வள்ளுவரின் குறட்பாக்கள்.

இந்நாடகத்தில் திருக்குறள் பலவிடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. காட்சி இரண்டில் கட்டப்பனால் ஏமாற்றப்பட்டு மது அருந்திய அப்பாதுரை சிற்றினத்தால் கேடு வரும் என்பதனை

**நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின்**
**அல்லற் படுப்பதும் இல்** (குறள். 460)

என்ற திருக்குறள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

காட்சி மூன்றில் வ.உ.சி.யின் கூற்றகாகப் 'பொருள் வைத்துக் காக்கும் பேழை ஏழையின் வயிறு' என்று கூறுமிடத்தில்,

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் நெடிதுயிர்க்கும் ஆறு.** *(குறள். 226)*

என்ற திருக்குறள் எடுத்தாளப்பட்டுள்ளது. காட்சி மூன்றில் கட்டப்பனால் ஏமாற்றப்பட்டு மதுவுக்கு மயக்கமுற்று வந்த அப்பாதுரையிடம் 'கள்ளுண்பதும் நஞ்சுன்பதும் ஒன்று' என்று கூறி,

**துஞ்சினார் செத்தாரில் வேறல்லர்; எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.** *(குறள். 926)*

என்னும் திருக்குறள் கையாளப்பட்டுள்ளது.

காட்சி ஐந்தில் தன்மானம் பற்றி வ.உ.சிதம்பரனார் பேசும்போதும்,

**மயிர்நீப்பின் வாழா கவரிமான் அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்.** *(குறள். 969)*

என்னும் திருக்குறளைக் கூறுவார்.

காட்சி பன்னிரண்டில் சுப்ரமணிய சிவா சிதம்பரனாரை வையத்துள் வாழ்வாங்கு வாழும் தெய்வம் என்று கூறும்போது,

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.** *(குறள். 50)*

என்ற திருக்குறள் கருத்தைக் கையாளுகின்றார்.

காட்சி பதினாறில் சுப்ரமணியசிவம் சிதம்பரம் பற்றிக் கூறுகையில் சிதம்பரம் எண்ணித் துணிபவர் என்கின்றார். இஃது,

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்ப திழுக்கு.** *(குறள் .467)*

என்னும் குறட் கருத்தாகும்.

காட்சி இருபத்திரண்டிலும் நிறைக்காட்சியிலும் தனக்குத்தானே வருந்தும் போழ்து,

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.** *(குறள். 341)*

என்னும் திருக்குறளைக் கையாளுகின்றார். இவ்வாறு இந்நூலில் திருக்குறள்கள் பல இடங்களிலும் கையாளப்பட்டுள்ளன.

## 22.2. எடுத்தாளப்பட்ட பாரதியின் பாடல்கள்

நாடகம் முழுதும் பாரதியின் பாமணம் வீசுகிறது. காட்சி ஒன்றிலும், காட்சி பதிமூன்றிலும்

வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம் - அடி
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்
பள்ளித் தளமனைத்தும் கோயில் செய்குவோம்
-எங்கள்
பாரத தேசமென்று தோள்தட்டுவோம்.

என்ற பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது.

காட்சி மூன்றில் மீனாட்சி (வ.உ.சி.யின் மனைவி)
வயிற்றுக்கும் சோறிடல் வேண்டும் - இங்கு
வாழும் உயிர்கட்கு எல்லாம்
பயிற்றுப் பலகல்வி தந்து - இந்த
பாரை உயர்த்திட வேண்டும்.

என்ற பாரதி பாடலின் முதலிரண்டு வரிகளைப் பயன்படுத்தவார்.

காட்சி ஆறில் சுப்ரமணிய சிவா தொழிலாளர் ஒற்றுமையாக்க பாடும்போது,

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வே!
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தால் பின்பு நமக்கெது வேண்டும்?.

என்ற பாரதியின் பாடலை எடுத்துரைப்பார்.

காட்சி ஒன்பதில் பாரதி வள்ளியம்மையிடம் தம்மை அறிமுகப்படுத்துகையில்,

நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்

என்று கூறுவது குறிக்கப்பட்டுள்ளது. அத்துடன்,

ஆடுவோமே பள்ளு படுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று
ஆடுவோம் - ஆடுவோம் - ஆடுவோமே!

என்ற பாடலும்,

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்
எல்லோரும் சமமென்ப துறுதி யாச்சு...
சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே - இதைத்
தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே!

என்ற பாடலும்,

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மாந்தரை நினைத்துவிட்டால்

என்ற பாடலும் பாரதியின் பாட்டாகவே எடுத்தாளப்பட்டுள்ளன. காட்சி பத்தில் கோரல் மில் தொழிலாளர் முன் பாரதி,

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா!
உறுதிகொண்ட தோளினாய் வா வா வா!
களிபடைத்த மொழியினாய் வா வா வா!
கடுமைகண்டு பொங்குவாய் வா வா வா!

எனும் பாடலைக் கூறுவதாகக் காட்சி அமைக்கப் பட்டுள்ளது. காட்சி இருபத்து மூன்றில் முடிதிருத்தும் முனியன் வழியே,

பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே -
வெள்ளைப்
பரங்கியைத் துரை என்ற காலமும் போச்சே!

என்ற பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது.

இப்பாடல்களின்வழி பாரதியின் பாடல்கள் இந்நாடகத்தில் எடுத்தாளப்பட்டுளதை அறிகின்றோம்!.

### 22.3. எடுத்தாளப்பட்ட பாரதிதாசன் பாடல்

பாரதிதாசனின்

ஓடப்பர் எல்லாம் உதையப்பர் ஆனார்
ஓடப்பர் உதையப்பர் எல்லாம் ஒப்பொப்பர் ஆவார்.

எனும் பாடல் கருத்து ஈண்டு காட்சி ஏழில் காட்டப்பட்டுள்ளது. வெள்ளைத்துரை முன்னர் வ.உ.சி.,

'இப்போது காலம் எம்மை ஓடப்பராகவும் உம்மை ஓட்டப்பராகவும் வைத்திருக்கிறது. ஓடப்பரெல்லாம் உதயப்பர் ஆனால் நீயும் நானும் ஒப்பொப்பர் ஆகிடுவோம் எச்சரிக்கை'

என்று கூறும் வழி பாரதிதாசன் பாவின் கருத்து ஈண்டு எடுத்தாளப்பட்டுள்ளது.

### 22.4. நாடகப்பாடல் வழி

இந்நாடகத்தில் நான்கு பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்களின்வழி வ.உ.சி.யின் பண்புகள் வெளிப்பட்டுள்ளன.

### 22.4.1. முதற் பாடல்.

வீரக்குரல் : வந்தே மாதரம்!
வந்தே மாதரம்!
வந்தே மாதரம்!

பாடல் : வந்தே மாதரம் என்போம் - நம்
தாய்த்திரு நாட்டை
வணங்கிநாம் வாழுவோம் (வந்தே மாதரம்...)
இமயமும் குமரியும்
எங்களின் எல்லை...
இனியொருபோதும் நாம்
அடிமைகள் இல்லை (வந்தே மாதரம்...)
பயமில்லை பயமில்லை
பயமென்ப தில்லை...
பயந்திங்கு வாழுவோர்
பாரதர் இல்லை (வந்தே மாதரம்...)

இந்தியம் என்றிடும்
எந்திரு நாட்டை...
அந்நியர் வந்திங்கு
ஆளுகை நன்றோ? (வந்தே மாதரம்...)

வெந்ததைத் தின்றிங்கு
விதிவர மாயோம்...
சொந்தத் திருநாட்டில்
அடிமையாய் வாழோம்! (வந்தே மாதரம்)

வந்தேமாதரத்தின் பொருளாகப் பாரதி கண்ட 'மாநிலத் தாயை வணங்குதும் என்போம்' என்ற பொருள்படப் பாடல் தொடங்கப்பட்டுள்ளது.

இமயம், குமரி பாரத எல்லையாகவும் இனி ஒருபோதும் அடிமையர் இல்லையென்றும்,

பயமில்லை என்றும், பயந்து வாழ்வோர் பாரதத் திருநாட்டின் மக்கள் இல்லையென்றும்,

இந்திய திருநாட்டை அந்நியர் ஆளுதல் நன்றில்லை என்றும்,

வெந்ததைத் தின்று விதிவர மாண்டுபோகோம், சொந்தத் திருநாட்டில் அடிமையாய் வாழோம் என்றும் வ.உ.சி. எண்ணுவதாகக் காட்டப்பட்டுள்ளது.

### 22.4.2. பாடல் : இரண்டு

இரண்டாம் பாடற் காட்சி, இது காட்சி எட்டில் வருகிறது. இது பூழித்தேவன் போருக்குப் புறப்படுவதாக அமைந்த வீரப்பாடலாகும்.

*ப்றப்பட்டார்... புறப்பட்டார்... (பாடல்)*

*புறப்பட்டார் புறப்பட்டார்*

*பூழித் தேவன்*
*பொங்கி எழுந்ததும்*
*பூழிப் படையே (புறப்பட்டார்)*

*யூசூப்பின் படைகளும்*
*கேதானின் படைகளும்*
*நாடி தளர்ந்தன*
*ஓடி ஒளிந்தன... (புறப்பட்டார்)*

*தமிழரின் தன்மானம்*
*தரணியில் நிலைத்திட*
*தகும்வழி செய்திட்டார்*
*பூழித் தேவன்... (புறப்பட்டார்)*

*வெள்ளைப் பெரும்படை*
*துள்ளி விழுந்தது...*
*கள்ளவழி வந்தார்*
*இல்லை யென்றாகினார்... (புறப்பட்டார்)*

போருக்குப் பூழித்தேவன் புறப்பட்டதையும், பூழிப்படை பொங்கி எழுந்தமையும்,

யூசிப்பின் படையும், கேதானின் படையும் நாடி தளர்ந்து ஓடி ஒளிந்தமையும்,

தமிழர் தன்மானம் காக்கத் தக்க வழி கண்பவர் பூழித்தேவன் என்றும்,

வெள்ளையர்ப் படை வீழ்ச்சியும், அவரின் கள்ள வழி அழிய, அவர் இல்லை என்று ஆக்கிய செம்மையும் இவண் கூறப்பட்டுள்ளன.

இப்பாடல் வழி தமிழர் போர்நெறிகள் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

### 22.4.3. மூன்றாம் பாடல் காட்சி

பதினைந்தில் அமைந்துள்ளது தூத்துக்குடிக் கப்பல் விழாவில் பாடலாக இது அமைந்துள்ளது. எல்லாம் இருந்தும் இங்கு செழுமை முதலானவை இல்லாமல் போனதன் காரணங்கள் இங்கே விவரிக்கப்பட்டுள்ளன.

பாடல் : மூன்று.

எல்லாமும் இருந்திங்கும்
எல்லாமும் இருந்திங்கும்
எல்லாமும் இல்லாமல் போச்சி - இங்கு
எதனாலே இந்த நிலை யாச்சி?

கண்ணான கண்ணாட்டி
என்மனசு பொண்டாட்டி
என்னான்னு என்னான்னு சொல்லு - இது
எதனாலே என்று சொல்லி வெல்லு...

எல்லாமும் இருந்திங்கும்
எல்லாமும் இருந்திங்கும்
எல்லாமும் இல்லாமல் போச்சி - ஒற்றுமை
இல்லாமல் இந்தநிலை யாச்சி...

என்மனது பொன்னாளா
கண்ணாட்டி சொல்லிவிட்டேன் கேளு - மனம்
புண்ணாக்கிப் போடாமல் மாறு (எல்லாமும்...)

ஒற்றுமை இல்லாமல் எல்லாம் போயிற்று என்றும்,

ஆட்டுத் தோலளவு
ஆட்டுத் தோலளவு
இடம் கேட்டு விற்க வந்த ஆளு - எப்படிப்
படமெடுக்கும் பாம்பானான்? கூறு...
(கண்ணான... கண்ணாட்டி)

ஆட்டுத் தோலளவு
ஆட்டுத் தோலளவு
இடங்கேட்டு விற்க வந்தான் மாற்றம் - நாம்
மடங்கொண்டு தந்து வைத்த ஏற்றம்...
(கண்ணான... கண்ணாளா)

ஆட்டுத் தோலளவு இடம் கேட்டு வந்தவன் ஆளும் படம் எடுக்கும் பாம்பானது நமது அறியாமையால் என்றும்;

பிரித்துப் பிரித்து வச்சி
பிரித்துப் பிரித்து வச்சி
பேதங்கள் வளர்த்து விட்ட ஆளு - இங்கு
பேதமின்றி போடும்வேடம் கூறு
(கண்ணான... கண்ணா)

பிரித்துப் பிரித்து வச்சி
பிரித்துப் பிரித்து வச்சி
பேதங்கள் வளர்த்து விட்ட ஆளு - இங்கு
போடும் வேடம் நரியென்று கூறு
(கண்ணான... கண்ணாளா)

பிரித்து வைத்தும் பேதங்கள் செய்யும் வெள்ளையன் போடும் வேடம் நரியென்றும்,

அப்பம் பிரிக்கச் சொல்லி
அப்பம் பிரிக்கச் சொல்லி
அள்ளித் தந்த பூனைகளாய் நாமும் - அதைக்
கள்ளித் தின்ற வெண்குரங்கு யாரு?
(கண்ணான... கண்ணாட்டி)

அப்பம் பிரிக்கச் சொல்லி
அப்பம் பிரிக்கச் சொல்லி
அள்ளித் தந்த பூனைகளாய் நாமும் - அதைக்
கள்ளித் தின்ற வெண்குரங்கு வெள்ளைக்காரன்
(கண்ணான... கண்ணாளா)

அப்பம் பிரிக்கச் சொல்லும் பூனைகளாய் நாமும் அதனைக் கள்ளத்தனமாய் தின்ற வெண்குரங்கு வெள்ளையர் என்றும்;

எங்கள் தலைநிமிர
எங்கள் தலைநிமிர

பொங்கி எழுந்த சிங்கம் இங்கு யாரு - அவர்
பொன்னான பெயரையிங்குக் கூறு

(கண்ணான... கண்ணாட்டி)

எங்கள் தலைநிமிர
எங்கள் தலைநிமிர
பொங்கி எழுந்த சிங்கம் இங்கு கேளு - அவர்
பொன்னான சிதம்பரமே கூறு

(கண்ணான... கண்ணாளா)

பொங்கி எழுந்த சிங்கம்
பொங்கி எழுந்த சிங்கம்
என்ன செயல் செஞ்சாரு கூறு - அவர்
என்ன செயல் செஞ்சாரு கூறு.

(கண்ணான... கண்ணாட்டி)

பொங்கி எழுந்த சிங்கம்
பொங்கி எழுந்த சிங்கம்
தனிக் கடலில் கப்பல் விட்டார் பாரு... வெள்ளைத்
தலைகுனிய கப்பல் விட்டார் பாரு...

(கண்ணான... கண்ணாளா)

நம் தலைநிமிரச் செய்த சிங்கம் சிதம்பரம் என்றும், அவர் தனிக்கடலில் கப்பல் விடுவார் என்றும்,

வெள்ளையர் இழிவும், வ.உ.சி.யின் பெருமையும் இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளன.

**22.4.4.** பாடல் : நான்கு

காட்சி இருபத்திரண்டில் வருகின்றது.

இதுவென்ன சோதனை?(சிதம்பரம் மண்வெட்டி சுமத்தல்.

இதுவென்ன வேதனை? காவலன் சாட்டையால் அடிபடல்)

சொல்லடி சிவசக்தி! - பதில்
சொல்லடி நவசக்தி! (இதுவென்ன)

உன்திரு விடுதலை
எண்ணிய மைந்தரை
வன்சிறை கொடுமையுள்
வாடுவ தென்னடி?

*காக்க மறந்தனையோ? - பயிர்*
*காவல் விடுத்தனையோ (இதுவென்ன)*

*இது என்ன சோதனை? இது என்ன வேதனை? உன் விடுதலை எண்ணிய மைந்தனை வன்சிறையுள் வாட்டுவது என்ன?*

*காக்க மறந்தாயோ? காவல் விடுத்தாயோ? என்று பாரதி பாடுவதாக அமைந்துள்ளது. மேலும்*

*செந்நீரும் கண்ணீரும்*
*சிந்தி விளைபயிர்*
*வந்தே மாதரம்*
*என்று வளர்பயிர்*
*தீய்க்கத் திருவுளமோ?...*
*அருள் நோக்கம் மறந்தனையோ? ( இதுவென்ன)*

*நற்றமிழ் நாதனின்*
*நாடி தளர்ந்திட* (சிதம்பரம் கல்லுடைத்தல் கற்றவன் கைகளில் சாட்டை அடிபடல்)
*சுத்தியல் தந்தனர்*
*தாக்க விடுத்தனையோ?... நிலை*
*தாழ விடுகுவையோ? (இதுவென்ன)*
(சிவன், சக்தி உருத்திரத்தாண்ட நடனம்.)

*'குருதியும் கண்ணீரும் சிந்தி வளர்த்த வந்தே மாதரம் என்னும் பயிரைத் தீய்த்திட உள்ளம் கொண்டாயோ? அதன் நோக்கம் மறந்தாலோ?' என்றும்,*

*நாட்டுக்கு விடுதலை*
*நாட்டிய செல்வனை*
*மாட்டுக்கும் கீழாக* (சிதம்பரம் செக்கிழுத்தல் வாட்டுவ தென்னடி? சாட்டை அடிபடல்)

*ஆக்கம் மறந்தனையோ?... உயிர்*
*போக்கத் துணிந்தனையோ...?*

*நாட்டு விடுதலை நாட்டிய செல்வனை மாட்டிற்குக் கீழாக நடத்தி வாட்டுகின்றார். ஆக்க வழியை மறந்தாயோ? அவர் உயிரைப் போக்கத் துணிந்தாயோ?*

*செக்கினில் பூட்டியே*
*செருக்கினால் சிரித்தனர்*

**நக்கலர் மேலுற**
**நல்லவர் வாட்டினை...**
**சொல்லடி சிவசக்தி - பதில்**
**சொல்லடி சிவசக்தி...** (சிதம்பரம் மயங்கி விழுதல்)

செக்கில் பூட்டிச் செருக்கால் சிரிப்பவர் சிரிக்க, நல்லோரை வாட்டுகின்றாய் ஏன் சொல்லடி' எனும் பாரதியின் குரலாக இப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது.

**சொல்லடி சொல்லடி...**
**சொல்லடி சொல்லடி...**
**சொல்லடி சொல்லடியே!**

(பாரதி மயங்கி விழுதலும் சிவசக்தி உருத்திரதாண்டவமும்)

வ.உ.சி. மண் தூக்கியும், கல்லுடைத்தும், செக்கிழுத்தும் பட்ட துயரங்கள் இப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 22.5. திரையிசைக்குரிய பாடல்கள்

இந் நாடகத்தில் திரையிசைக்குரிய பாடலும் எடுத்தாளப்பட்டுள்ளது.

**உன் பணம் பணம் பணம்**
**என் பணம் பணம் பணம்**

எனும் பாடல்,

**ஓம் குணம் குணம்**
**ஓம் பணம் பணம்**
**எது பெரிசு சொல்லு - நீ**
**எது பெரிசு சொல்லு.**

என்று கட்டப்பன் வெள்ளைக்கானிரன் வெள்ளிக் காசை வைத்துக்கொண்டு பாடுவதாகக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக இந்நாடகத்தில் இலக்கியச் செய்யுட்களும், இசைப் பாடல்களும் கருத்துச் செறியுடன் எடுத்தாளப்பட்டு, வ.உ.சி.யின் பண்பு நலன்கள் தோன்ற அமைக்கப்பட்டுள்ளன.

## 23. வ.உ.சி.யின் இலக்கியமும் வாழ்வும்.

இலக்கியத்தோடு இயைந்த அறவாழ்வின் செம்மல் வ.உ.சி. அறம், பொருள், இன்பம், வீடு அளிப்பது இலக்கியமே என

உணர்ந்தவர் வ.உ.சி. தமது வாழ்க்கையின் பட்டறிவினை உலக மாந்தர் பெற பன்னூல்களை அளித்தவர் வ.உ.சி.. அவற்றுள் அவர் சிறைவாழ்வில் பூத்த சிந்தனை மலர்களாம் மெய்யறிவு, மெய்யறம் வழியே அவர் எண்ணம், சொல், செயல்பாடுகளை இவண் காணுதல் பெருமை தரும்.

வ.உ.சி.யின் அறிவுச்செம்மை, அடக்கச்சீர், ஒழுக்கச்செம்மை, ஊக்கச்செம்மை, உள்ளம் உடைமை, பொறுமைச் செல்வம், சிற்றினம் சேராச்செம்மை, உடல் ஓம்பல், ஆசிரிய மாணவர் பண்பு, சமுதாயச் சீர்திருத்தம் முதலான தலைப்புகளில் வ.உ.சி.யின் இலக்கிய வாழ்க்கையைக் காண முயல்வோம்.

### 23.1. அறிவுச் செம்மை

அறிவு என்பது ஆவது அறிதல் (குறள். 427) என்றும்; அறிவு அற்றம் காக்கும் கருவி (குறள். 421) என்றும்; அறிவுடையார் எல்லாம் உடையார் (குறள். 430) என்றும் வள்ளுவர் அறிவின் சிறப்புகளைக் கூறுகின்றார். வ.உ.சி.யோ,

**உண்மையறிவு என்பது உலகத்து நன்னூலின்**
**திண்மை அறிந்(து)அவ் வழியே சென்றிடுதல்.**
(மெய்யறம். 7)

என்றும்,

**அறிவில் லாதார் யாதுமில் லாதார்.** (மெய்யறம். 7)

என்றும்,

**அறிவு பகைவரால் வழிக்கப் படாதது**
**அறிவினை யுடையார் அனைத்தும் உடையார்.**
(மெய்யறம். 7)

என்றும் அறிவின் செம்மையை வ.உ.சி. தனது வாழ்வின் கடைபிடிப்பாகக் கொண்டு வாழ்ந்துள்ளார். தாம் வாழ்ந்த வாழ்வைத் தமது இலக்கியத்துள்ளும் படைத்துள்ளார்.

### 23.2. அடக்கச்சீர்

அடக்கம் அமரருள் உய்க்கும் (குறள்.121) என்பார் வள்ளுவர். பணியுமாம் பெருமை (குறள்.978) என்பதும் அவர் வாக்கு. அறிவிலார்க்கு என்றும் அடங்கி ஒழுகல் (மெய்யறம். 15) என்றும்,

அடக்கநன் னெறியின் அடக்கச் செய்யும்;
அடக்கமில் லாமை அதைகடக் கச்செய்யும்;
அடக்கம் பல்வகை ஆக்கமும் தருமே
அடக்க மிலாமை அழிவெலாந் தருமே.

(மெய்யறம், ப.15)

என்பதும் வ.உ.சி.யின் வாக்காகும். பணிவைப் பண்பாகக் கொண்ட வ.உ.சி.யின் இலக்கியங்களும் அவர் பண்பு நலனைக் காட்டுகின்றன.

### 23.3. ஒழுக்கச் செம்மை

வ.உ.சி. தனிமனித ஒழுக்கமும், சமுதாயப்பண்பாட்டு ஒழுக்கமும் நிறைந்தவர்.

ஒழுக்கம் விழுப்பம் தருமென்று (குறள். 131)

உணர்ந்து செயல்பட்டவர். "உயர்ந்தோர் நன்னடை ஒழுக்கம்" என்பதனை,

ஒழுக்கம் என்பது உயர்ந்தோர் நடையே

(மெய்யறம், ப.16)

என்பதால் உணர்த்துகின்றார். எண்ணம் சொல் செயல் ஒன்றாகக் கொள்ளும் நடையை "நினைவுஞ் சொல்லும் வினையுமென்(று) ஆக்கம்" (மெய்யறம். 16) என்பதால் வலியுறுத்துகின்றார்.

உள்ளமதால் நாவால் உடம்பால்இங்(கு)எவ்வுயிர்க்கும்
எள்ளளவும் தீங்கிழையா(து) இச்சையின்றி - நன்செய்
ஒழுக்கத்தான் மேம்படுவர் இங்கு. (மெய்யறிவு, பா.76)

எனும் பாடல்வழி வாழ்வார்க்கு மனம், மொழி, மெய்யால் ஒழுக்கம் வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஒழுக்கச் சீலராம் வ.உ.சி.யின் வாழ்வும் இலக்கியமும் ஒன்றே என்போம்.

### 23.4. ஊக்கச் செம்மையாளர்

ஊக்கம் உடையான் இடத்திற்கு ஆக்கம் வழிகேட்டுச் செல்லும் (குறள். 594) என்பார் வள்ளுவர்.

உள்ளம் (ஊக்கம்) உடைமை உடைமை. (குறள். 592)

என்பதும் அவர் வாக்காகும். வ.உ.சி.யோ,

தவறினும் தாழ்ப்பினும் தளர்ச்சி எய்தற்க.

(மெய்யறம், ப. 17)

என்றதுடன்,

ஊக்கம் உடைமை உலகெலாம் கொண்டும்,
ஊக்கம் இலாமை உடையவும் போக்கும்
ஊக்கம் உடையார் உயர்ந்தோர் ஆவார்.

(மெய்யறம், ப.17)

என்றும் சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்த வ.உ.சி.யின் சிறப்புரை இவையாம். இலக்கிய வாழ்வும் இவையாம்.

### 23.5. உள்ளம் உடைமையர்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற. (குறள். 34)

என்பார் வள்ளுவர். உடல் மட்டும் வளர்க்கும் மனிதன், உள்ளம் வளர்க்காத விலங்கே. உள்ளச் செம்மை கொள்ளாத உடல் உள்ளீடு அற்ற - உயிரற்ற - பிணமாம். வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளல் உள்ளம்போல், நெறிதவறி வாடிய கைதிகளுக்காக வருந்தியவர் வ.உ.சி.

மனம்தான் உனக்கு வசப்பட்டு அடங்கும்
தினம்தான் உனக்கு நலசேர் நாள். (மெய்யறிவு, பா. 40)

என்று அறிவுறுத்தியவர் வ.உ.சி..

மனம் முத்தொழில் செய்யும் மா சக்தி.

(மெய்யறம், ப.7)

என்று மனத்தின் உள்ள ஆற்றலை வெளிப்படுத்துகின்றார். மனம் மடக்கி மடைமாற்றி அறத்தின்வழி செல்லின் உண்டாகும் நன்மைகளை,

மனத்தின்கண் செல்லாது மாணறங்கள் சார்ந்த
புனத்தின்பின் நித்தமிதைப் போக்கின் - றனத்தும்
பிறவற்றும் கால்பெய்தி பேரின்ப வெள்ளத்து
திறவுற்று வாழ்வார் இவண். (மெய்யறிவு, பா.33)

என்பார் வ.உ.சி.

மனச் செயலைக் காத்து அறம் எனில் செய்தும், மறமெனில் விலக்கியும் வாழ்தல் வேண்டுமென்பார் வ.உ.சி..

### 23.6. பொறுமைச் செல்வம்

நிறைவுடைமை வேண்டுவார்க்கும்
பொறையு டைமை வேண்டும் (குறள். 154)

என்பது வள்ளுவரின் வாக்கு.

உண்ணாது நோற்பவரி னும்இன் னாச்சொல்
பொறுப்ப வர்பெரி யவர் (குறள். 160)

என்பதும் அவர் வாக்கு.

'பொறுமைதான் உன்றன் உடைமை - அதைப்
போற்றலே நமது கடமை.'

என்பது பாரதிதாசன் பா நெறியாகும். இப்பொறுமையைப் பெறுதல்

வறுமைப் பிணிக்கு பொறுமைநன் மருந்து
பொறுமையைக் கொண்டவர் புவியெலாம்
கொள்ளுவர்.

என்பார் வ.உ.சி.. 'பொறுத்தார் பூமிஆள்வார்' என்னும் பழமொழியை வலிமைப்படுத்துவதாக வ.உ.சி.யின் மொழி திகழ்கின்றது. இக்கூற்றின்வழி அவர்தம் இலக்கிய வாழ்வு புலப்படுகின்றது.

### 23.7. சிற்றினம் சேராச் செம்மையார்

சிற்றினம் சேருதல் சிறுமை தரும். பெரியாரைத் துணை கோடல் பெருமைதரும்.

அவரை அறிந்துகொண்டு அனுதினம் ஓம்புக!
அவர்க்குரி யனவெலாம் அன்பொடு வழங்குக!
அவரோடு எண்ணியே அனைத்தும் செய்க!
அவரைப் பிழையாது யாங்கனும் ஒழுகுக.
(மெய்யறம். 22)

என்றும் வ.உ.சி. தம்வாழ்வில் கடைபிடித்துக் கூறிய அறிவுரையாம்; இலக்கிய வாழ்வுமாம்.

### 23.8. உடலோம்பல்

ஒருவர் எண்ணம், சொல், செயல் சீராக நிறைவேற அவர்க்கு உடலோம்பல் இன்றியமையாத ஒன்றாகும்.

சுவரின்றி சித்திரம் ஏது?

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்,
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்,
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்,
உடம்மை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே!'

(திருமந்திரம்)

என்பது திருமூலரின் திருவாக்கு. வ.உ.சி.யும் உடலுயிர் போற்றிய செம்மையாளர்.

உடம்பு எல்லாம் செய்யும் ஒப்பில்லாக் கருவி

(மெய்யறம், ப.7)

என்றும்,

உளத்தொழில் செயற்கும் உடலுரம் வேண்டும்

(மெய்யறம், ப.7)

என்றும் மெய்யறத்தில் வ.உ.சி. பகர்வார்.

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணில்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. (குறள். 945)

என்பார் வள்ளுவர். இதனை மெய்யறத்துள்,

மாறுபாடு இல்லாஊண் மறுத்து முப் பொழுதுமுணல்

(மெய்யறம், ப.7)

சிலம்ப மெய்ப் பயிற்சிகள் தினந்தோறும் செய்க

(மெய்யறம், ப.7)

என்று கூறியுள்ளார். மெய்யறிவு என்னும் நூலில் வைகறை, காலை, மதியம், மாலைக்கடனைக் கடமைகளை வ.உ.சி. வகுத்துக் கூறுவார்.

வைகறையில் கண்விழித்து மாசொழிந்து மெய்யறங்கள்
கைவரதற்கு ஈசனருள் கண்ணிப்பின் மையல்
அறுத்தற்காம் நூல் நன்(கு)ஆய்ந் தியானை மெய்யில்
செறுத்தற்கா நற்சிலம்பம் செய். (மெய்யறிவு, பா.25)

எனக் காலைப்பணிகளைக் கூறியுள்ளார். மேலும்

காலையிலே மாஏறிக் காதவழி சென்றுவந்து
சோலையிலே சற்றிருந்து சோர்வகற்றி - பால்நெய்யில்

**அட்டஉண(வு) உண்(டு)உதயத்(து) அப்பால் உன்**
**வேலைகளைத் திட்டப்படி செய்.** *(மெய்யறிவு, பா.26)*

எனக் காலைப்பணிக்கும் பட்டியல் இடுகின்றார். மேலும்,

**மதியம் வருமுன்னர் வாழ்நீர் குளித்துப்**
**புதியகறி நெய்தயிர்நெல் பொங்கல் - பசியளவிற்(கு)**
**உண்டிருந்து வெற்றிலைப்பாக்கு; ஊறுநீர் மூன்றருந்தி**
**கண்டிப்பாய் வேலை களை.** *(மெய்யறிவு, பா.27)*

என மதியப் பணிகளைத் திட்டமிட்டு, மேலும்,

**மாலை மலங்கழித்து மாணீசன் தாள்தொழுது**
**நாலைந்து நாழிகைக்கு உணல்கூட்ட - பாலினெய்யில்**
**கோதுமைசேர்த்(து,) உண்டு குறுநடைபின்**
**கொண்டுதுயில்**
**மாதுமதிக்(கு) ஓர்கால் மருவு** *(மெய்யறிவு 29)*

என மாலைக் கடன் பணிகளை வகுத்து வ.உ.சி. கூறியுள்ளார்.

உடலோம்பல் பண்பினை ஊருக்கென்று சொல்லாமல் தாமும் பயன்படுத்திக் காட்டியவர் வ.உ.சி.. அவர் எண்ணம், சொல், செயல் எல்லாம் ஒன்றான இலக்கிய நெறியாளர் என்பது உறுதி.

### 23.9. ஆசிரியரும் மாணவரும்

வ.உ.சி.யின் கருத்து ஆசு நீக்கும் அரும்பணியாகும். ஆசிரியர்,

**குலன், அருள், தெய்வம், கொள்கை மேன்மை,**
**கலையில் தெளிவு, கட்டுரை வண்மை**
**நிலம், மலை, நிறைகோல், மலர்நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்**
**அமையவன் நூலுரை ஆசிரியன் யன்னே.**
*(நன்னூல், பாயிரம்.26)*

என நன்னூல் பகுத்துரைக்கும். வ.உ.சி.யோ,

**அவர்கடன் மாணவர் அறிதிறன் அறிதல்,**
**நல்வினை விரும்பு நல்லவர்க் கோடல்,**
**மாணவர் தமைத்தம் மகரெனப் பேணல்,**
**அறிந்தவை யெல்லாம் செறிந்திடச் சொல்லல்,**
**சொல்லிய செய்யவும் வல்லதர் ஆக்குதல்.**
*(மெய்யறம், ப.16)*

எனும் ஐந்து நிலைகளை ஆசிரியர்க்கு வ.உ.சி. உரைக்கின்றார். அஃதேபோல மாணவர்க்கும் ஏழு வகையில் வ.உ.சி. நெறிகாட்டுகின்றார். அவை:

**அவர்கடன் விதியியல் அறிந்து நன்காற்றல்;**
**அன்னை தந்தையர் ஆதியைத் தொழுதல்;**
**தீயினம் விலக்கி நல்லினம் சேருதல்;**
**தக்க ஆசிரியரால் தண்ணியல் அறிதல்;**
**ஒழுக்கமும் கல்வியும் ஒருங்கு கைக்கொள்ளல்;**
**இறைவன் நிலையினை எய்த முயலல்.**

இவ்வழி ஆசிரியர் மாணவர் மாண்பினை வ.உ.சி. இலக்கியத்துள் படைத்துள்ளார். வாழ்ந்தும் காட்டியுள்ளார்.

### 23.10. சமுதாயச் சீர்திருத்தம்

வ.உ.சி. சமுதாயச் சீர்திருத்த செம்மையாளர். பெண்ணடிமை கொள்ளாத பெருந்தகையார். சமுதாயச் சீர்திருத்தம் நாடி நம் நாட்டவர் கொண்ட மன அழுக்குகளைக் களைய முனைந்துள்ளார்.

**காமம் அகத்தெழும் மாமத வெறி** *(மெய்யறம், ப.9)*

என்றும்,

**காமம் அகப்புறக் கண்களைக் கெடுத்திடும்.**
*(மெய்யறம், ப.9)*

என்றும் காமத்தின் கேட்டினைக் கூறுகின்றார்.

குடிகெடுக்கும் கள்ளைக் குடியாமை நன்றென்றே சமுதாயச் சிந்தையர் வ.உ.சி..

**கள்ளுண்ணத்தரும் காசும், கள்விற்றலும்**
*(மெய்யறிவு, பா.54)*

கள்ளாக்கலும், கள் உண்பாரை விரும்பலும், தவறு என்பார். 'ஈன்றாலும் வெறுக்கும் கள்ளை' ஏன் அருந்துதல் வேண்டும் என்பதும் இவர் கருத்தாம்.

சூது என்பது தூண்டிற் புழுவாகும். உணவெனக் கருதிய மீன் உயிர் இறுதல் போன்றதாம். இச்சூதினை,

**பொறையும் அறிவும் புகழும் கெடுக்கும்**
*(மெய்யறம், ப.9)*

என்பார் வ.உ.சி..

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன்.** *(குறள். 605)*

என்பார் வள்ளுவர். வ.உ.சி.யும்,

**நெடுநீர் குறைபல தருமியல்பு உடையது**
*(மெய்யறம், ப.24)*

என்று நெடுநீர் பற்றியும்,

*மறவியை அடுத்தவர் மாண்புஎல்லாம் இழப்பர்*
*(மெய்யறம், ப.25)*

என்று சோம்பலாம் மடி குறித்தும்,

**கனவுகளாம் துயில் கவலையை வளர்க்கும்**
*(மெய்யறம், ப.25)*

**தொழில் செயும்போது துயில்வரின் உலாவுக**
*(மெய்யறம், ப.25)*

என்றும் வலியுறுத்துகின்றார்.

**23.11.** தன்னறிதல்

**உன்னை அறிந்தால் - நீ**
**உன்னை அறிந்தால்**
**உலகத்தில் போராடலாம்;**
**உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் - மனம்**
**கலங்காமல் நீ வாழலாம்!**

என்பது திரையிசையாகும்.

வ.உ.சி. தன்னை அறிதலே முதலாம் கல்வி என்கின்றார்.

**தன்னை அறிதலே தலைப்படும் கல்வி.** *(மெய்யறம், ப.6)*

என்றும், அத்தோடு,

**தன்னைப் பேணுவது முதற்கடமை** *(மெய்யறம், ப.6)*

என்பார்.

**தன்னைப் பேணார் தாழ்வே அடைவார்**
**தன்னைப் பேணுவோர் தலைமை எய்துவர்.**
*(மெய்யறம், ப.28)*

எனத் தன்னைப் பேணுதல் - அறிதலை மெய்யறமாகக் கூறுவார் வ.உ.சி.. வாழ்விற்கு நன்னெறியாகக் குடும்பத்தைக் கூறுவார் வ.உ.சி.. மக்களைப் பேணல், சுற்றம் போற்றல் முதலான நன்னெறிகளைச் - சமுதாயச் செந்நெறிகளை - மெய்யறம், மெய்யறிவுவழி விளக்கியுள்ளார்.

## 24. நாடகத்துள் காணும் வ.உ.சி.யின் பண்புகள்

அகம் நாடச் செய்வது நாடகமாகும். ஐம்பொறிப் புலன் உணர்வை எண் மெய்ப்பாட்டு நிலையில் இயல், இசை, கூத்தாக விளங்குவது நாடகம். 'விடுதலைச் சிந்தனையாளர், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.' என்னும் எமது நாடகமும் இந்நெறிகள் சார்ந்ததெனச் சான்றவர் பலரும் கருதுகின்றனர். எமக்கும் இதில் ஐயம் இல்லை. இந்நாடக வாயிலாக இதன்கண் அமைந்துள்ள வ.உ.சி.யின் பண்பு நலன்களைக் காணப்புகுவோம்.

### காட்சி : ஒன்று

ஒட்டப்பிடாரத்தில் தொடங்குகின்றது. வந்தே மாதரம் என்போம் என்னும் வீரப்பாடலுடன் தொடங்குகின்றது. தந்தை உலகநாதருடன் சிதம்பரனார் உரையாடுவதாக இக்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இதில் வ.உ.சி. ஊழலுக்கும், குற்றங்களுக்கும் எதிரானவர் என்றும்; நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்ற குணமுடையவர் என்றும்; நேர்மையில் மாறாதவர் என்றும்; மனச்சாட்சிப்படி நடப்பவர் என்றும் முதற்காட்சியில் விளக்கப்பட்டுள்ளது.

தமது நேரிய பண்பால், நீதி தவறிய நீதியர்க்கும், நெறி தவறிய காவலர்க்கும் எதிராக நடந்தமையால் அவரைச் சுற்றி முள்மரம் கிளைத்துள்ளதையும் காட்டப்பட்டுள்ளது.

அப்பாதுரை என்னும் கதைமாந்தவர்வழி வ.உ.சி. நல்லவர். தவறு செய்தால் கோபப்படுவார் என்பதையும் விளக்கப் பட்டுள்ளது.

அடி மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம் என்ற வ.உ.சி.யின் எதிர்காலத் திட்டத்தையும் இக்காட்சியில் உய்த்துணர முடிகின்றது.

### காட்சி : இரண்டு

மதுவென்று தெரியாமல் அப்பாத்துரை, கட்டப்பனால் மதுவருந்த, 'அய்யோ நான் என்ன செய்வேன், சிதம்பரம்

தம்பிக்குத் தெரிஞ்சாக் கொன்னுடுவாரே' என்று கூறச்செய்து சிதம்பரம் மதுவிற்கு எதிரான பண்பாளர் என்பதனைக் காட்டப்பட்டுள்ளது.

காட்சி : மூன்று

சிதம்பரனாரின் இல்லறச் சிறப்பை இக்காட்சி காட்டுகின்றது.

ஆணுக்கு இணையாகப் பெண்டிர் அனைத்திலும் பங்குபெறவேண்டும்; பெண்ணடிமை கூடாது; தான் உண்ட எச்சில் இலையில் உண்ணக்கூடாது; சிரார்த்தம், திவசம் போன்ற மூட நம்பிக்கை கூடாது; ஏழைக்கு உதவுதலே அறம்; கவிஞர்க்கும், புலவர்க்கும் உதவும் பண்பு; சுப்பிரமணிய சிவாவைப் (துறவியைப்) போற்றிய பண்பு; தவறுகளை மன்னிக்கும் பண்பு முதலான வ.உ.சி.யின் பண்புகள் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

காட்சி : நான்கு

வீரபாண்டிய கட்டபொம்மன் ஒத்த வீரத்தவர் என்பதனைக் காட்டி, சிதம்பரம் ஒரு அக்கினிக் குஞ்சு அவரின் இப்பண்பால் அந்நியர் சுடப்பட்டு நாடு விடுதலையைப் பெறும் என்று சுட்டப்பட்டுள்ளது. சிதம்பரம் தீவிரவாதியிலும் மேலான அதிதீவிரவாதி என்ற பண்பும் இவண் சுட்டப்பட்டுள்ளது.

காட்சி : ஐந்து

அந்நியப் பொருள்களைத் தீயிட்டுக் கொளுத்திய வீரமும்;

கோரமில் தொழிலாளர் கொண்ட துன்பத்தை நீக்கும் உள்ளமும்; இக்காட்சியில் சுட்டப்பட்டுள்ளன.

போராட்ட நெறியில் முதலில் பேச்சு, பின் போராட்டம் என்ற பண்பு கொண்டவர் வ.உ.சி. என்பதும் சுட்டப்பட்டுள்ளது.

காட்சி : ஆறு

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற கொள்கையர் என்பதும்; உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் பண்பாளர் என்பதும்; ஏழையர்க்கு உதவும் பண்பாளர் என்பதும்; இக்காட்சியில் வ.உ.சி. சுட்டப்பட்டுள்ளார்.

**காட்சி : ஏழு**

நாட்டுப்பற்றும், தமிழ்ப் பண்பாடும் மிக்கவர் வ.உ.சி. என்பதனை இக்காட்சி விளக்குகிறது. நண்பரை இகழ்ந்தாரைச் சாடும் பண்பாளர் என்றும் விளக்கப்பட்டது.

வெள்ளையர் அஞ்சிய வீர அரிமாவாக வ.உ.சி. இக்காட்சியில் விளக்கப்பட்டுள்ளார்.

**காட்சி : எட்டு**

வ.உ.சி. பூழித்தேவன் ஒத்த வீரத்தவர் என்று இக்காட்சியில் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளார். கோரல் மில் தொழிலாளர் பசிக்கு அடிமையாகாமல் பாதுகாத்த பண்பாளராகவும் காட்டப்பட்டுள்ளார்.

**காட்சி : ஒன்பது**

வ.உ.சி. பாரதி முதலானோரோடு நட்பு போற்றிய பண்பாளர் என்பதும்; அவர்தம் குடும்பமே நாட்டுச் சிந்தனைக்குரியவரைக் கொண்ட குடும்பம் என்பதும், அனைவரும் சாதி, இன வேறுபாடு கருதா நன்னிலைமையர் என்பதும் இக்காட்சியில் விளக்கப்பட்டுள்ளன.

**காட்சி : பத்து**

சிதம்பரனாரின் கோரல் மில் போராட்ட வெற்றியை இக்காட்சி கூறுகிறது.

வ.உ.சி.யின் ஒருங்கிணைந்த செயல்பாட்டால் முன்னறிந்த சிந்தையால், வெற்றி கிட்டியமையை இக்காட்சி புலப்படுத்துகிறது.

**காட்சி : பதினொன்று**

இக்காட்சியில் சின்னமருது, பெரியமருது, ஊமைத்துரையின் வீரம் செறிந்தவர் வ.உ.சி. என்பதைக் குறிப்பாகச் சுட்டப்பட்டுள்ளது.

**காட்சி : பன்னிரண்டு**

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறை தெய்வம்' என்ற வள்ளுவத்தின் இலக்கணமாக வ.உ.சி. திகழ்ந்தார் என்பதனை இக்காட்சி காட்டுகிறது.

வ.உ.சி.யின் பகை அஞ்சாப் பண்பும்; வாணிகம் செய்து நாடுபிடித்த வெள்ளையனுக்கு வாணிகமே சிறந்த வடிகால் என்ற கருத்துடையார் என்பதையும்; அந்நியர் செயலை முன்னுணர்ந்தவர் என்பதையும்; கூட்டுறவிலே கப்பல் ஓட்டமுடியும் என்ற கொள்கையர் என்பதையும்; வந்தால் கப்பலுடன் வருவேன் இல்லையெனில் வங்கக் கடலுள் வீழ்ந்து மடிவேன்! என்ற அவர் உறுதிப்பாடும்; இக்காட்சியில் மிளிர்கின்றன.

**காட்சி : பதிமூன்று**

கொண்ட கொள்கைக்காகப் பொது நலனுக்காக மனைவி நோய்வாய்ப் பட்டும், மகன் இறந்தும் வாராது செயல்முடித்த திறனாளர் என்பதனையும்; 'சிவம் என் மனைவி, மக்களை இறைவன் காப்பான். எடுத்த வேலையை முடித்த பிறகே வீடு திரும்புவேன்.' என்ற தந்தி வரிகள் வழியும் வ.உ.சி.யின் பண்புநலன்கள் காட்டப்பட்டுள்ளன.

**காட்சி : பதினான்கு**

'சிதம்பரம் ஐயான்னா ஐயாதான். அவர் பெருமிதம்பட வேண்டிய தமிழர்!

வெறும் தமிழர் என்று சொல்லாதே! கப்பலோட்டிய தமிழர் என்று சொல். அதிலும் விடுதலைச் சிந்தனையாளர் கப்பலோட்டிய தமிழர்'

என்ற சின்னசாமி, பெரியசாமி உரையாடலில் வ.உ.சி.யின் பண்புகள் கூறப்பட்டுள்ளன.

மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம் என்ற பாரதியின் கனவை நினைவாக்கிய பண்பும் கூறப்பட்டுள்ளது.

**காட்சி : பதினைந்து**

இது தூத்துக்குடியில் கப்பலோட்டிய காட்சியாகும்.

**எல்லாமும் இருந்திங்கு**
**எல்லாமும் இருந்திங்கு**
**எல்லாமும் இல்லாம போச்சி - இங்கு**
**எதனாலே இந்நிலை ஆச்சி.**

என்ற கண்ணாலன் பாட்டுக் கேள்விக்கு,

**எல்லாமும் இருந்திங்கு**
**எல்லாமும் இருந்திங்கு**
**எல்லாமும் இல்லாம போச்சி - ஒற்றுமை**
**இல்லாம இந்நிலை ஆச்சி.**

என்று கண்ணாட்டி பாட்டுப் பதிலைத் தருகிறாள்.

ஆட்டுத் தோல் அளவு இடம் கேட்டு, அப்பம் பிரிக்கும் குரங்காகி நம்மைத் தலைகுனிய வைத்து அடிமை கொண்ட அந்நியரிடம் நம்மைத் தலைநிமிர வைத்த சிங்கம்.

**தனிக் கடலில் கப்பல் விட்டார் பாரு - வெள்ளை**
**தலைகுனிய கப்பல் விட்டார் பாரு.**

என்று காட்டி வ.உ.சி.யின் தனிப்பண்பு ஈண்டு இக்காட்சியில் விளக்கப்பட்டுள்ளது. தாம் பெற்ற வெற்றியைப் பகிர்ந்து, 'இது இந்தியத் திருநாட்டின் ஒவ்வொரு குடிமகனின் உழைப்பு.' என்று கூறிடும் பெரும் பண்பும் இக்காட்சியில் இடம்பெற்றுள்ளது.

வாணிகத்தால் வந்தானை ஒடுக்க வாணிகமே சிறந்த மருந்தென்ற வ.உ.சி.யின் கொள்கை இங்கே மீண்டும் மிடுக்கோடு எடுத்தாளப்பட்டுள்ளது.

கப்பலோட்டியமை வ.உ.சி.யின் கனவுகளில் ஒன்றாகக் காட்டப்பட்டுள்ளது.

**காட்சி : பதினாறு.**

இக்காட்சியில் மகன் இறப்பால் பாதிக்கப்பட்டமை காட்டப்பட்டாலும்; விபின் சந்திரபால் விடுதலைக் கொண்டாடும் வீரப்பண்பு மேலோங்கி நிலைக்கிறது.

நாம் ஒன்று நினைக்க வெள்ளையன் ஒன்பதை நினைத்த நிலையை மாற்றி, வெள்ளையன் ஒன்று நினைக்க வ.உ.சி. வெல்லும் வழி ஒன்பதை அறிந்தவராகக் காட்டப்பட்டுள்ளார்.

வ.உ.சி.யின் வீடு மறந்த வீரச்செயல்மையும் சுட்டப்பட்டுள்ளது.

**காட்சி : பதினேழு.**

தீரன் சின்னமலையின் வீரம் கொண்டவர் வ.உ.சி. என்று குறிப்பால் உணர்த்தப்பட்டது. திருநெல்வேலி போராட்டமும் விளக்கப்பட்டுள்ளது.

காட்சி : பதினெட்டு

விபின் சந்திரபால் விடுதலையைக் கொண்டாடிய வீரராகக் காட்சி அமைந்துள்ளது.

**சொல் எடுத்தால், சொல் எடுப்போம்;**

**கல் எடுத்தால், கல் எடுப்போம்;**
**வில் எடுத்தால், வில் எடுப்போம்**

என்றும்; தடை எனும் பெயரால் துஞ்சு புலியை எழுப்பிய நிலையும், புலியாய்ச் சீரிய அவர்தம் சீற்றப் பண்பும் இக்காட்சியில் காட்டப்பட்டுள்ளன.

காட்சி : பத்தொன்பது

வ.உ.சி. யாருக்கும் அஞ்சா நெஞ்சினர் என்பது விளக்கப்பட்டுள்ளது.

தவறு செய்து, வ.உ.சி.யால் தண்டனை பெற்ற நீதித்துறையர், காவல் துறையர், சுதேசிக் கப்பலால் பாதிக்கப்பட்ட அந்நியக் கப்பல் முதலையர், ஒருங்கிணைந்து செய்த நீதியற்ற செயலை இக்காட்சி விளக்கும். அந்நிய ஆட்சியில் நீதி என்ற பெயரில் நீதிமன்றத்திற்குப் புறம்பே தீர்ப்பு வடிவமைக்கப்பட்டு அதனால் வ.உ.சி. பாதிக்கப்பட்டதையும் இக்காட்சி விளக்கும்.

காட்சி : இருபது

திருநெல்வேலியில் அந்நிய அரசால் வஞ்சகத்தனமாகக் கைது செய்யப்பட்ட நிலையை இக்காட்சி விளக்குகிறது. அந்நியக் காட்டாட்சியின் துப்பாக்கிச் சூட்டால் நால்வர் இறந்தது இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

காட்சி : இருபத்தொன்று

சிறையில் சிதம்பரனார் மண்வெட்டிச் சுமந்தும்; கல்லுடைத்தும்; செக்கிழுத்தும் பட்ட துயரங்கள் இங்கே தெளிவாக்கப்பட்டுள்ளன.

பாரதி பாடுவதுபோலும், சிவசக்தி நடனத்தோடும் சிறைக் கொடுமையை இக்காட்சி வெளிப்படுத்தியுள்ளது.

காட்சி : இருபத்திரண்டு

வ.உ.சி. சிறைச்சாலையில் இருப்பதைக் காட்டும் காட்சி. உதவி செய்த இராமையாவிடம் தன்னால் சிக்கலில்

மாட்டிக்கொள்ள வேண்டாம் என்று பிறர் நலம் காட்டிய பண்பு இவண் பேசப்பட்டுள்ளது.

தன் மகன் இறப்பைவிட தான் தொடங்கிய சுதேசிக் கப்பல் குழுமம் அந்நியர்க்கே விற்கப்பட்டதை அறிந்து துடித்த நிலை பேசப்பட்டுள்ளது.

ஆசு(ஆஷ்) என்னும் வெள்ளையனைச் சுட்டுக்கொன்று, தன்னையும் சுட்டுக்கொண்ட வாஞ்சிநாதனின் இழப்பிற்கு வருந்தும் வீரராக வ.உ.சி. சுட்டப்பட்டுள்ளார். இந்தியத் தேசிய விடுதலைக்குரிய ஒரு இளைஞன் இறந்துவிட்டது எண்ணி வருந்தும் வ.உ.சி.யின் பண்புநிலைதான் என்னே!

இந்த நிகழ்விற்காகச் சிறையில் உணவு அளவு குறைக்கப்பட்ட ஒறுப்பு (தண்டனை) நிகழ்ந்துள்ளமையும் காட்டப்பட்டுள்ளது.

**காட்சி : இருபத்து மூன்று.**

இக்காட்சியில் பாமரனும் விடுதலைப் போராட்ட வேட்கையில் செயல்பட்டமையும், அவர் வ.உ.சி.யின்மீது கொண்ட அளவில்லா அன்பையும் காட்ட முற்படுகின்றது.

இக்காட்சியில் முடிதிருத்தும் கலைஞர் தன்பணி முடிக்காமல் ஏகாம்பரரைத் தவிக்கவிட்ட காட்சியால் பாமர மக்கள் வ.உ.சி.யின்பால் கொண்ட எழுச்சியைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

அச்சமில்லை அச்சமில்லை என்ற பாரதியின் பாவழி அஞ்சாத எழுச்சியுள்ள மக்களாகப் பாமரரையும் மாற்றியுள்ள வ.உ.சி.யின் புகழ் இக்காட்சியில் பெரிதும் காட்டப்பட்டுள்ளது.

**காட்சி : இருபத்து நான்கு**

நிறைவுக் காட்சியாகும். மக்களுக்காக-நாட்டு விடுதலைக்காக - நாட்டில் எவரும் அடையாத துன்பங்களை - சிறைக் கொடுமைகளை - அடைந்த வ.உ.சி.யை; விடுதலையின்போது வரவேற்கத் தன் மனைவி, தன் நண்பர் சுப்பிரமணிய சிவாவைத் தவிர வேறு எவரும் வந்திலர் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட சுப்பிரமணியசிவத்தை உன்னைப்பிடித்த நோய் என்னையும் பிடிக்கட்டும் என்று கட்டித் தழுவிய வ.உ.சி.யின் பண்புள்ளத்தை இக்காட்சி காட்டுகிறது.

வெள்ளையர்க்கு அடிவருடியான கட்டப்பன் முதலானோர் அரசியல் மாற்றத்தை எடுத்துக்கொண்டு கட்சி அமைத்த நிலையும் இவண் விளக்கப்பட்டது.

கட்டப்பன் கருணை மறவனாக வந்து கட்சி தொடங்குவதாகக் கூறும்போது வழிகாட்டத் தவறானவர் வந்துவிட்டார்; நமது வழிகாட்டலை ஏற்காத இந்த மக்களோடு நாம் எதற்கு? என்று கடைவிரித்தோம் கொள்வாரில்லை, கட்டிவிட்டோம் என்ற வள்ளலார் வழியை மேற்கொண்டவர் போல 'நீர் வாரும் நாம் போவோம்.' என்று வ.உ.சி.யைப் பகரவைத்தால் அவர் உள்ளம் உடைந்த நிலையையும் இவண் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முரணியக் (வில்லன்) கட்டப்பனே கடுகு சிறுத்தாலும், காரம் போகாது என்று வ.உ.சி.யைப் புகழும் நிலையுடன் நாடகம் நிறைவு பெற்றது. வ.உ.சி. மாற்றாரும் போற்றும் மாவீரன் அன்றோ!

இந்நாடகத்திலுள்ள இருபத்து நான்கு காட்சிகளும், வ.உ.சி.யின் பண்புநலன்களை விளக்குவனவாகவே அமைந்துள்ளன.

*25. சான்றோர் கண்ட வ.உ.சி.*

*1.* வெள்ளையன் இந்நாட்டைவிட்டு விரட்டப்பட
வேண்டுமானால், அவனது ஆதிக்கத்தின் ஆணி வேரான
வியாபாரத் துறையைத்தான் முதலிற் கைப்பற்ற
வேண்டுமென்ற ஒரு சிறந்த திட்டத்தை முதலில்
வகுத்தப் பெருமை சிதம்பரனார்க்கே உரியதாகும்.

- அறிஞர் அண்ணா.

*2.* உலகம் வியக்கச் சுதேசிக் கப்பல்
ஓட்டிய நம் தமிழ்நாடு
திலகமென புகழோங்கு சிதம்பரனார்
செயல்புரிந்த தமிழ்நாடு.

- உடுமலை நாராயணசாமி.

*3.* ஒரு கொள்கை வெற்றி பெறுகின்றதோ? இல்லையோ? அதில் வெற்றி பெற்றே தீரவேண்டும் என்கின்ற உறுதி வேண்டும். அந்த உறுதி என்ற நம்பிக்கைதான் வ.உ.சி.யிடத்திலும் குடிகொண்டிருந்தது. வ.உ.சி.யின் அளப்பரிய நம்பிக்கை தான் நாட்டுப்பணியிலும், மொழிப்பணியிலும் அவரை மென்மேலும் செயல்பட வைத்தது.

- உளுந்தூர்பேட்டை சண்முகம்.

4. கப்பலைக் கட்டி கடுங்காவல் தண்டனையில்
உப்பில்லாக் கூழுண்(டு) உடல்மெலிந்தோன் - ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சமே தினம்.

- கவிமணி தேசிகவிநாயகம்.

5. கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற - ஐயன்
சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல் இன்று
சுதந்திரம் காண்பாயோ சொல்.

- கவிமணி தேசிக விநாயகம்.

6. எனது தலை சிலரது திருவடிகளில் மட்டுமே விழுந்திருக்கிறது. திரு பிள்ளை அவர்களின் திருவடியும் அதில் சேர்ந்ததுதான். இவர் உயிர்போகும் வரை ஒழுக்கதைக் காத்தவர். - கி.அ.பெ.விசுவநாதம்.

7. அன்னை நாட்டின் இன்னாமை போக்குதற்குச் சிறைசென்று செக்கிழுத்தாரென்றால் அன்னோன் முன்னோன். - கி.வா.செகநாதம்.

8. சாவா மருந்தெனவே தற்பரனார் வள்ளுவர்செய்
பாவால் அறிவென்றும் பாலித்த - தேவர்
சிதம்பரம்என் சற்குருவே சிந்தையினில் நின்னிரும்
பதம்பெற்றேன் என்றும் பணிந்து. - சகசாநந்தர்.

9. எங்கள் சிதம்பரம் என்னில் வீரம்
ஏறுது நெஞ்சினில் சேர்ந்து - துன்பம்
பொங்குதோர் ஆவேச வெள்ளம் - தளை
பொட்டென்(று) அறுத்து விடுதலை சேருது.
வங்கம் அழைக்குது நம்மை - அதில்
வாழி சிதம்பரம் என்றிசைத் தாடும்
தங்கக்கொடி தோன்றுது தையே - தமிழ்
தந்த சிதம்பரம் சந்ததம் வாழ்க.

- கவியோகி சுந்தானந்த பாரதியார்.

10. புனித நாட்டன்பு, பெருந்தகைமை, உணர்ச்சியூட்டல் முதலிய அரும்பெரும் பண்புகள் முழுவடிவோடு (அன்று) சிதம்பரனாரிடம் காட்சியளித்ததைப்போல நான் எந்தவொரு தமிழ்நாட்டுத் தலைவரிடத்தும்

கண்டதில்லை; பிறர் கண்டதாகக் கூறக் கேட்டதும் இல்லை.

- சீவா.

11. அரசியல் தலைவர் தம்மில்
அரிச்சந்திர னாக வாழ்ந்த
பெருமையைக் காந்தி முன்னர்
பெருமுன்னர் சிதம்பர னாரே ... பெற்றார்.

- சுரதா.

12. தொல்காப்பியப்பகுதி தொல்லுரையும்; ஒண்குறளில்
மல்கா உரையொன்றும் மாண்டமிழ்க்கே - அல்லாத
இன்னிலை புத்துரையும் ஏனைப் பதிப்புகளும்
துன்னிய வ.உ.சி. தொண்டு. - தேவ நேயப் பாவணர்.

13. வல்லாளன் சிதம்பரனார் சிறையிற் பட்ட
வருத்தமெல்லாம் விரித்துரைக்கின் வாய்விட் டேங்கி
கல்லான மனத்தவரும் கண்ணீர் சொட்ட
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்.

- நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்.

14. நாட்டில் வணிகம் ஓங்கி
நல்லன பெருகு மாறே
ஓட்டினாய் நாவாய் அந்நாள்
உறுதியும் திறனும் கொண்டே
போட்டியில் எதிர்த்து நின்றாய்
புன்மையர் சூழ்ச்சி யாலே
வாட்டியே சிறையில் போட்டும்
மனம்தள ராது நின்றாய்.

- பரலி சு.நெல்லையப்பர்.

15. சிதம்பரப் பெரியோய் உந்தன்
சீரினைப் போற்று கின்றோம்.

- பரலி சு.நெல்லையப்பர்.

16. வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவில் கேட்பாய் நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே.

- பாரதியார்.

17. இந்தியநாட்(டு) உரிமைக்கும், விடுதலைக்கும்
ஈ(டு) இணையற்ற எவர்க்கும்மேலாய்ச்

செந்தமிழன் வ.உ.சி. செலுத்தியநற்
கப்பற்குச் செயலா ளன்காண்
வெந்தனலாய் வெள்ளைநாய் எதிர்ப்புக்கும்
அஞ்சாத வேங்கை! என்றன்
சிந்தைக்கும் செயலுக்கும் தென்பூட்டும்
செம்மாந்த சிங்கம் போன்றோன்.

- பாவேந்தர் பாரதிதாசன்.

18. வெள்ளை ஆதிக்கத்திற்கு எதிராகக் கப்பலோட்டிய அவரது (சிதம்பரனாரின்) துணிச்சலைக் கண்டு ஆங்கிலேயரே கதிகலங்கினர்.

- பெருந்தலைவர் காமராசர்.

19. பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டு, ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்ட தமிழ்ப் பெரும்புலவராகவும், தமிழன் என்னும் உணர்வூட்டிய பெருந்தலைவராகவும் விளங்கிய தன்மானம் மிக்க தமிழர் வ.உ.சிதம்பரனார்.

20. நாட்டுப்பற்றில் வளர்ந்த அவருடைய தீவிர வாழ்க்கை, மொழிப்பற்றில் ஊன்றி இலக்கியத் தொண்டிற்கு இடம் தந்தது. - மு.வரதராசனார்.

21. நமது நாடு உரிமையோடு விளங்க வேண்டுமானால் முதலாவதாக அதன் பொருளாதாரச் சுரண்டல் தடுக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாகத் தாய்மொழியின் வாயிலாக அறிவை வளர்க்க வேண்டும். இவையிரண்டும் எல்லா நாட்டிற்கும் பொதுவான உண்மை. இதனை நன்றாக உணர்ந்து வாழ்க்கையில் காட்டி தொண்டு செய்தவர் வ.உ.சிதம்பரம்பிள்ளை. - மு.வரதராசனார்.

22. வ.உ.சி.யின் வாழ்க்கை வெறும் அரசியல் வாழ்க்கை அல்ல. அது ஒரு தவ வாழ்க்கை. அவர் ஒரு முனிவராகவே வாழ்ந்திருக்கிறார். வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் தமிழோடு வந்து கலந்துவிட்டார். தமிழ்தான் அவருக்கு அமைதி தந்திருக்கிறது.

- பொற்கோ.

25. நாட்டையும், மொழியையும் அவரின் (வ.உ.சி.யின்) இரு கண்களெனப் போற்றினார். இறுதிவரையிலும், 'நாடு விடுதலை அடையவில்லையே!' என்கின்ற ஏக்கத்துடன் இருந்தார். அவர் உயிர் பிரியும் தருவாயில் கூட பாரதியின் விடுதலைப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டார். அவருடைய தலைவர் திலகரும் மற்றும் பாரதி போன்ற அவரின் உற்ற நண்பர்கள் எல்லாம் மறைந்தால் அவரால் தீவிரமாகச் செயல்பட முடியவில்லை. எனவேதான் தம் பிற்பகுதி நாட்களில் தமிழ்ப்பணிப் புரிவதற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

-வ.உ.சி.சுப்பிரமணியம் (வ.உ.சி.யின் மகனார்)

26. விடாமுயற்சி கொண்டவர். செய்வன திருந்தச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடையவர். மாதிரிப்படிவங்களைத் (மெய்ப்புப் படிவம்) திருத்துவதில் மிகவும் திறமையானவர், அவர் திருத்திவிட்டால் வேறுயாரும் பார்க்கவேண்டிய அவசியமே இருக்காது. அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருப்பாரே யானால் இன்னும் பல நூல்களைப் பதிப்பித்திருப்பார். திருக்குறளைத் தன்னுயிரினும் மேலாக மதித்தவர். திருக்குறளுக்குத் தாம் எழுதிய பொருட்பால், இன்பத்துப்பால் (விருத்தி) உரைகளைத் தம்மால் பதிப்பிக்க முடியவில்லையே என்கின்ற ஏக்கத்தோடு இறக்கும் வரையில் இருந்தவர். அவரின் பலநூல்கள் அச்சில் ஏறாமலேயே மறைந்து போய்விட்டன. அப்போது நாங்கள் சிறுவராக இருந்ததனால் அந்த எண்ணமும் எங்களுக்கு இல்லை.

-வ.உ.சி.சுப்பிரமணியம் (வ.உ.சி.யின் மகனார்)

27. வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி.

- வானமாமலை.

28. தருமமும், பொறையும், வாய்மையும், வீரத்
தன்மையும், ஒழுக்கமும், நடுவும்,
திருநற் குணமும், திருந்துபே ரழகும்,
சிறப்பும், மெய்க் கீர்த்தியும், கொடையும்

அருளும்,மா தவமும், புனிதமும், அன்பும்,
அறிவுமோர் உருவு கொண்டு ஆழி
இருநிலமும், உதித்தால் என்னவந் துதித்தான்
என்னரும் சிதம்பரம் பெயரோன்.

- வைத்தியநாதசாமி.

25. எந்த நூலை எடுத்தாலும் இவர் முன்பிருந்த நூலாசிரியர் கூறியதனை அலசிப்பார்த்துப் புதிய உரை காணுவதிலேயே முயன்று வருவார். துணிகரமும், உணர்ச்சி வேகமும், எதனையும் தன்னிலையிலிருந்து நோக்கும் நேர்மையும் இவரது முக்கியமான இயல்புகள். எளிமையாக உரைகளிருத்தல் வேண்டும் என்றே பெருங்கருத்து கொண்டவர். - வையாபுரிப்பிள்ளை.

இவ்வாறாகப் பல்பெரும் சான்றோர் புகழ்ந்து கூறிய பண்பினராக வாழ்ந்தவர் வ.உ.சி..

## 26. முடிவுரை

செந்தமிழ்ப் பண்பின் சீராளன் வ.உ.சி.யை அந்தமிழ் எடுத்து ஆயிரம் ஆயிரம் புகழலாம். அஞ்சா நெஞ்சனாய் அன்றவர் காட்டிய வீரம், ஒழுக்கம், மெய்மையின் கடைபிடிப்பு அனைவர்க்கும் ஓர் அரிய பாடமாகும்.

'என்னைப் பின்பற்றாதே எனது கொள்கையைப் பின்பற்று' என்று வளர்ந்தோங்கும் இவ்வரசியல், சமய காலத்தில் அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக - முன்னோடியாக - எடுத்துக்காட்டாளராக - நல்லொழுக்கச் சீலராக வ.உ.சி.யைக் கருதலாம்.

பின்வரும் பத்துக்குறள்வழி வ.உ.சி.யை வாழ்த்தி நினைக்க விழைகின்றேன்.

1. புகழோடு தோன்றி புகழ்நிறுத்தி நின்ற
   புகழுடைய வ.உ.சி. போற்று.

2. இல்லறச்சீர் ஏற்றொழுகி ஏர்மக்கள் பெற்றபெரும்
   நல்லனெனும் வ.உ.சி. நள்.

3. பெண்ணடிமை கொள்ளாப் பெருந்திரு வாளரென்னும்
   கண்ணியச்சீர் வ.உ.சி. போற்று.

4. தாளாற்றி வந்தபொருள் தக்கார்க்காய் ஈந்தளித்த
வேளாளன் வ.உ.சி. வேள்.

5. வாணிகத்தால் ஆண்டானை வாணிகத்தால் வீழ்த்துநெறி
பேணிக்காண் வ.உ.சி. பேறு.

6. வங்கக் கடல்மேலே வான்சுதேசி வங்கமோட்டும்
எங்களவன் வ.உ.சி. ஏற்று.

7. கல்லுடைத்தும் செக்கிழுத்தும் பல்கொடிய துன்பமுற்ற
வெல்வீரர் வ.உ.சி. வாழ்த்து.

8. அரிமாவாய்ச் சீறி அடிமை பொடித்த
பெருமைச் சிதம்பரம்சீர் செப்பு.

9. தீண்டாமை எண்ணாதான், செய்செயற் தூய்மையான்,
காண்பண்பான் வ.உ.சி. காண்.

10. மெய்வருத்தித் துன்புற்றும் மெய்மையன்றி வேறெண்ணா
அய்யன்நம் வ.உ.சி. ஆய்.

## துணை நூற்பட்டியல்


1. அண்ணாதுரை.சி.என்., அண்ணாவின் முத்துக் குவியல் அன்புப்பழம் நீ (பொறுப்பு ஆசிரியர்), முத்தமிழ் நிலையம், சென்னை, பதிமூன்றாம்பதிப்பு, 1979.
2. ஆறுமுகம், செம்பு, வ.உ.சிதம்பரனார் வரலாறு செந்தூரன் பதிப்பகம், சென்னை.
3. இராமலிங்கம்பிள்ளை.வெ., நான் கண்ட வ.உ.சி. நாமக்கல் கவிஞர். வாழைபதிப்பகம், சென்னை, இரண்டாம்பதிப்பு, 1965.
4. ஔவையார், தமிழ் நீதிச்செல்வம் (நல்வழி), சாந்தா பதிப்பகம், சென்னை, 1995.
5. கலைஞர், கவியரங்கில் கலைஞர், திருமகள் நிலையம், சென்னை, 2003.
6. கிருட்(ஷ்)ணமூர்த்தி, அனிதா, கு., தமிழர் தந்தை வ.உ.சிதம்பரனார், அனிதா பதிப்பகம், திருப்பூர், 2007.
7. சங்குப்புலவர், தி., நாலைந்திணை, இன்னிசை, கைந்நிலை உரை, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1969.
8. சிதம்பரனார்.வ.உ., வ.உ.சி. சுயசரிதை, பாரிநிலையம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1979.
9. மேலது, மெய்யறம், சண்முகவிலாசு பிரசு, அம்பாசமுத்திரம், மூன்றாம் பதிப்பு, 1967.
10. மேலது, மெய்யறிவு, பாரிநிலையம்,சென்னை, ஐந்தாம்பதிப்பு, 1967.
11. மேலது, இன்னிசை விருத்தியுரை, அகத்தியர் அச்சுக்கூடம், அம்பாசமுத்திரம், இரண்டாம் பதிப்பு, 1929.
12. மேலது, அகமே புறம், பாரி நிலையம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1968.
13. மேலது, வலிமைக்கு மார்க்கம், பாரிநிலையம், சென்னை, எட்டாம் பதிப்பு, 1967.
14. மேலது, சாந்திக்கு மார்க்கம், பாரி நிலையம், சென்னை, ஆறாம் பதிப்பு - 1981.
15. மேலது, மனம்போல் வாழ்வு, பாரி நிலையம், சென்னை, பன்னிரண்டாம் பதிப்பு, 1967.

16. சேச(ஷ)ய்யா, கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., தமிழ்ச்சோலை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2005.

17. ஞானசேகரன்.வை., வ.உ.சிதம்பரனார் தமிழ்ப்பணி, எம்.பில். ஆய்வுநூல், அண்ணாமலைப் பல்கலை கழகம், அண்ணாநகர். 1981-82.

18. திருமூலர்-திருமந்திரம், கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1912.

19. திருவள்ளுவர் -திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, ஏழாம் பதிப்பு, 2006.

20. திவான். செ., வ.உ.சி.யின் வள்ளியம்மை சரிதம், கை(ஹை)ரைப் பதிப்பகம், பாளையங்கோட்டை, 2000.

21. திவான். செ., வ.உ.சி.யின் உயில், சுகை(ஹை)ரைப் பதிப்பகம், பாளையங்கோட்டை, 2003.

22. பசுமைக்குமார், பாரதிதாசன் கவிதைகள், பாரிநிலையம், சென்னை, ஏழாம் பதிப்பு, 1975.

23. பவணந்தி முனிவர், நன்னூல் விருத்தியுரை, ச.தண்டபாணி தேசிகர் குறிப்புகள், பாரிநிலையம், சென்னை, நான்காம் பதிப்பு, 2003.

24. பாரதிதாசன்-பாரதிதாசன் கவிதைகள், பாரிநிலையம், சென்னை, ஏழாம் பதிப்பு, 1975.

25. பாரதியார்-பாரதி நூல்கள் (நான்காம் பதிப்பு), தமிழ்நாடு அரசு வெளியீடு, சென்னை முதற்பதிப்பு, 1968.

26. ம.பொ.சி., கப்பலோட்டிய தமிழன், பூங்கொட்டிப் பதிப்பகம், சென்னை, 2000.

27. முத்தையா முல்லை, தளபதி வ.உ.சிதம்பரனார், (தொகுப்பு) சக்திகாரியாலயம், சென்னை, 1972.

28. வள்ளிநாயகம் தி.நெ., செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.

29. வானமாமலை நா., வ.உ.சி. முற்போக்கு இலக்கியங்களின் முன்னோடி, மக்கள் வெளியீடு, சென்னை, 1999.

30. வேங்கடாசலபதி, ஆ.இரா., வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும் மக்கள் வெளியீடு, சென்னை, 1987.

31. மேலது, வ.உ.சி.யும் பாரதியும், மக்கள் வெளியீடு, சென்னை, 1994.

# விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார்.

## பேரா. புலவர் பூவை. சு.செயராமன்.

### காட்சி - 1.

அரங்கம் : நடு அரங்கம்.

களம் : வ.உ.சி.யின் ஒட்டப்பிடாரம் வீடு.

காலம் : ஒரு நாள் காலை.

உறுப்பினர் : பாடற்குழுவினர், சிதம்பரம், உலகநாதன், அப்பாதுரை.

(திரை விலகுமுன்)

வீரக்குரல் : வந்தே மாதரம்
வந்தே மாதரம்
வந்தே மாதரம்

பாடல் : வந்தே மாதரம் என்போம் - நம்
தாய்த்திரு நாட்டை
வணங்கிநாம் வாழுவோம் (வந்தே மாதரம்...)

இமயமும் குமரியும்
எங்களின் எல்லை...
இனியொருபோதும் நாம்
அடிமைகள் இல்லை (வந்தே மாதரம்...)

பயமில்லை பயமில்லை
பயமென்ப தில்லை...
பயந்திங்கு வாழுவோர்
பாரதர் இல்லை (வந்தே மாதரம்...)

இந்தியம் என்றிடும்
எந்திரு நாட்டை....
அந்நியர் வந்திங்கு
ஆளுகை நன்றோ? (வந்தே மாதரம்...)

வெந்ததைத் தின்றிங்கு
விதிவர மாயோம்...

சொந்தத் திருநாட்டில்
அடிமையாய் வாழோம்! (வந்தே மாதரம்)

**(திரை விலக)**

சிதம்பரம் : வந்தே மாதரம்
வந்தே மாதரம்
வந்தே மாதரம்

(தந்தை உலகநாதன் உள்ளே வருதல்)

உலகநாதன் : என்ன சிதம்பரம் பகலில் உறக்கமா?

சிதம்பரம் : இல்லை அப்பா! நாட்டு விடுதலை பற்றிய எண்ணம்...

உலகநாதன் : நாட்டு விடுதலையா? நல்ல எண்ணம்தான்... இந்த வீட்டு விடுதலையையும் கொஞ்சம் பாரு.

சிதம்பரம் : வீட்டு விடுதலையா? என்னப்பா சொல்கின்றீர்கள்?

உலகநாதன் : இந்த ஊரிலே நான் நல்ல பெயர் எடுத்து ஒரு இரண்டாம் நிலை வக்கீலா இருக்கேன். நம்ம வீட்டுக்கே என்ன பெயர் தெரியுமா?

சிதம்பரம் : தெரியும் அப்பா? 'வக்கீல் ஐயா வீடு'. அதற்கு என்னப்பா?

உலகநாதன் : அந்தப் பெயர் நிலைக்கத்தான் நம்மவூர்லே இரண்டு மாதம் வட்டாட்சி எழுத்தராக வேலை கிடைச்சும் உன்னை வக்கீலுக்குப் படிக்க வைத்தேன்.

சிதம்பரம் : ஆமாம். அதற்கென்னப்பா... நான் உங்களைப் போலவே நல்ல பெயர் எடுக்கத்தான் முயற்சிக்கிறேன்.

உலகநாதன் : அப்படியா? நிரம்ப மகிழ்ச்சி...! ஏகாம்பர ஐயர்கிட்ட என்ன வம்பு?

சிதம்பரம் : ஓ! குற்றவியல் நீதி மன்ற நீதிபதி ஏகாம்பர ஐயரா? அப்பா அவர்...

உலகநாதன் : இங்கே பார் சிதம்பரம்! நீ தரகு கொடுத்து வக்கீல் வேல செய்யல... அது உன்னைப்பத்திய விசயம்... ஆனா ஒரு நீதிபதி மேலேயே வழக்குப்

போட்டிருக்கே... அதோட மட்டும் இல்லாம இன்னும் மூன்று துணை நீதிபதிகள் மேலேயும் வழக்கு போட்டிருக்கே...! இந்த வேலை உனக்கு எதுக்கு...? அவங்களைப் பகைச்சுகிட்டு இங்க பிழைப்பு நடத்துறது சிரமம்.

சிதம்பரம் : நீதியைக் காக்க வேண்டிய நீதிபதியே கையூட்டு - இலஞ்சம் - வாங்கினா நீதி எப்படியப்பா நிலைக்கும்? நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்ற நக்கீரன் பிறந்த நாட்டில் கையூட்டு பெறுபவன் நீதிபதியாக இருந்தாலும் குற்றம் குற்றம்தான்... அதான் வழக்கு தொடுத்தேன்.

உலகநாதன் : அதுமட்டும் இல்லாமல் காவல் துறையினரையும் நீ பகைத்துக்கிட்டு இருக்கே!

சிதம்பரம் : அப்பா ஏழை என்பதால் அவரை எவரும் எதுவேண்டுமானாலும் செய்யலாமா? காவல் துறையினர் பொய் வழக்கை எதிர்த்தேன்! வெற்றியும் பெற்றேன்...! இது தப்பா?

உலகநாதன் : தப்பா. அதப்பா. என்கிறது இல்லை. எல்லோரையும் பகைத்தால் தொழில் எப்படி நடக்கும்? பெற்றவன் என்ற முறையிலே உன்னை நான் பாராட்டலாம்! மற்றவங்க...

சிதம்பரம் : மற்றவங்க என்னப்பா... நான் மனசாட்சிப்படி நடக்கிறேன்.

உலகநாதன் : 'எதார்த்தவாதி பொதுசன விரோதி' ஆவான். உன்னிடம் நல்ல திறமையிருக்கு. குலசேரநல்லூர் ஆசாரி கொலை வழக்கு உனக்குப் புகழ சேர்த்திருக்கு... இருந்தாலும்...

சிதம்பரம் : இருந்தாலும் என்னப்பா? நான் தவறுகளோடு ஒருபோதும் சமரசம் செய்துகொள்ள மாட்டேன்...! எதுவந்தாலும் வரட்டும்...!

உலகநாதன் : சிதம்பரம் உன்னைச்சுற்றி முள் மரங்களை வெட்டிப் போட்டுட்டே.... நீ சீண்டியுள்ள ஆளெல்லாம்... அரக்க குணம் பிடித்தவர்!

அதுவும் ஆட்சி... அதிகார வர்க்கம்...! அவங்க கையிலே நீ.

சிதம்பரம் : அப்பா என்ன மன்னிச்சிடுங்க...! அவங்க யாரா இருந்தாலும், எது செஞ்சாலும் எனது நேர்மையிலிருந்து நான் மாறமாட்டேன்.!

உலகநாதன் : உன்னால நீ மாறமுடியாதுனா, இந்த ஒட்டப்பிடாரம் உனக்காக மாறாதுப்பா. உனக்குத் தூத்துக்குடியிலே ஏற்பாடு செய்திருக்கேன்... இங்கே நான் பார்த்துக்கிறேன். அங்கே போய் உன் தொழிலைத் தொடங்கு...

சிதம்பரம் : உங்கள் விருப்பம் அப்பா!

(சிதம்பரம் உள்ளே போதல்)

உலகநாதன் : இவன வக்கீலுக்கு மட்டும் படிக்க வைச்சிருக்கணும்... தமிழ் வேதாந்தம் சித்தாந்தம் எல்லாம் படிச்சிட்டான்... நீதியைக் கைக்கொண்டவனுக்குச் சத்திய சோதனைதான்...! உம்... நீதிய கொல்கிறவனுக்கு அடிமையாக இருக்கணுமா? அடிமையாய் வாழ்ந்து நம்ம காலம் முடியப்போகுது. சிதம்பரமாவது சுதந்திர சிந்தையிலும் செயல் படட்டும். அப்பனே நீயே துணை?

(அப்பாத்துரை மோருடன் வருதல்)

அப்பாதுரை : ஐயா கூப்பிட்டீங்களா?

உலகநாதன் : அப்பாதுரையா? உன்னை இல்ல அப்பனே! என்னப்பனைக் கூப்பிட்டேன்... கொஞ்சம் மோர்...

அப்பாதுரை : இதோ இருக்குங்க... இந்தாங்க...

உலகநாதன் : எள்ளுங்கிறதுக்குள்ளே எண்ணெய்யா இருக்கிறே. நல்ல ஆளுப்பா (மோர் குடித்தல்)

அப்பாதுரை : தம்பி நல்ல புள்ளதாங்க... தப்பு செஞ்சா அதுக்குப் புடிக்காதுங்க... அப்பத்தான் கொஞ்சம் கோபப்படுதுங்க.

உலகநாதன் : ஆமாம்! ஆமாம்! சிதம்பரம் அவங்க தாத்தையன் போல...

அப்பாதுரை : தாத்தையனா? அது யாருங்கோ?

உலகநாதன் : எங்கப்பாதான்லே...! வள்ளிநாயகம்பிள்ளை. அவர போல இருக்கான்.

அப்பாதுரை : அதான் சிதம்பர தம்பிய வ.உ.சி அதாவது 'வ' வள்ளிநாயகம் பிள்ளை மகனின் 'உ' - உலகநாதன் பிள்ளை மகன், 'சி' - சிதம்பரமுன்னு சொல்றாங்களா?

உலகநாதன் : ஆமாம். ஆமாம். இதுக்கு எல்லாம் அவன் அம்மா பரமாயி கொடுத்த செல்லம்... உம் அவன் சரியாத்தான் இருக்கான்... அந்த சரியே எல்லோருக்கும் தப்பா தெரியுதே!

அப்பாதுரை : அப்படினா தம்பி தூத்துக்குடிக்குப் போய்தான் ஆகணுங்களா?

உலகநாதன் : ஆமாம்...ஆமாம்... கண்டிப்பாக... இங்கே சிதம்புரத்தைச் சுற்றி அவனுக்கு எதிராக ஒரு பெருங்கூட்டமே வேலை செய்யுது...

அப்பாதுரை : அப்ப நானும் தூத்துக்குடிக்கு...

உலகநாதன் : ஓ... போயிக்கோ...! உன்னைப்போல ஒருத்தன் அவனுக்குத் துணையாய் இருப்பது நல்லதுதான்... நான் வருகிறேன்...

(உலகநாதன் போதல்)

அப்பாதுரை : அப்ப... நானும் தூத்துக்குடிக்கு...

(பாடுதல்)

'வெள்ளிப்பனி மலைமீது உலாவுவோம் - அடி
மேலைக்கடல் முழுவதும் கப்பல் விடுவோம்...'

என்ன பாக்குறீங்க... தூத்துக்குடிக்குப்போனா... பெரிய பெரிய கப்பல்ல ஏறிப் பார்க்கலாமில்லே!

(திரை)

## காட்சி - 2

அரங்கம் : இடப்புற அரங்கம்.

களம் : பூங்கா.

காலம் : மாலை நேரம்.

உறுப்பினர் : கட்டப்பன், பட்டப்பன், பிச்சைக்காரன், அப்பாதுரை.

(கட்டப்பன் கோட்டு சூட்டுடன்
தனக்குத்தானே பேசிக் கொள்ளுதல்)

கட்டப்பன் : எசு சார் (Yes sir), நோ (No), நோ (No), வாட்சார் (What sir), வாட்டர் சார் (Water sir), பிரட்டு சார் (Bread sir)..., சூப்பு சார் (Soup sir)..., ஓகே சார் (Ok sir)... அப்புறம் எசுகிட்மி சார் (Yes kiss [Excuse] me sir), இதமட்டும் சொல்லக் கூடாது துரை இதசொல்லும்போது மொறைக்கப் பார்த்தாரு... (மீண்டும்) எசுசார், நோ, நோ, வாட்சார். வாட்டர் சார், பிரட்டு சார், சூப்பு சார்.

(பட்டப்பன் வருதல்)

பட்டப்பன் : என்ன கட்டப்பா?

கட்டப்பன் : யாரு பட்டப்பனா? நீ பெரிய நெட்டப்பன் என்ன போயி கட்டப்பன்னு... நீங்கெல்லாம் மாறவே மாட்டீங்களா...?

பட்டப்பன் : நாங்க மாறுறது இருக்கட்டும் கருப்பா! நீ என்ன இப்படி மாறிட்டே! கோட்டும் சூட்டும்; கொழாயும் சராயுமாய்! துரையாட்டம்...

கட்டப்பன் : இதபாரு என்ன இனிமேல் கருப்பா, கட்டபான்னு சொன்னா எனக்குக் கெட்ட கோவம் வரும்.

பட்டப்பன் : இது என்னப்பா...? உண்மையான பேரு கருப்பன்னும் சொன்னாலும் கோவிச்சிக்கிறே! மாற்றுப் பேரு கட்டப்பன்னு சொன்னாலும் கோவிச்சுக்கிறே! நான் என்ன உன்ன எட்டப்பன்னா சொன்னேன்...?

கட்டப்பன் : என்ன இனிமே எல்லாரும் 'கட்பா' என்றுதான் கூப்பிடனும்... தெரிஞ்சிக்கோ.

பட்டப்பன் : அடப்பாவி ஆளுதான் மாறிட்டேன்னா? பேரையும் மாத்திட்டியா...? யாருடா உனக்கு இந்தப் பேரு வைச்சது...?

கட்டப்பன் : துரை - வெள்ளைக்காரத்... துரை... என்ன ஆசையாய் கட்பா... கட்பா... அப்படித்தான் செல்லமாய்க் கூப்பிடுவாரு...

பட்டப்பன் : மத்தவங்கல எல்லாம் எப்படி செல்லமா கூப்பிடுவாரு...?

கட்டப்பன் : பொண்டாட்டிய டாரோ... டீரோன்னும், டார்லிங்ன்னும் (Darling), கூப்பிடுவாரு - மத்த என்ன போல வேலக்காரங்கள இண்டியன் டாக் (Indian dog)... இண்டியன் பிக் (Indian pig)... இண்டியன் பெக்கருன்னு (Indian beggar) செல்லமாக் கூப்பிடுவாரு.

பட்டப்பன் : (தனக்குள்) வியாபாரம் பண்ண வந்த வெள்ளக்காரன்க நம்மல நாய், பன்றி, பிச்சக்காரன்னா சொல்றான்க? இதுக்கெல்லாம் ஒரு நாள் பதில் இருக்கு...!

கட்டப்பன் : என்ன உனக்குள்ளேயே பேசராமாரி இருக்கு...?

பட்டப்பன் : அதெல்லாம் ஒன்றுமில்லை எந்த துரைக்கிட்ட என்ன வேலை செய்யிரே?

கட்டப்பன் : 'கோரல்மில்' துரையில்ல அவர்கிட்டதான்...

பட்டப்பன் : என்ன வேலை...?

கட்டப்பன் : டேபிள் பாய் (Table boy)... அதாவது...

பட்டப்பன் : எடுபுடி...!

கட்டப்பன் : அதானே வேணாங்கிறது! சரி நீயும் வேலைக்கு வர்றியா? உன்னையும் சேர்த்து விடுகிறேன்.

பட்டப்பன் : வெள்ளையன இந்தியாவ விட்டே வெரட்டுணும்னு முடிவுகட்டி போராட்டம் நடக்குது. இந்த வெள்ளைக்காரன்கிட்டே போய் எடுபுடியா இருக்கச் சொல்றீயே...

போடா... அது உனக்குத் தான் ஏத்தது. நீயே செய்.

கட்டப்பன் : ஏய் பட்டப்பா... இதோ பார் என் பையிலே நிறைய காசு. அந்த பிச்சைக்காரன் இருக்கானே... அவனுக்கு இதோ பார் இந்த வெள்ளிப் பணத்தைப் போடுவேன்... உன்னால முடியுமா? இன்னைக்குப் பூரா உழைச்சாலும் இரண்டணா கிடைக்குமா...? தெரிஞ்சுக்க... ஐயாபத்தி புரிஞ்சிக்க...! ஏய் இந்தியன் பெக்கர் (Indian beggar) இந்தா ஒரு வெள்ளிப் பணம்... (பிச்சை இடுதல்) எங்க நீ போடு பார்ப்போம்...

பட்டப்பன் : என்கிட்டே இன்றைய கூலியில இரெண்டணாதான் இருக்கு... இருந்தாலும் இந்தாப்பா... இதவச்சிக்கோ... (கொடுக்கப் போதல்)

பிச்சைக்காரன் : ஐயா கொஞ்சம் பொறுங்க... எனது பசிக்காக நீங்க பட்டினி கிடக்க வேண்டாம். அதை நீங்களே வச்சுக்கோங்க... பட்டினியும் துன்பமும் எனக்கு என்னவென்று நன்றாகவே புரியும்.

கட்டப்பன் : ஏய்! இதோ பார். உன் காச இந்த இந்த பிச்சைக்கார மனிதன்கூட வாங்கவில்லை.

பிச்சைக்காரன் : ஐயா கொஞ்சம் வர்றீங்களா...! இந்தாங்க உங்க வெள்ளிப்பணம்.

(காசைத் திரும்பக் கொடுத்தல்)

கட்டப்பன் : ஏய்! ஏய்! ஏன் திரும்பக் கொடுக்குற?

பிச்சைக்காரன் : அவர் காசு, உழைச்ச காசு. அதுல ஒரு காசுகூட எடுத்துக்கலாம், தப்பில்லே! உங்க காசு உழைக்காத காசு...! வெள்ளக்காரனின் கைக்கூலியாக இருக்கும் கொள்ளைக்காசு இது எனக்கு வேண்டாம்!

(காசை கொடுத்தல்)

கட்டப்பன் : ஏய்! ஏய்! பெக்கர் (Beggar).

பிச்சக்காரன் : உச்சு (உஸ்) ..... (வாயில் விரலை வைத்து எச்சரித்தல்)

கட்டப்பன் : ஏய்! என்ன உச்சு... (உஸ்) இந்த காசு என்கிட்ட வாங்காம போனா... இன்றைக்குச் சிறுங்குடல பெருங்குடல் தின்ன... நாளைக்குப் பிச்சை எடுக்கக்கூட தெம்பில்லாம போயிடும்.

பிச்சைக்காரன் : செத்தாலும் பரவாய் இல்லை! உங்க காசு வேண்டாம்.

கட்டப்பன் : இரண்டு கால்களும் சரி இல்ல... உன் கிறுக்கக் காட்டிட்டியே!

பிச்சைக்காரன் : எனக்கு இரண்டு கால்கள்தான் இல்லை. ஆனால் எனக்கு இரண்டு கைகளும், மனமும் வலிமையாகவே இருக்கின்றன. உம்மைப் போல் மானமில்லா வேலை செய்து அந்த காசுல வாழமாட்டேன்.

கட்டப்பன் : நாளையிலிருந்து உழைச்சி சாப்பிட போறாயா? போடா... டங்... பிச்சைக்கே வழியில்லையாம் உழைக்கப் போறானாம் உழைக்க... போடா...!

பிச்சைக்காரன் : அய்யா உழைச்சுத்தான் வாழ்வேன்... இது சத்தியம்... (போதல்)

கட்டப்பன் : நாளைக்கே துரைகிட்ட சொல்லி இந்த பிச்சைக்காரன்களைப் பிடிச்சு உள்ளே தள்ளனும்... இதோ பாரு பட்டப்பா... இந்த காசோட அருமஅவனுக்குத் தெரியில...? (பாடுதல்)

ஓம் குணம் குணம்
எம் பணம் பணம்
எது பெருசு சொல்லு - நீ
எது பெருசு சொல்லு

பட்டப்பன் : ஓம் பணம் பெருசா இருக்கட்டும் நான் வீட்டுக்குப் போறேன்.

கட்டப்பன் : வீடு... வீடு... என்ன பேச்சு...? வீட்டுக்குப் போனா இந்த சுகம் கிடைக்குமா?

(பையில் இருந்து எடுத்தல்)

இத்த பாரு கருப்புக் குதிரை

இத்த பாரு சிவப்புக் குதிரை

இரம், பிராந்தி எது வேண்டும் சொல் பட்டப்பா...?

பட்டப்பன் : நம்ம நாட்டிலே கள்ளே குடிக்கக் கூடாதுன்னு போராட்டம் நடத்துறாங்க. நீ போடா...

(பட்டப்பன் போதல்)

கட்டப்பன் : இதில் உள்ள இன்பம் இவனுக்கு என்ன தெரியும்?

(கட்டப்பன் குடித்தல்... துரைசாமி வருதல்)

அப்பாதுரை : என்ன கட்டபுள்ள என்ன குடிக்கிறே...

கள்ளு சாராயம் போல தெரியிலே...யே...

கட்டப்பன் : கள்ளும் இல்ல, சாராயமும் இல்ல இது வேற...

அப்பாதுரை : வண்ண வண்ணமா இருக்கே... இது என்னப்பா?

கட்டப்பன் : தனித்தனி முக்கனி பிழிந்ததுன்னு யார்? கம்பன்தானே சொன்னது.

அப்பாதுரை : இல்லப்பா, வள்ளலார்!

கட்டப்பன் : உம்... உம்... அதுபோல தனித்தனி பழங்களைப் பிழிந்த பழச்சாறு.

அப்பாதுரை : மதுபோல இருக்கு...

கட்டப்பன் : இல்ல இல்ல பழச்சாறு... இதோபார்... என்னப்போல குடிச்சுப்பார்.

(கட்டப்பன் அப்பாதுரை கையில் கொடுத்தல்)

அப்பாதுரை : பழச்சாறு தானே வேற போத தண்ணி சீத தண்ணி இல்லியே...

கட்டப்பன் : இல்ல இல்ல... இந்த புட்டிமேல சத்தியமா இல்ல, குடிச்சுப் பார்த்துட்டுச் சொல்லு.

அப்பாதுரை : (குடித்தல்) அடப்பாவி...! இது சீமச் சரக்குன்னு சொல்லு...

கட்டப்பன் : அதுதான்...! அதேதான்...!! வெள்ளைக்காரன் வீட்டுச் சரக்கு, வெளிநாட்டுச் சரக்கு.

அப்பாதுரை : போடா பொறுக்கி.

கட்டப்பன் : இத்தோட போடா உங்க சிதம்பரம் வீடுக்கு....

அப்பாதுரை : அய்யோ! நான் என்ன செய்வேன்...? சிதம்பரம் தம்பிக்குத் தெரிஞ்சாக் கொன்னுடுமே! சும்மாவா சொன்னாங்க "நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை - தீயினத்தின் அல்லற் படுதப்பதுஉம் இல்'' என்று... இது சின்னபுத்திகாரனோடு சேர்ந்ததால் வந்த கேடு... உம். இத்தோடு வீட்டுக்குப் போனா சரிபடாது... தம்பி திட்டும்... எங்கயாவது கவுந்து கிடந்துட்டு காலையிலே தெளிஞ்சு குளிச்சுட்டுப் போகணும். (அப்பாதுரை போதல்).

கட்டப்பன் : சித்தாம்பரம் பிள்ளை... சீ... சிதம்பரம்பிள்ளை நீ வெள்ளைக்காரனுக்கு எதிரியா...? உன்னச் சுத்தியுள்ளவங்களை எல்லாம் கவுத்திட்டு... ஒரு நாளைக்கு உன்னையும் கவுக்கிறேன் பாரு. (கட்டப்பன் கவிழ்ந்து விழுதல்)

(திரை)

## காட்சி - 3

அரங்கம் : நடுவரங்கம்.

களம் : வ.உ.சி. தூத்துக்குடி இல்லம்.

காலம் : ஒரு நாள் காலை.

உறுப்பினர் : மீனாட்சி, சிதம்பரம், கவிஞர், சுப்பிரமணிய சிவா, அப்பாதுரை.

(சிதம்பரம் செய்தித்தாள் படித்துக் கொண்டிருத்தல்)

மீனாட்சி : என்னங்க... செய்தித்தாள் படிக்கிறீங்களா? உங்க குருநாதர் பாலகங்காதர திலகர் படமெல்லாம் போட்டிருக்கு...

சிதம்பரம் : பலே மீனாட்சி! உனக்கும் நாட்டு நடப்புகளில் கருத்து பெருகுகின்றது, பாராட்டு...

மீனாட்சி : உங்கள் மனைவியாயிற்றே...!

சிதம்பரம் : ஆணுக்கு இணையாகப் பெண்டிர் அனைத்திலும் பங்குபெற வேண்டும்...! பெண்ணை அடிமைப்படுத்தும் நாடும் அடிமை நாடே.

மீனாட்சி : பெண்களுக்கு அடக்கம் வேண்டாம் என்று நினைக்கின்றீர்களா?

சிதம்பரம் : மீனாட்சி அடக்கம் வேறு! அடிமை வேறு. அடக்கம் பணிவு; எல்லோரிடத்தும் பணிந்து நடப்பது அடக்கம். வலியோரால் அடிமைப் படுத்தப்படுவது அடிமை... எல்லோர்க்கும் நன்றாம் பணிதல்... இந்த அடக்கத்தை அடக்கம் செய்யாத அறிவு வேண்டும்... யாருக்கும் அடிமைப்படாத உணர்வு வேண்டும்.

மீனாட்சி : உங்கள் ஆழ்மனம் புரிகிறது. நாட்டடிமைக்குப் பெண்ணடிமையும் ஒரு காரணம் என்கின்றீர்கள்...!

சிதம்பரம் : ஆம், அதனால்தான் 'நான் உண்ட எச்சில் இலையில் நீ உண்ணக்கூடாது' என்று உனக்குக் கூறியிருக்கிறேன்.

மீனாட்சி : நீங்கபாட்டுக்குச் சொல்லிவிட்டீங்க... எல்லாரும் என்னை...

சிதம்பரம் : அந்த எல்லாரும் அடிமைச் சிந்தனை வாதியர்... நீயோ புரட்சி சிந்தனையாளனின் மனைவி... 'ஊர் ஆயிரம் சொல்லட்டும்! உனது மனசாட்சி என்ன சொல்கிறதோ; அதைச் செய்'

மீனாட்சி : எனது மனசாட்சியே நீங்கள்தான்...

சிதம்பரம் : பலே! 'இல்லதென் இல்லவள் மாண்பானாள்?'... நான் கொடுத்துவைத்தவன். மீனாட்சி எனக்கு நாட்டுப் பொறுப்புகள் நிரம்ப இருக்கின்றன. இந்த வீட்டுப் பொறுப்புகளை நீயே கவனி. வேறு ஏதும் செய்தியுண்டா...?

மீனாட்சி : ஆமாங்க... வந்து...

சிதம்பரம் : என்னிடம் கேட்க ஏன் தயக்கம்? கேளு...

மீனாட்சி : ஒண்ணுமில்லிங்க வள்ளியம்மை அக்காவின் திதி வருகிறது என்று ஐயர் சொன்னார். அதுதான்...

சிதம்பரம் : (கண்ணீர் துளிக்க) என் முதல் மனைவி வள்ளியம்மையின் நினைவுநாள்.

மீனாட்சி : ஐயர் சிரார்த்தத்திற்கான பட்டியல் எல்லாம் கொடுத்துவிட்டார்... ஐந்து, ஏழு, ஒன்பது தானம் கொடுக்கவேண்டுமாம்.

சிதம்பரம் : ஐயருக்குத் தானம் கொடுத்தால் என்ன நடக்குமாம்?

மீனாட்சி : அக்கா ஆன்மா சாந்தியடையுமாம்.

சிதம்பரம் : மீனாட்சி... அக்கா எனது கையால், உனது கையால், நம் பிள்ளையர் கையால் கொடுத்தால் மகிழ்வாளா? அல்லது ஐயர் கையால் கொடுத்தால் மகிழ்வாளா?

மீனாட்சி : இது என்னங்க கேள்வி?

சிதம்பரம் : கேள்விக்கான பதிலைச் சொல்... யார் கையால் பெற விரும்புவாள்?

மீனாட்சி : நம்ம கையால் கொடுக்கிறததைத்தான் விரும்புவார்.

சிதம்பரம் : அப்படி இருக்க இந்த இடைத்தரகர் ஐயர் ஏன்...?

மீனாட்சி : எனக்குப் புரியலே!

சிதம்பரம் : மீனாட்சி! தொழில்மட்டும் நான் இடைத்தரகரை விரும்பாதவன் இல்லை. கோயிலில்... தென்புலத்தார்... அதாவது செத்தவர்களுக்குச் செய்யும் கடமைகளிலும் இடைத்தரகரை விரும்பாதவன்...

மீனாட்சி : அப்ப என்ன செய்யறதுங்க...?

சிதம்பரம் : பொருளைச் சேர்த்து வைக்கும் இடம் ஏழைகள் வயிறு என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன் பெற்றான் பொருள்வைப்புழி. ஐந்து பத்து

ஐயருக்குக் கொடுக்கும் தானத்தை ஐம்பது, நூறு ஏழைகளின் வயிற்றுக்குச் சோறுபோடு...

மீனாட்சி : ஆமாங்க! உங்க நண்பர் பாரதி வயிற்றுக்குச் சோறிட வேண்டுமென்றுதான் கூறியிருந்தார். அக்கா திதிக்கு ஏழைகளுக்குச் சோறுபோடுவோம்.

சிதம்பரம் : மீனாட்சி என்றால் மீனாட்சிதான். நான் சொன்ன கருத்தை உடனே புரிந்துகொண்டாய். ஆயிரம் உரூபாய் பேழையில் இருக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்து செலவுசெய். மேலும் ஏதும் செய்தி...?

மீனாட்சி : ஒன்று மறந்துவிட்டேங்க... நேற்று நீங்கள் இல்லாத பொழுது ஒருத்தர் வந்திருந்தார்...

சிதம்பரம் : ஒருத்தர் என்றால் எப்படி? யாரென்று தெளிவாகச் சொல்...!

மீனாட்சி : கவிஞர் என்று சொன்னால் புரியுமென்றார்.

சிதம்பரம் : கவிஞரா...? தன் மகளுக்குத் திருமணம் என்று கூறினார்... ஐந்நூறு கேட்டிருந்தார்.

(கவிஞர் வருதல்)

கவிஞர் : ஐயா கவிஞன் வந்திருக்கின்றேன்! வரலாமா?

சிதம்பரம் : வாருங்கள்! வாருங்கள்!... மகள் திருமண வேலைகள் எப்படி போய்க்கொண்டிருக்கின்றன?

கவிஞர் : வெள்ளையப்பன் ஆட்சியில் வெள்ளிப் பணத்தால் தடை....

சிதம்பரம் : மீனாட்சி அந்தப் பணப் பேழையை எடுத்துவா.

கவிஞர் : நீங்கள் உதவுவதாகச் சொன்ன பணத்தை ஒரு ஆயிரமாக உயர்த்திக் கொடுத்தால் நலமாக இருக்கும் திருமணத்தைச் சிறப்பாக முடித்து விடுவேன்.

(மீனாட்சி பேழையைத் தருதல், சிதம்பரம் அதில் இருந்த ஆயிரம் முழுவதையும் எடுத்துத்தரல்)

சிதம்பரம் : இந்தாருங்கள் ஆயிரம் உருபாய்...

கவிஞர் : ஐயா இன்று வெள்ளிக்கிழமை... நினைவூட்டத்தான் வந்தேன், நாளை வாங்கிக் கொள்கிறேன்.

சிதம்பரம் : வெள்ளி என்பதும் செவ்வாய் என்பதும் வெள்ளிப் பணத்திற்கு இல்லை... மனத்திற்குத்தான். எனது வீடு தேடி வந்த தமிழ்ப்புலவர் வெறுங்கையோடு செல்லக் கூடாது. பெற்றுக்கொண்டு திருமணத்தைச் சிறப்பாய்ச் செய்யுங்கள்.

கவிஞர் : நன்றி ஐயா வருகிறேன்.

சிதம்பரம் : நன்று ஐயா வாருங்கள்.

(மீனாட்சி வெறும் பேழையை ஏதும் பேசாமல் எடுத்துச் செல்ல முனைதல்)

என்ன மீனாட்சி ஏதும் பேசாமல் போகிறாய்... அக்காவின் நினைவுநாளுக்கு உள்ள காசை எடுத்துக் கொடுத்துவிட்டேன் என்ற கோபமா?

மீனாட்சி : அப்படியெல்லாம் ஒன்றும் இல்லீங்க... ஒரு பெண்ணின் வாழ்விற்கு வழிகாட்டினதே அக்காவிற்குச் செய்தது போலத்தான்...

சிதம்பரம் : பலே...! வள்ளியம்மையின் நினைவு நாளுக்குச் சில நாட்கள் இருக்கின்றன... அதற்குள் கண்டிப்பாக வாய்ப்பு வரும்... ஏழைகளுக்கும் சோறுபோடலாம்...! சரி இந்த ஏழைக்கும் சோறு போடக் கூடாதா...? உணவை எடுத்துவை... கை கழுவிவிட்டு வருகிறேன்.

மீனாட்சி : எடுத்துவைக்கிறேங்க...இன்னும் ஒன்றுங்க... சிவா அண்ணனையும், அப்பாதுரையையும் நேற்று இரவிலிருந்து காணோம்...

சிதம்பரம் : சுப்பிரமணிய சிவா திருநெல்வேலி போயிருக்கார். வந்துவிடுவார்...

(சுப்பிரமணிய சிவா வருதல்)

சுப்பிரமணிய
சிவா : சிவம்... சுப்பிரமணியசிவம் இதோ வந்துவிட்டார் நல்ல நேரம்... மீனாட்.சி சோறு போடம்மா?

மீனாட்சி : அண்ணன் வந்துவிட்டார்... இந்த அப்பாதுரை...

சுப்பிரமணிய
சிவா : யாரு அப்பாதுரையா...? கிள்ளிவளவன் போர்க்களிறு போல் உள்ளே வராமல் மருகி வாயிலில் நிற்கிறார்...

மீனாட்சி : அப்படியா...? அப்பாதுரையண்ணே உள்ளே வாங்க...!

(அப்பாதுரை உள்ளே வருதல்)

சிதம்பரம் : என்ன அண்ணே! கருப்புக்குதிரை, சிவப்புக்குதிரை சவாரியா? எப்படியிருந்தது...?

அப்பாதுரை : ஐயோ தம்பி என்ன மன்னிச்சிடுங்க! அந்த வெள்ளைக்காரன் சொல்லக்கேட்டு இந்தியர் கெட்டதுபோல இந்தக் கொள்ளைக்காரக் கட்டப்பய பேச்சு நம்பி நான் கெட்டேன்...

சிதம்பரம் : தவறுதல் இயல்பு... கள்ளுண்ணுவதும் நஞ்சுன்பதும் ஒன்று... வள்ளுவரும் "துஞ்சினார் செத்தாரில் வேறல்லர்; எஞ்ஞான்றும் நஞ்சுண்பர் கள்ளுண்பவர்"... அதைத் தொடர்ந்து செய்யாதீங்க...

அப்பாதுரை : இல்லதம்பி இல்ல... இனி தவறவேமாட்டேன்.

மீனாட்சி : எல்லோரும் சாப்பிட வாங்க!

(திரை)

## காட்சி - 4

அரங்கம் : வலப்புற அரங்கம்; கனவுக் காட்சி உச்சியரங்கம்.

களம் : பெரியசாமி வீடு.

காலம் : இரவு.

உறுப்பினர்கள்: பெரியசாமி, சின்னசாமி, கட்டபொம்மன், சாக்சன்.

பெரியசாமி : அப்பா சிதம்பர நாத...! எங்கள் நாட்டிலேயே இந்த அடிமை வாழ்வு ஏன்? வெள்ளையர் பிடியில் அல்லல்படுகிறோம்! எங்களுக்கு விடியலை என்று காட்டப்போகிறாய்? காலையானால் மில்லுக்குப் போகணும்... இல்லை அரை வயிறு கஞ்சிக்கும் அல்லல் படணும். அப்பனே சிதம்பர நாத...!

(தூங்கி குறட்டை விடுதல்)

சின்னசாமி : பெரியசாமி அண்ணே! பெரியசாமி அண்ணே! தூங்கிட்டீங்களா? இனி விடியல் வரை குறட்டை தாலாட்டிலேதான் தூங்கணும்... நாமும் படுப்போம். (படுத்தல்)

பெரியசாமி : (பெரியசாமி தூக்கத்தில்) ஏய் வெள்ளைக்கார நாயே! எங்கள் கட்டபொம்மனை உன்னால் என்ன செய்ய முடியும்... அக்... அக்... (சிரித்தல்)

(கனவுக் காட்சி)

கட்டபொம்மன் : அக்... அக்... க... (சிரித்தல்)

வீரன் என்னை அழைத்து வீணம் பேசும் சாக்சன் துரையே! நீர் எம்மிடத்தில் விழைவது என்ன?

சாக்சன் : கட்டபொம்மன்... நீ எங்களுக்குச் செலுத்த வேண்டிய திரையையும் அதன் காலதாமதத்திற்கான வட்டியையும் செலுத்தவில்லை... பலமுறை ஆணை அனுப்பியும் நீ கீழ்ப்படிவதில்லை... வாட் மேன்? (What man?)

கட்டபொம்மன் : வரி... வட்டி... திரை... அக்கக்க... (சிரித்தல்) ஆட்டுத்தோல் அளவு வணிகம் செய்ய இடம் கேட்டு, எங்கள் நாட்டைப் பிடிக்க நினைக்கும் நயவஞ்சக வெள்ளையனே! இது எங்கள் நாடு... வானம் பொழிகிறது. நாங்கள் பாடுபட பூமி விளைகிறது... இங்கிடையே நீ யார்? எங்களோடு வயலுக்கு வந்தாயா? ஏற்றம்

இறைத்து நடுவயல் நிரையக் கண்டாயா? நாற்று நட்டாயா? களை பறித்தாயா? இங்கே கொஞ்சி விளையாடும் எம்குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துப் பணிபுரிந்தாயா? மாமனா? மச்சானா? மானங்கெட்டவனே துடிக்கிறது மீசை...

சாக்சன் : கட்டபொம்மன் மீசையை முறுக்காதே! பின் விளைவுகளைச் சந்திக்கும் படி இருக்கும்.

கட்டபொம்மன் : வீணம் பேசும் எத்தனே...! வீரம் எங்கள் பிறவிக் குணம்...! வீரம் இருந்தால் நேருக்கு நேர் நில்...!

சாக்சன் : சிப்பாய்களே...! இவனைப் பிதித்து (பிடித்து) சிறையில் அடையுங்கள்.

கட்டபொம்மன் : எலியென நினைத்தாயே வெள்ளையனே? கட்டபொம்மன் என்றும் புலியடா?

(காட்சி முடிதல்)

பெரியசாமி : விடாதே கட்டபொம்மா... விடாதே அந்த பரங்கியன் தலையைப் பந்தாடு... பந்தாடு... வெள்ளையனை விரட்டு... வெள்ளையனை விரட்டு...

சின்னசாமி : பெரியசாமி அண்ணே... (தண்ணீரை முகத்தில் தெளித்தல்) என்ன அண்ணே? தூக்கத்தில் கட்டபொம்மன்னு ஒரே புலம்பல்...

பெரியசாமி : என்னப்பா ஒரு நல்ல கனவைக் கெடுத்துட்டே...! வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளையனை விரட்டும் போது கெடுத்துட்டியே...!

சின்னசாமி : வெள்ளைக்காரன் ஆலையில வேல செஞ்சுகிட்டு வெள்ளக்காரனை வெரட்டுணுமுன்னு கனவு காணுறீங்களா? வெள்ளைக்காரனை எதிர்த்தவனெல்லாம் என்ன ஆனாங்கன்னு தெரியுமில்லே...?

பெரியசாமி : சிதம்பநாதா! கனவுலகூட விடுதலை எண்ணம் வரக்கூடாதுன்னு... நம்ம இந்தியனே சொல்றான்... உம்...

சின்னசாமி : அண்ணே! மாடு முட்டி வானம் கிழியாது. கோழி கூவி பொழுதும் விடியாது! அடிமையா இருக்கிற நாம கூவினா நாக்கு வரண்டு, தொண்ட காஞ்சி, வயிறுதான் வலிக்கும்... ஏழைகளுக்கு ஏதுன்னே ஏகாதேசி? என்ன கொஞ்சம் தூங்க விடுங்க...

பெரியசாமி : சிதம்பரநாதா இப்படிச் சொல்லிச் சொல்லி நாட்ட தூங்க விட்டுடாங்கப்பா... வானத்து சின்ன மழைத்துளி தான் ஆறு, சின்ன விதைதான் பெரிய ஆலமரம்...

சின்னசாமி : விதைக்கறதுக்கு உன் சிதம்பரநாதன் தான் வரணும்...

பெரியசாமி : சிதம்பரநாதன் வரணுமின்னு இல்ல அவன் ஒரு சிதம்பரத்தையே அனுப்பியிருக்கான்.

சின்னசாமி : குண்டுமில்லாம... மருந்தும் இல்லாம திரி கொளுத்தாதீங்க... கொஞ்சம் புரியும்படியா சொல்லுங்க...

பெரியசாமி : ஓட்டபிடாரம் உலகநாதப் பிள்ளை மகன் சிதம்பரம் நம்ம தூத்துக்குடிக்கு வந்திருக்கிறார். அவர் பாரதி கண்ட 'அக்கினிக் குஞ்சு'. பாரேன் இந்தத் தூத்துக்குடி நிலையை...! பாரேன் இந்த வெள்ளையக்காரன் படும்பாட்டை!

சின்னசாமி : அவர தீவிரவாதி என்றில்ல சொல்றாங்க...

பெரியசாமி : அவர் தீவிரவிரவாதி இல்லை, தீமையை எதிர்க்கும் அதிதீவிரவாதி.

(திரை)

## காட்சி - 5

அரங்கம் : இடப்புற அரங்கம்.

களம் : பூங்கா.

காலம் : மாலை.

உறுப்பினர் : மக்கள், பெரியசாமி, சிதம்பரம், சிவா.

சிவம் : சிவம்... சுப்பிரமணியசிவம்... அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்த வீர இந்தியத் திருநாட்டின் மக்களே! அண்டிப் பிழைக்க வந்த வெள்ளைக் கூட்டம் நம்மை ஆள நினைக்கிறது. இம் என்றால் சிறையும் ஏனென்றால் நாடுகடத்தலும் செய்கிறது. தட்டிக் கேட்க ஆளில்லாம் கெட்டுவிட்டனர்...! வீரம் சிறந்த தீரப்படையே எழுக! எழுக!! இன்று நாம் மூட்டும் எதிர்ப்புத் தீயில் வெள்ளைப் பேய்கள் வெருண்டு ஓடட்டும். 'சுயராசியம் எனது பிறப்புரிமை' என்ற திலகரின் குரல்ஒலி எட்டுத் திக்கும் எதிரொலிக்கட்டும்! சுயராசியம் எங்கள் பிறப்புரிமை...!

மக்கள் : சுயராசியம் எங்கள் பிறப்புரிமை...

சிவம் : அன்புத் தலைவர் உலோகமான்ய பால கங்காதர திலகரின் அன்புச்சீடர் சிதம்பரம் நம்மிடையே உரையாற்றுவார்.

சிதம்பரம் : என்னருமைத் தாய்த்திருநாட்டின் அன்புச் சகோதரரே! சகோதரியரே!... வணக்கம்... கதிரவனே தனது ஆட்சியின் கீழ் மறைவதில்லை. என்ற ஆணவம் கொண்ட வெள்ளையரின் கொள்ளையாட்சி நம்மை அடிமைப்படுத்தி வருகிறது. 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்...' என்றும் மானம் போற்றிய நம் பழமைக் குடியினரை ஈனமாய் நடத்துகின்றனர். துறைதொறும் துறைதோறும் அந்நியம் புகுந்து பசுத்தோல் போர்த்திய புலியாய் நம்மை அடிமைப்படுத்தி வருகிறது. உதவாதினி ஒருதாமதம்...! உடன் விழிக்க வேண்டும். அடிமைச் சிந்தனையால் பட்டது போதும். எம் குருநாதர் திலகர் அறைகூவல் விடுத்துவிட்டார். 'சுயராச்சியம் நமது பிறப்புரிமை' என்று முழக்கமிட வைத்துவிட்டார். நமது உழைப்பில் விளைந்தவற்றை வாங்கவும் விற்கவும் சுதேசி பண்டகச் சாலை அமைப்பை உருவாக்கிவிட்டார். அந்நியப் பொருள்களை வாங்குவதில்லை என நம்மை உறுதியெடுக்கச்

செய்துள்ளார். வணிக வாயிலால் குடியேறிய வெள்ளையன் வணிகம் ஒழிந்தால் ஒழிந்து போவான்... இதுவரை தூங்கிக் கிடந்தது போதும்...விழித்தெழுவோம். 'அந்நியப் பொருள்களைத் தீயிட்டுக் கொளுத்துவோம்...' வந்தே மாதரம்...

(அந்நியப் பொருள்களைத் தீயிட்டுக் கொளுத்துதல்)

சிவா : கொழுந்துவிட்டு எரியும் இந்தத் தீ... சுதந்திரத்தீ... இது திக்கெட்டும் பரவி அந்நிய ஆதிக்கத்தை அழிக்கும்...

(நிகழ்ச்சி முடிந்து எல்லோரும் கலைந்து போக சிவா, சிதம்பரம் திரும்புதல்)

பெரியசாமி : வந்தே மாதரம்... வந்தே மாதரம்...

சிவா : யார்? பெரியசாமியா? வாப்பா...

பெரியசாமி : உங்களையும் சிதம்பரம் ஐயாவையும் தனியாய்ப் பார்த்து பேசணும் என்றுதான்...

சிதம்பரம் : சொல்லுங்கள் பெரியசாமி... ஏதும் உதவி தேவையா...?

பெரியசாமி : இந்த நாட்டுக்கு விடுதலை வேண்டும்... அதுபோதும்...

சிவா : விடுதலை கிடைத்துவிட்டது...! இப்படி, பட்டி தொட்டியெல்லாம் விடுதலை உணர்வு பெருகினால் விடுதலை கிடைக்காமலாப் போய்விடும்...

சிதம்பரம் : உறுதியாக எல்லோரும் பாடுபடுவோம். வேறு ஏதோ கூற வந்திருக்கின்றீர்! என்னவென்று தயங்காமல் கூறுங்கள்...!

பெரியசாமி : கோர மில்லில் வெள்ளையர் வெறிச்செயல் அதிகமாகிக்கொண்டே போகிறது... தொழிலாளர்களைப் பெரிசா மதிக்க வேண்டாம்... மனிதன் என்கின்ற நிலையிலாவது நடத்தலாம்... அதுவும் கிடையாது. ஆடுமாடுகளைப் போல நடத்துகிறார்கள். இந்தியர் என்றால் ஏனோ

வெறுக்கிறார்கள். அதற்குச்சில இந்தியரே துணையாகவும் நிற்கிறார். மேல்மட்டம் முதல் கீழ்மட்டம் வரை ஒரே ஊழல். உள்ளபடி உழைக்கிற எங்களின் உரிமை மறுக்கப்படுகிறது. சொந்த நாட்டில் பிறர்க்கு அடிமையாகவே இருக்கின்றோம்.

சிவா : 'பெரியசாமி... சிதம்பரத்திடம் சொல்லிவிட்டாய்...! கண்டிப்பாகத் தீர்வு கிடைக்கும். நரிக்கு நாட்டாண்மை கிடைத்தால் கிடைக்கு எட்டாடு கேட்குமாம்...! உம்... பல கோடி மக்களின் விடுதலைக்குப் பாடுபடும் நாம் சில நூறு மனிதர்களின் விடுதலைக்கும் பாடுபடுவோம்.

சிதம்பரம் : சிவம் நிறுவாக ஊழல்கள் வெளிப்படையாகவே தெரிகின்றன... அதற்குக் காரணம் இந்த மண்ணில் பிறந்த சில எட்டப்பரும் நமது ஒற்றுமையின்மையுமே ஆகும்... நாம் ஒன்றுபட்டால்... உயரலாம்.

பெரியசாமி : ஐயா இப்ப சொல்லுங்க... நூறு இல்ல... இருநூறு பேர கூட்டிக்காட்டுகிறேன்... ஒன்றுபட நாங்கள் தயார் எங்களை வழிநடத்தத் தலைவர்தாம் இல்லை.

சிவா : கவலைப்படாதீர். நமது சிதம்பரம் நம்மை வழி நடத்துவார்.

பெரியசாமி : அப்போ நான் வருகிறேன்.

(பெரியசாமி போதல்)

சிவா : என்ன சிதம்பரம் சிந்தனை...

சிதம்பரம் : கோரமில் தொழிலார்க்கானப் போராட்டத்தை உடனே தொடங்க வேண்டும்...

சிவா : நேரடியாகப் போராட்டமா?

சிதம்பரம் : முதலில் பேச்சு... வெள்ளைக் கும்பல் பணியாது பிறகு போராட்டம்...

சிவா : வந்தே மாதரம்...

(திரை)

## காட்சி - 6

**அரங்கம்** : **இடப்புற அரங்கம்.**

**இடம்** : **பூங்கா.**

**காலம்** : **மாலை.**

**உறுப்பினர்** : **தொழிலாளத் தோழர் பெரியசாமி, சின்னசாமி, அப்பாதுரை, கட்டப்பன், (பிச்சைக்காரன்) இளவரசன், சிவா.**

சிவா : என் அன்புத் தோழரே! சிவம்... சுப்ரமணிய சிவம் வந்திருக்கின்றேன்... உங்களின் அடிமை வாழ்க்கைக்கு விடுதலை கிடைக்கப் போகிறது. என் அன்பு நண்பன் சிதம்பரம் உங்களுக்காக வெள்ளைதுரையோடு போராடப் போகிறார். வெள்ளையனை எதிர்த்துப் போராடுவது எளிய செயல் இல்லை... இறுதி வரை நாம் ஒற்றுமையாக இருந்தால்தான் வெற்றியைப் பெற முடியும்... வியர்வைத்துளி சிந்த உழைக்கும் நம்மைக் குருதித்துளி சிந்த வைக்க முயல்வார்... எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுவோம்... வந்தே மாதரம்.

**எல்லோரும்** : வந்தே மாதரம்...

**பெரியசாமி** : என்ன தோழர்களே! ஐயா சொன்னதைக் கேட்டீங்களா...? நமது கவலை ஒழியும் என்ற நம்பிக்கையோடு இருப்போம்...! ஒன்றுபடுவோம்! போராடுவோம்! வெற்றி பெறுவோம்!

**எல்லோரும்** : ஒன்றுபடுவோம்! போராடுவோம்! வெற்றி பெறுவோம்!

சிவா : நமது வாழ்வில் ஒளி பெருகும் என்ற நம்பிக்கையோடு சென்று வாருங்கள்...

(கூட்டம் களைதல்)

பெரியசாமி : ஐயா போதுங்களா? எங்களால் முடிந்தவரை தொழிலாளரைக் கூட்டி விட்டோம்...

சின்னசாமி : என்ன துன்பம் வந்தாலும் உங்களோடு துணையிருப்போம்...

சிவா : உறுதியோடு நாம் ஒன்றுபட்டு இருந்தால் கிடைக்காத ஒரு பொருளும் இல்லை... என் நண்பர் பாரதியும் இதை

**ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்**
**ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வே**
**நன்றிது தேர்ந்திடல் வேண்டும் இந்த**
**ஞானம்வந்தால் பின்பு நமக்கெது வேண்டும்**

என்று கூறியிருக்கின்றார்.

*(காலணிகளைத் தூய்மைசெய்யும் பணியில் இளவரசு)*

பிச்சைக்காரன் இளவரசு : ஐயா! உங்கள் காலணிகளைத் தாருங்கள் தூய்மை செய்து தருகிறேன்...

சிவா : காலனி ஆதிக்கத்தில் நாடு சிக்கியுள்ளதால் எனது கால்களும் காலணி அணிவதில்லை...

பிச்.இளவரசு : ஐயா...! காசிற்கு யார்யார் காலணிகளையோ தூய்மை செய்கின்றேன்... நாட்டுபற்றுமிக்க உங்களுக்கு உதவ என்னால் முடியாமல் போய்விட்டதே! மன்னியுங்கள்...

அப்பாதுரை : தம்பி... நீங்க... (கையைப் பிச்சை எடுப்பதுபோல் காட்டி...) அந்தத் தம்பிதானே...!

பிச்.இளவரசு : ஆமாம் ஐயா... ஆம்... அன்று பிச்சையெடுத்து உண்ட அதே பிச்சைக்காரன்தான்... ஆனால் இன்று உழைத்துண்ணும் உழைப்பாளி... பெயர்... இளவரசன்...

சிவா : செய்யும் தொழில் அனைத்தும் தெய்வம்தாம்... குறைவில்லாமல் செய்...

பிச்.இளவரசு : இதிலும் மனக்குறை ஒன்றுள்ளது...

அப்பாதுரை : என்னப்பா?

இளவரசு : இந்தத் தொழிலில் இந்தியர் காலைப் பிடிப்பதிலும் அந்நியர்க் காலைப்

பிடிப்பதுதான் அதிகமாக இருக்கிறது... வருத்தமாக இருக்கிறது...

சிவா : இளவரசன்!

இளவரசன் : இளவரசன்! ஆகா... ஐயா என்னை இளவரசன் என்று முதலில் அழைத்தவர் தாங்கள்தான்... நன்றி ஐயா

சிவா : வருத்தப்பட்டு எந்த தொழிலும் செய்யக்கூடாது.

இளவரசன் : இந்த முடவனால் வேறு என்ன செய்ய முடியும்...? உங்களைப் போல நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்றும் ஆசைதான்? எனக்கு யார் உதவுவார்...?

சிவா : உள்ளுவதுள் எல்லாம் உயர்வுள்ளல் என்று ஒன்று இருக்கிறது... நினைப்பதில் உயர்வாய் நினை... ஆயிரம் பேர் உதவிக்கு வருவார்... என் அன்புத் தோழர் சிதம்பரத்தை ஒரு முறை பார் உதவிகள் கிட்டும்... வரட்டுமா...?

அப்பாதுரை : நான் சிதம்பரம் ஐயா வீட்டுலதான் வேலை செய்கிறேன்... வாங்க... கவனிச்சுக்குறேன்... வரட்டுமா?

(இருவரும் போதல். கட்டப்பன் வருதல்)

கட்டப்பன் : ஏய் இந்த பூங்காவை... கூட்டமேடையா மாத்திட்டீங்களா? கூட்டமா போடுறீங்க? இருங்கடி உங்களுக்கு வைக்கிறேன். துரைக்கிட்ட ஆப்பு... (இளவரசனைப் பார்த்து) ஏய் பெக்கர் (Beggar)...

இளவரசன் : ஐயா சொல்லை அளந்து பேசுங்கள்...

கட்டப்பன் : இல்லேன்னா எழுந்து வந்து வெட்டிடுவியோ? உன் பேரு தெரியாது அதான், உன் பேரு என்ன?

இளவரசன் : என் பேர் இளவரசன்.

கட்டப்பன் : இளவரசன்! (நக்கலாக) நல்ல பேரு...! நல்ல தொழில்! இதபாரு... சிதம்பரம், சிவா, நாட்டுப்பற்று... அது இதுன்னு போனேன்னு

வைச்சுக்க... மறுபடி ஒட்ட எடுத்துக்கிட்டுதான் நிக்கணும்... என் கூடவா... துரைகிட்டச் சொல்லி உன்ன இளவரசன்... இல்ல - இராசாவாவே ஆக்கிடுறேன்...

(இளவரசன் ஒன்றும் பேசாதிருத்தல்)

என்னப்பா பேசமாட்டேங்கிறே! நீ அந்தக் கூட்டமில்ல சாரி (Sorry) காலுக்கு ச்சீ... சூவுக்குப் (Shoe) பாலிசு (Polish) போடு... பிச்சக்காசி ரெண்டு கிடைக்கும்... (கட்டப்பன் காலைப் பெட்டிமேல் வைத்தல். இளவரசன் கையில் இருந்த கருவியால் ஓங்கி குத்துதல்) ஐயோ! போச்சி போச்சி காலு போச்சி... ஏலே... உன்ன துரைக்கிட்டச் சொல்லி வைக்கிறேன்டா...

இளவரசன் : ஏய்! அந்நியக் கைக்கூலி! இனியும் பேசினே காலுல விழுந்த அடி தலையிலே விழும்... ஓடு...

கட்டப்பன் : செஞ்சாலும் செய்வேடா...! இப்ப ஓடிறதுதான் புத்திசாலித்தனம்... என்னைக்கு இருந்தாலும் உங்க பிச்சகாரக் கூட்டத்துக்கு நான்தாண்டா...

(இளவரசன் கையில் கிடைத்ததை எடுத்து எறிதல்)

அப்பா... அம்மா... இப்ப தப்பிச்சிக்குவோம்... என்ன பாக்குறீங்க இதுதாங்க இராச தந்திரம்.

(திரை)

## காட்சி - 7

அரங்கம் : நடு அரங்கம்.

களம் : கோரல் மில் துரை மாளிகை.

காலம் : ஒரு நாள் காலை.

உறுப்பினர் : சிதம்பரம், சிவா, பத்மநாப ஐயங்கார், வெள்ளைத்துரை, பி.எ.ஐயர், அப்பாதுரை, கட்டப்பன்.

வெள்ளைத்துரை : ஏய் பி.எ.ஐயர் (P.A.Ayyar)! அந்த இண்டியன் டாக்சு (Indian dogs) சின்னாத் தாம்பி... பெரியாத் தாம்பி ரெண்டு பேரையும் வரச்சொல்லு.

பி.எ.ஐயர் : காலையிலேயே என்ன ஏன் வரச் சொல்றாள்... ஓ அவாள வரச்சொல்ளறாளா... ஏய் கெட்டப்பா... சாரி (Sorry) கட்டப்பா அவாள வரச்சொல்

(பெரியசாமி, சின்னசாமி வருதல்)

பி.எ.ஐயர் : வாங்கடாப்பா... வாங்க... பெரிய புரட்சி எல்லாம் பன்றேளாமே! வெள்ளைக்காரப் பாட்டன் கூப்பிட்ருக்கான் வாங்கிக் கட்டிண்டு போங்கோ!

பெரியசாமி, சின்னசாமி : வணக்கம் துரை...

வெள்ளைத்துரை : ஏய்... இண்டியன் டாக் (Indian dog)... நீங்க என்ன பெரிய பிரிட்டீசு கிங்கோ (British King)? வாட்மேன்... வாட் (What man... What)? என்னா? மில்லுக்கு எதிரா கொடி புடிக்குதோ?

பெரியசாமி : இல்ல துரை... எங்க துன்பம்...

வெள்ளைத்துரை : என்னாமேன்... உங்க தூம்பம்...

பி.எ.ஐயர் : துன்பத்தைத் தூம்பம் ஆக்கிட்டேள் (தனக்குள்) இவன் நாக்குல தர்ப்பையைப் போட்டுத்தான் பொசுக்கனும்.

வெள்ளைத்துரை : வாட்... பி.யே.ஐயர் (What P.A.Ayyar) என்ன... பொலம்புது...

பி.எ.ஐயர் : இந்த அடிமைக் கூலிங்க... இராசா மாறி நினைக்குறாங்க. அத சொன்னேன்.

சின்னசாமி : ஐயிரே...! வெளியே வா...! உன்னை வச்சிக்கிறேன்.

பி.எ.ஐயர் : இகி.. இகி.. (சிரித்து) துரை நீங்களே 'கண்டினியூ' (Continue) பண்ணுங்கோ...

வெள்ளைத்துரை : நீ... ரெண்டு பேரும் அந்த தேசத்துரோகி சித்தாம்பரத்துடன் சேர்ந்திருக்கு... நம்ம கம்பனிக்கு எதிராக் கொடிபுடிக்குது...

பெரியசாமி : இல்லை துரை... வந்து...

வெள்ளைத்துரை : வாட்.... (What) இல்லை சொல்லுது... யூ ஆர் டாக்கிங் டூ மச்... (You are talking too much) (தலையாட்டி) மோார் (More), மோசு(ஸ்) ட்டு (Most) (பெரியசாமியைக் கன்னத்தில் அடித்தல்)

பி.எ.ஐயர் : ஏண்டா... பெரியசாமி... இங்கெல்லாம் ஒன் வே டிராப்பிக் (One way traffic) - ஒரு வழிப்பாதை - சொல்லுறத கேட்டுக்கணும் - வாயால திரும்பிப் பேசப்படாது.

வெள்ளைத்துரை : இத பாரு மேன் (man). இது பிரிட்டீசு கம்பெனி... (British Company) இந்த நாடும், இந்த நாட்டு மக்களும் எங்கள் அடிமைகள்... என்ன புரிஞ்சுத்தா?

(பெரியசாமி தலையை ஆட்டுதல்)

என்ன மேன்... வாயில என்ன? நான் கேட்கிறேன்... தலையை ஆட்டுற...

(பெரிய சாமியின் மறு கன்னத்தில் அடித்தல்)

ஏய் பூல்... (Ai fool) சின்னச்சாமி... யூ... டூ... (You too) நீ கூடவா?

பெரியசாமி : (சின்னசாமியிடம்) பேசினாலும் அடிக்கிறான். தலை ஆட்டினாலும் அடிக்கிறான். பேசாம இருப்போம்.

வெள்ளைத்துரை : என்ன மேன் (man)... நான் கேட்கிறேன்... நீ அசையாம நிக்கிது!

(துரை அடிக்க சின்னசாமி குனிந்து கொள்ள ஐயர் கன்னத்தில் படுதல்)

சாரி... ஐயர். (Sorry Ayyar)

பி.எ.ஐயர் : சம்பளம் கொடுக்கிற எசமான்... அடிச்சுட்டேள்... பரவாயில்லே... கண்ட்டினியூ (continue) பண்ணுங்கோ... அப்பா... கன்னம் புளிச்சு போச்சு...

வெள்ளைத்துரை : இதுதான் உங்களுக்குக் கடைசி எச்சரிக்கை... போராட்டம், கீராட்டம் என்று வந்தால் சீட்டைக் கிழிச்சுடுவேன். கெட் அவுட்... (get out).

கட்டப்பன் : அப்புறம் குடிக்கற கால் வயித்துக் கஞ்சிக்கும் திண்டாடணும்.

சின்னசாமி : (மெல்ல) இப்ப நீ பரமசிவம் கழுத்து பாம்பு...! கருடா சவுக்கியமா வா? வெளிய வாடி... (சின்னசாமி, பெரியசாமி வெளியே செல்லல்)

பி.எ.ஐயர் : இவன்களெல்லாம் இப்படி இருக்குறதுக்குக் காரணம் அந்த சிதம்பரம் பிள்ளை தாங்க...,

வெள்ளைத்துரை : யார் மேன் (Man)? அந்த சித்தாம்பரம்...

பி.எ.ஐயர் : சித்தாம்பரம் இல்லிங்க... சிதம்பரம்.

வெள்ளைத்துரை : அதான் மேன் சித்தாம்பரம்... அவன் யார் மேன் (Man)?

பி.எ.ஐயர் : புரட்சிக்காரன்... திலகர் கட்சிக்காரன்...

வெள்ளைத்துரை : அப்ப அந்த பெலோ (fellow) கிட்ட எச்சரிக்கையாத்தான் இருக்கணும்.

கட்டப்பன் : மைலார்டு... (My Lord) சிதம்பரம் வந்து விட்டார்...

வெள்ளைத்துரை : வாட்... (What) (தடுமாறி) சித்தாம்பரமா?

கட்டப்பன் : அவர்கூட சுப்பிரமணிய சிவாவும், பத்மநாப ஐய்யரும் ஒரு எடுபிடியும் வந்திருக்கிறாங்க...

வெள்ளைத்துரை : பி.எ.ஐயர்... அந்த பெலோ (fellow) கிட்ட பேசிகிட்டு இரு... நான் பாத்ரூம் (bathroom) போய்ட்டு வந்துறேன்.

கட்டப்பன் : இப்ப வரத்துக்கு முன்னே தானே போயிட்டு வந்தீங்க...

வெள்ளைத்துரை : சட்டப்... (shut up) ஒரு நாற்காலியைத் தவிர எல்லாத்தையும் எடுத்து உள்ளே போடு...

(வெள்ளைத்துரை உள்ளே போதல் சிதம்பரம் குழுவினர் உள்ளே வருதல்)

பி.எ.ஐயர் : வாங்க பிள்ளைவாள்... வாங்க... வாங்க...

பத்மநாபன் : என்ன பி.எ.ஐயர்வாள் வாளும்... நீட்டா இருக்கு தூரமும் நீட்டா இருக்கு...

பி.எ.ஐயர் : பத்பநாபன் ஐயங்கார் வாளா... வாரும்மையா... நோக்கு வேலை வெட்டி ஏதும் கிடையாதா? நெத்தி நிறைய நாமத்தைப் போட்டுண்டு பக்திப் பரவசமா இருக்கேள்! பெருமாள் கோயில் பக்கம் போவாம இங்க என்னவோய்... அதுவும் இவாளோட...

கட்டப்பன் : துரைக்கிட்ட யாருக்காவது வேலை வேணுமுன்னு சிபாரிசுக்கு வந்திருப்பாங்க... இல்ல அதப்பன்றேன் இதப்பன்றேன்னு நன்கொடைக்கு வந்திருப்பாங்க! வேல வெட்டி ஒன்றும் இல்லை! அதான் இப்படிக் கிளம்பிட்டாங்க...

அப்பாதுரை : எனக்கு ஒரு வெட்டி வேல இருக்கு .

கட்டப்பன் : என்ன வேல...

அப்பாதுரை : உன் நாக்க வெட்டுற வேலை...

கட்டப்பன் : நீ செஞ்சாலும் செய்வ...

(கட்டப்பன் போதல்)

பி.எ.ஐயர் : அதுசரி ஒரு கூட்டமா எதுக்கு வந்திருக்கேள்...

சிவா : நாங்கள் எதற்கு வந்திருக்கிறோம் என்று உமக்குத் தெரியாதா?

சிதம்பரம் : தூங்குவாரை எழுப்பலாம். தூங்குவது போல் இருப்பவரை எப்படி எழுப்பமுடியும்?

பி.எ.ஐயர் : தெரியும்... ஒரு பேச்சுக்காவது கேக்கணுமில்லே...

சிதம்பரம் : பேச அழைத்துவிட்டு எதற்கு வந்தீர் என்கிற விந்தையை இங்குதான் பார்கிறேன்.

பி.எ.ஐயர் : ஒரு வெட்டி வேலையா வந்திருக்கீங்கன்னு தெரியும்.

அப்பாதுரை : வெட்டி வேலையா? (அரிவாள் போல் கைகாட்டி) வெட்டு வேலையான்னு வெளிய வந்தாத் தெரியும்.

பி.எ.ஐயர் : பிள்ளைவாள்... நோக்கு ஏன் இந்த வெட்டி வேலை. நாட்ட ஆள்றதும் அவாதான். நம்மல ஆள்றது அவாதான். 'கோரல் மில்' எவாளுக்குச் சொந்தமுன்னு தெரியுமா ஓய்...? வெள்ளைக்காரனுக்குச் சொந்தமானது. இங்கே அவா வெச்சதுதான் சட்டம்... அதபோயி கேட்டு ஏழை பாழைக்குக் கிடைக்கிற அரைவயிறு கஞ்சியும் கெடுத்துடாதீர்... கூட வந்திருக்கேளே ஓய் ஐய்யங்கார்...!

ஓய்... உம்மத்தான் ஓய்... சிவா... உம்மையும்தான் இவாளுக்கு எடுத்துச் சொல்லி அழைச்சுண்டு போயிடுங்கோ... வெள்ளைக்காரன் பொல்லாப்பு வேண்டாம்.

அப்பாதுரை : (எதையோ தேடுதல்) எங்கே காணோம்...?

பி.எ.ஐயர் : என்னவோய்...? தேடுறீர்...!

அப்பாதுரை : தலையிருக்க வாலு ரொம்ப நேரமா ஆடுதே... அருவா கிருவா இருந்து எடுத்து ஒரு போடு போடலாமுன்னுதான்.

பி.எ.ஐயர் : ஒரு முடிவோடத்தான் வந்திருக்கேள்! அப்பா கட்டத்துரை நம்ம வெள்ளத்துரையைக் கூப்பிடு! அவா சொன்னாதான் இவாளுக்குப் புத்தி வரும் போல இருக்கு.

(வெள்ளைத்துரை வருதல்)

வெள்ளைத்துரை : வாட்மேன்... (What man) கூ... ஆர்... யூ...? (Who are you?) உங்களுக்கு என்ன வேணும்...

சிதம்பரம் : நான் சிதம்பரம்...

சிவா : நான் சிவம்... சுப்பிரமணியசிவம்.

பத்மநாபன் : நான் பத்மநாப ஐயங்கார்.

அப்பாதுரை : நான்...

வெள்ளைத்துரை : உசு... எங்கே வந்திச்சி...

சிதம்பரம் : எங்கள் நாட்டின் பண்பாக ஒன்றை உங்களிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்றுதான்...

வெள்ளைத்துரை : யூமீன் இண்டியன் கல்சர்... (You mean Indian culture) இண்டியப் பண்பாடு... சொல்லுமேன்...

சிதம்பரம் : இந்தியநாட்டில் ஏழையாக இருந்தாலும் வீட்டிற்கு வந்தவர்களை வரவேற்று, அமரச்செய்து, குறைந்த அளவு ஒரு குவளை தண்ணீராவது கொடுப்பான்...

சிவா : அந்த பண்பாட்டில் வேண்டாத சிலரை வரவேற்று இன்று அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம்.

வெள்ளைத்துரை : ஓ... சாரி... (Oh! sorry) கட்பான் நாற்காலிகள் கொண்டுவந்து போடு...

சிதம்பரம் : வேண்டாம் நீக்கப்பட்டவை... நீக்கப்பட்டவையாகவே இருக்கட்டும். ஆண்டவன் கால்களுக்கும் உள்ளத்திற்கும் உள்ள வலிவைக் குறைத்துவிடவில்லை.

வெள்ளைத்துரை : மிசு(ஸ்)டர் (Mister) சித்தாம்பரம்...! நீ இங்கே எதுக்கு வந்தது?

சிதம்பரம் : சில நியாங்களைக் கேட்க...

சில திருத்தங்களைக் கூற...

வெள்ளைத்துரை : யாருக்கு மேன்... (man) நியாயம்?

என்ன மேன் (man) திருத்தம்?

சிதம்பரம் : கோரல்மில் தொழிலாளர்க்குக் கிடைக்க வேண்டிய நியாயம்... உங்கள் அடிமைப்படுத்தும் செயல்பாடுகளில் வேண்டும் திருத்தம்...

வெள்ளைத்துரை : இந்தமில் பிரிட்டீசார்க்கு (British) உரியது... எங்களுடையது... இதைப்பற்றி கேட்க அடிமைகளாகிய உங்களுக்கு ஏது மேன் உரிமை... இதைக் கேட்க நீ யார் மேன்?

சிவா : முப்பது கோடி மக்களின் தலைவனாம்... திலகரின் சீடன்... விடுதலை வீரன் சிதம்பரம்...

வெள்ளைத்துரை : கூ ஆர்யூ மேன்... (Who are you man?) நீ யார்...? பார... தேசி...

பி.எ.ஐயர் : பார-தேசி இல்லை பரதேசி...

வெள்ளைத்துரை : யா... யா... (ya... ya...) பார... தேசி...

சிதம்பரம் : துரை... மையிண்டு யுவர் வேட்சு... (Mind your words) நாவை அடக்கிப் பேசும்... இவர் இந்த இந்தியத் திருநாட்டின் விடுதலைச் சிற்பி... சிவம்... சுப்பிரமணிய சிவம்...

சிவா : விடு சிதம்பரம்... கோபப்படாதே... அய்யா! துரை! பரம் என்றால் மேல் தேசம் என்றால் இடம் தேசி என்றால் இடத்திற்கு உரியவன். நான் பரதேசியாகவே இருந்துவிட்டுப் போகிறேன்... நீர் சுகதேசியாகவே இரும். உம்மிடம் வேலை பார்க்கும் ஊழியரிடமாவது இரக்கமாய் இரும்...

வெள்ளைத்துரை : மிட்டர்ஸ் சித்தாம்பரம்... டூ யுவர் வொர்க்... (Do your work)

பி.எ.ஐயர் : உம்ம வேலையைப் பாருங்க...

வெள்ளைத்துரை : திசு(திஸ்) மில்லீசு(ஸ்) அவர்ச்சு... (This mill is ours)

பி.எ.ஐயர் : இந்த ஆலை எங்களுடையது...

வெள்ளைத்துரை : (பி.எ.ஐயரைப் பார்த்து) யூ சட்டப்... (you shut up) (சிதம்பரத்திடம்) நாங்க வைச்சதுதான் சட்டம்... விருப்பம் இந்தா உங்க ஆள வேல செய்யச்சொல்லு மேன்... இல்லேன்னா வெளியே போகச்சொல்லு... எங்களிடம் ஆயிரம் பேர் வேலை கேட்டு இருக்காங்க அவர்களுக்குக் கொடுத்துடறேன்.

சிதம்பரம் : மிட்(மிஸ்)டர் (Mister) துரை! இது எமது நாட்டையும் கேவலப்படுத்தும் செயல்...

வெள்ளைத்துரை : இது உங்கள் நாடா...? எப்போ மேன்...? இது எங்கள் நாடு...! நீங்கள் எங்கள் அடிமைகள்...! இங்கே நாங்கள் வைத்ததுதான்

சட்டம்...! உங்களிடம் என்ன சக்தி மேன் இருக்கிறது.

சிதம்பரம் : இருக்கிறது... உங்களிடம் இல்லாத மனித சக்தி... த மேன் பவர்... (The Man Power) அதன் ஆற்றல் உமக்குத் தெரியாது... இப்போது காலம் எம்மை ஓடப்பராகவும் உம்மை ஓட்டப்பராகவும் வைத்திருக்கிறது... ஓடப்பர் எல்லாம் உதையப்பர் ஆனால் நீயும் நானும் ஒப்பொப்பர் ஆகிடுவோம் எச்சரிக்கை....

வெள்ளைத்துரை : ஐயர் இவன் என்ன சொல்றான்...?

பி.எ.ஐயர் : எனக்கே புரியல... உங்களுக்கு எங்கே புரிய போவுது...! கி சேசு எபவுட் கிட்(ஸ்) மேன்... மேன்பவர்... (He says about his man... Man power)

வெள்ளைத்துரை : பவர்... (Power) இட்சு அவர்சு... (It's ours) சக்தி எங்களுடையது.

சிவா : முடிவாக என்ன சொல்கிறீர்...

பி.எ.ஐயர் : அவா உங்களத் தொடங்கவே விடுலே... முடிவக் கேக்குறேள்...

வெள்ளைத்துரை : மிட்(மிஸ்)டர் பி.எ. (Mister P.A.) எனக்கு வேலையிருக்கு... வந்ததுற்கு... ஏதாவது கொடுத்தனுப்பு... (உள்ளே போதல்)

பத்பநாபன் : அவமானம்... அவமானம்...

சிதம்பரம் : துரை, மக்கள் ஆற்றல் என்னவென்று தெரியாமல் போகிறான்...

பி.எ.ஐயர் : அப்புறம் என்ன போகலாம்... அந்தாளு கொடுக்கச் சொன்னது. வேணுமா?

அப்பாதுரை : என்ன?

கட்டத்துரை : போங்க... போங்க... வெளிய போங்க...

அப்பாதுரை : நீங்க வெளிய போங்க... இந்த ஐயர நான் பார்த்துட்டு வந்துடுறேன்... (மூவரும் வெளியேறுதல்)

அய்யா... அய்யரே... உம்ம பேரு பி.எ.ஐயர்தானா...

பி.எ.ஐயர் : ஆமா... பிச்சுமணி அய்யர் மகன் ஏகாம்பர ஐயர்... அதத்தான் சுருக்கி வைச்சுட்டேன்... துரைக்கும் பி.எ. அதனாலயும் வெச்சுட்டேன்... எப்படிப் பொருத்தமா இருக்கா...?

அப்பாதுரை : நல்ல பொருத்தம்...! அப்படியே சொல்லிப்பாரும்... (மூக்கை பிடித்து கொள்ளல்) நாறும்... வரட்டுமா...?

(போதல்)

பி.எ.ஐயர் : என்ன என் பேர நாறுமுன்னு சொல்லிட்டுப் போறான். பி.எ.ஐயர்... பியே ஐயர்...
ஏய்... ஏய்... போயிட்டன்...அப்ப ஐயர் பிஏ ன்னு வைச்சுக்குவமா...? அதுவும் தான் நாறும்...! அடே அப்பாதுரை என் பேர நாற அடிச்சிட்டியடா.

கட்டப்பன் : அவன் நாற அடிக்கலே... உம் பேருதான்...

பி.எ.ஐயர் : போடாங்க... கயவாளி.

(திரை)

## காட்சி - 8

அரங்கம் : இடப்புறவரங்கமும், உச்சியரங்கமும் (கனவுக்காட்சி.)

களம் : பூங்கா.

காலம் : ஒருநாள் மாலை...

உறுப்பினர் : பெரியசாமி, சின்னசாமி, கட்டப்பன், பூலித்தேவன், துபாசு முதலி.

(கனவுக் காட்சி)

புறப்பட்டார்... புறப்பட்டார்... (பாடல்)

புறப்பட்டார் புறப்பட்டார்

பூழித் தேவன்
பொங்கி எழுந்தது
பூழிப் படையே (புறப்பட்டார்)

யூசுப்பின் படைகளும்
கேதானின் படைகளும்
நாடி தளர்ந்தன
ஓடி ஒளிந்தன... (புறப்பட்டார்)

தமிழரின் தன்மானம்
தரணியில் நிலைத்திட
தகும்வழி செய்திட்டார்
பூழித் தேவன்... (புறப்பட்டார்)

வெள்ளைப் பெரும்படை
துள்ளி விழுந்தது...
கள்ளவழி வந்தார்
இல்லை யென்றாகினார்... (புறப்பட்டார்)

பூழித்தேவன் : வெள்ளைக் கும்பினியின் துபாசு முதலியே... போரென வந்துவிட்டு சமாதானக் கொடியேன்? கொன்றால் கொக்கரிப்பும் தோற்றால் கால்பிடிப்புமா...? அக்...அக்...க... (சிரித்தல்)

துபாசு முதலி : மன்னர் பூழித்தேவனே... வெள்ளையர்கள் சாதாரணமானவர் அல்லர்... அவர்கள் திண்டுக்கல் மதுரையைப் பிடித்த ஆற்றல் உடையவர்கள்... என்றாலும் உங்களிடம் சமாதானமாகப் போக விரும்புகிறார். நீங்கள் பெயரளவில் உரூபாய். 2000 மட்டும் வரியாக...

பூழித்தேவன் : முதலியே, ஒன்று கேள்... சமாதானம் என்றால் வரச்சொல் - உடன் உண்ணச்சொல் பரிசாய் இரண்டாய் என்ன இருபது ஆயிரம் தருகின்றேன். பெறச்சொல்... ஆனால் வரி... வட்டி... என்று எம் பாளைய மண்ணுள் எவர் வரினும் அவர் தலையிருக்காது... ஓடும்...

(பெரியசாமி அமர்ந்த நிலையில் கனவு காணுதல்)

பெரியசாமி : பூழித்தேவா... பொங்கியெழு! வெள்ளையனைச் சந்தித்த முதல் வெற்றியாளனே! பொங்கியெழு... பொங்கியெழு...

சின்னசாமி : பெரியசாமி அண்ணே! பகலிலேயே தூக்கமா... முதலில் நீ பொங்கியெழு... (எழுப்புதல்) என்ன தூக்கமா...?

பெரியசாமி : இல்லப்பா... கொஞ்சம் அயர்ந்துட்டேன்...!

சின்னசாமி : விடுதலைப் போராட்டக் கனவா... இன்னைக்கு யாரு பூழித்தேவனா...

பெரியசாமி : ஆமாம்பா... நேத்து சிவா ஐயா மேடையில பூழித்தேவனைப் பத்தி சொன்னார்... அதுதான்...

சின்னசாமி : உனக்குப் பரவாயில்லை உனது கனவிலே சுதந்திரப் போராட்ட வீரர்... வர்றாங்க, எனது கனவிலே வெறும் வெள்ளைக்காரனா வந்து வெறுப்பேத்துராங்க... வரவர என் பெண்டாட்டியும், பிள்ளைகளும் வந்து மிரட்ட ஆரம்பிச்சிட்டாங்க...

பெரியசாமி : கனவுல மட்டுந்தானா...? என்ன பசி பசின்னு மிரட்டுராங்களா?

சின்னசாமி : இல்ல எப்ப மில்லு திறக்குமுன்னுதான்...?

பெரியசாமி : உம்... பிப்ரவரி ஏழுல தொடங்கின போராட்டம் மார்ச்சு பொறந்திடுச்சு... இன்னும் முடியல...

சின்னசாமி : முடியிறா மாதிரியும் தெரியில...

(கட்டப்பன் வருதல்)

கட்டப்பன் : எப்படி முடியும்...? நீங்க எதிர்த்து இருக்கிறது யார...? துரைய... வெள்ளக்காரத் துரைய... பசி வந்தா பத்தும் பறந்துபோகும் என்று காத்திருக்காங்க... இப்ப சொல்லுங்க இத்தனை நாள் ஆச்சே... என்னப் பண்ணினீங்க... மில்லு திறந்தபோது கொஞ்ச கஞ்சியாவது கிடைச்சிது... இப்ப அதுவும் இலங்கணம்...

சின்னசாமி : ஏய் கட்ட.... மில்லு திறந்தப்ப அரைவயிறுதான் இப்ப முழுவயிறும் நிறைஞ்சுதான் இருக்கோம்...! உன் எட்டப்பன் வேலையை இங்கு காட்ட வேண்டாம்... ஓடிப்போயிடு.

கட்டப்பன் : இதபாருங்க... சித்தாம்பரத்தை... சீ... சிதம்பரத்தை நம்பி கெட்டுப் போயிடாதீங்க... உங்களைப் பாதிப்பேர பிரிச்சி எங்கிட்ட கொண்டாந்திடுங்க... உங்களுக்கு

வெள்ளிக்காசு கிடைக்கும்... மில்லும் திறக்கும்... வேலையும் கிடைக்கும்...

சின்னசாமி : இப்ப உனக்கு உதைதான் கிடைக்கும்... போடா...!

கட்டப்பன் : திருந்த மாட்டிங்களே...! பட்டாத்தான் திருந்துவீங்கன்னு நினைக்கிறேன்... கெட்டும் உங்களுக்குப் புத்தி வரலே...

பெரியசாமி : ஏலே... போடா... இல்லே உனக்கு அருவா வெட்டுத்தான் கிடைக்கும்...! (அரிவாளை எடுத்தல், கட்டப்பன் ஓட்டம் பிடித்தல்)

சின்னசாமி : நாடு இருக்கிற இருப்பிலே... நம்மிலும் இதுபோன்ற எட்டப்பன்... உம்...

பெரியசாமி : பசியக் காட்டிப் பணிய வைச்சுடுவான்னு தான், சிதம்பரம் ஐயா நமக்குப் பசியில்லாமல் பார்த்துக் கொள்கிறார்...!

சின்னசாமி : தனி ஒரு ஆளா இருந்து இத்தனைப் பேருக்கும் எப்படியண்ணா சமாளிக்கிறார்...?

பெரியசாமி : அதுதான் சிதம்பரம் ஐயா...! ஐயா மட்டும் இல்லதம்பி...! அவர் மனைவி இருக்காங்களே அவங்களும் புண்ணியவதி! மனம் கோணாம எப்படிக் கவனிச்சிக்கிறாங்க தெரியுமா...?

சின்னசாமி : இந்த கட்டப்பய நம்ம கூட்டத்துகுள்ள புகுந்து குட்டி கலாட்டாச் செஞ்சிடப் போறான்! நான் அங்கப் போறேன்...! நீங்க சிதம்பரம் ஐயா வீட்டிற்குப் போயிட்டு வாங்க...!

பெரியசாமி : சரிப்பா...

(திரை)

## காட்சி - 9

**அரங்கம்** : நடு அரங்கம்.

**களம்** : சிதம்பரம் வீடு.

**காலம்** : ஒருநாள் காலை...

உறுப்பினர் : சிதம்பரம், சிவா, மீனாட்சி, பாரதி, வள்ளியம்மை, பெரியசாமி.

சிதம்பரம் : மீனாட்சி... எல்லா மில் தொழிலாளர் வீட்டிற்கும் சாப்பாடு ஏற்பாடு செய்து விட்டாயா...?

சிவா : சிதம்பரம்... மீனாட்சியிடம் எந்த செயலை ஒப்படைத்தாலும் சிறப்பாகவே செய்வாள்... அவள் யாரின் மனைவி...? அதுமட்டுமல்ல என் தங்கை...

மீனாட்சி : (கண்ணீர் மல்க நிற்றல்) என் கூட பிறந்தவர்கள் கூட என் மீது இவ்வளவு பாசமாக இருப்பார்களா...?

சிவா : என்ன மீனாட்சி... இப்படிச் சொல்லிவிட்டாய்! நான் ஒரு துறவி... என்னால் நாட்டுப் பற்றையும்... இந்த வீட்டுப்பற்றையும் மட்டும்தான் துறக்க முடியவில்லை... ஏனென்றால் என் நண்பர்

சிதம்பரமும்... என் தங்கை நீயும், என் மருமக்களுமே இதற்குக் காரணம்... நாட்டுக்காக வீட்டைத் துறந்தேன். இன்று நாட்டுப்பற்றாளர் வீட்டில் இருக்கிறேன்...! என்னைப் பற்றாளன் ஆக்கிவிட்டீர்.

சிதம்பரம் : பாசமலர்களே போதும்...! போதும்...! இத்தனை நாட்கள் ஆகியும் இந்த வெள்ளையர் கூட்டத்திற்கு ' இன்னும் இரக்கம் ஏற்படவில்லையே. நம்மில் சிலரைப் பிரித்துக் கொண்டுபோய் போராட்டத்தைச் சீர்குலைத்து விடுவாரோ...? என்று அஞ்சுகிறேன்... (மீனாட்சி உள்ளே செல்லுதல்)

சிவா : ஆம்! வெண்ணை திரளும் நேரத்தில் சட்டி உடையக்கூடாது... இருந்தாலும் வெள்ளையன் சூழ்ச்சியே சூழ்ச்சி... உம். இதில் நம் தொழிலாளர் விலைபோய்விடக் கூடாது.

(பாரதி மாறுவேடத்தில் உள்ளே வருதல்)

பாரதி : அன்பர்களே! நானும் உங்களோடு கலந்து கொள்ளலாமா?

சிவா : யாரப்பா... நீர்...?

(சிதம்பரத்தைக் கட்டித் தழுவுதல்)

சிதம்பரம் : வாரும் புரட்சிக் கவிஞரே!

சிவா : புரட்சிக் கவிஞரா...?

பாரதி : சிவம்... சுப்பிரமணிய சிவம்... என்னைத் தெரியவில்லை... நான்தான்...

சிவா : பாரதி... சுப்பிரமணிய பாரதி... (கட்டித் தழுவுதல்) என்ன இந்த மாறுவேடம்...?

பாரதி : புரட்சிக்குழுப் பட்டியலில் எனது பெயரும் உள்ளது என்பதை மறந்து விட்டீரோ...? சிதம்பரம் பெயரும், உமது பெயரும் கூட சேர்க்கப் பட்டுவிட்டன. இந்த வீட்டைச் சுற்றியும் ஒரு ஒற்றன் இருக்கிறான்... அதோ பார்...

(குழந்தை வள்ளியம்மை வருதல்)

வள்ளியம்மை : அப்பா யார் இவர்? புதிதாக இருக்கின்றார்...! (பாரதியிடம்) நீங்கள் யார்...?

பாரதி : நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்கு உழைத்தல் இமைப் பொழுதும் சோராது இருந்தல்... அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலை விரும்பி... சுப்பிரமணிய பாரதி... உன் அப்பாவின் நண்பன்...

வள்ளியம்மை : இல்லை... நான் அவரைப் பார்த்திருக்கேன்...! தலையில் தலைப்பாகையுடனும்... கையில் தடியுடனும் இருப்பார். அது உங்களிடம் இல்லை...

பாரதி : பாரதியை எங்கே பார்த்திருக்காய்...?

வள்ளியம்மை : புகைப்படத்தில்தான்... என் அப்பாவுடன் பார்த்திருக்கேன்.

சிவா : வள்ளியம்மை, இவர் பாரதிதான்...! மாறுவேடத்தில் வந்திருக்கின்றார்.

வள்ளியம்மை : அப்படியா? உங்களுக்குத் தலைப்பாகை எதற்கு?

பாரதி : வெள்ளைக்காரன்... கையில் வைத்திருந்த துணியைக் கக்கத்தில் வைக்கச் சொன்னான் நான் முடியாது என்று தலையில் கட்டிக் கொண்டேன்.

வள்ளியம்மை : கையில் தடி எதற்கு?

பாரதி : 'நாட்டிற்கு நானே தலையாரி என்றான் வெள்ளைக்காரன்!' அவனுக்கும் தலையாரி என்பதைக் காட்டத்தான் தடி எடுத்தேன்...

வள்ளியம்மை : அப்ப தலைப்பாகையும் தடியும் எங்கே?

பாரதி : வெள்ளைக்காரக் கொள்ளைக்காரன் தட்டிப் பறித்துவிட்டான்...

வள்ளியம்மை : ஐயோ பாவம்...! அப்பா இந்த மாமாவிற்கு உங்கள் தலைப்பாகையும், ஒரு தடியும் வாங்கிக் கொடுங்கள்...

பாரதி : அதை வாங்க உன் அப்பாவிடம் காசு இல்லையே.

வள்ளியம்மை : அதற்கென்ன எனது கைகளில் இரண்டு வளையல்கள் இருக்கின்றன. அதைத் தருகின்றேன். உங்களுக்குத் தலைப்பாகையும், கைத்தடியும் நன்றாகவே இருக்கின்றன.

பாரதி : (உணர்ச்சிவசப்பட்டு, மண்டியிட்டு) அம்மா வள்ளியம்மை! என் சுதந்திர தேவியே...! என் சுதந்திர தேவியே! உன்னைப் போன்றவர் இம்மண்ணில் தோன்றிவிட்டனர். இனி இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்து விடும்...! உறுதியாகக் கிடைத்துவிடும்... உன்னைக் கண்ட எனக்கு ஆனந்தப் பள்ளு பாடத் தோன்றுகிறது. (பாடுதல்)

ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோமென்றே...
ஆடுவோம்...ஆடுவோம்...ஆடுவோமே!

(மீனாட்சி வருதல்)

மீனாட்சி : எல்லோரும் சாப்பிட வாங்க... அண்ணா... இவர்...?

சிவா : சுப்பிரமணியபாரதியார்...

மீனாட்சி : ஐயா வணக்கம்.

பாரதி : சிவா உனக்கு அண்ணன்!... இந்தப் பாரதி உனக்கு ஐயாவா...? அந்நியனா...?

மீனாட்சி : இல்லை ஐயா.

பாரதி : மீண்டும் ஐயாவா...? எனக்குச் சாப்பாடு இல்லை...?

மீனாட்சி : ஐயா...! நீங்கள் எங்கள் வீட்டில்...

பாரதி : மீனாட்சி... சிவாவைப் போல நானும் உனக்கு அண்ணன் தான்...! சாதியத்தால் நாடு அழிந்தது போதும். இது அடிமைச் சிந்தனையில்லா வீடு... இந்த வீட்டில் உண்பதை விடச் சிறப்பு வேறு எந்த வீட்டில் கிடைக்கும். இந்த வீட்டில் உணவு உண்ண எனக்குச் சுதந்திரம் உண்டு.

வள்ளியம்மை : மாமா...! நீங்க வாங்க! நாம சுதந்திரமாகச் சாப்பிடுவோம்.

பாரதி : அப்படிச் சொல்லுடா என் கண்ணே...! (பாடுதல்)

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு-நாம்
எல்லோரும் சமமென்ப துறுதியாச்சி...
சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே -
இதைத் தரணிக் கெல்லாம் எடுத்து
ஓதுவோமே...

(சிவா, சிதம்பரம், வள்ளியம்மை,
மீனாட்சி பாடுதல். ஆடுவோமே பள்ளு...)
(பெரியசாமி வருதல்)

பெரியசாமி : ஐயா வணக்கம்... ஐயா பாரதிங்களா...?

பாரதி : ஆமாம் எப்படிக் கண்டுபிடித்தீர்...?

பெரியசாமி : அதான் விடுதலைப் பாட்டு பாடுறீங்களே...!

சிதம்பரம் : என்ன பெரியசாமி...? ஏதும் செய்தி உண்டா?

பெரியசாமி : இருக்குங்க... கட்டப்பன் உள்ளே புகுந்து ஒற்றுமையைப் பிரிச்சுடுவான் போலிருக்கு...

பாரதி : அவன் வெள்ளைக்காரன் கைக்கூலியா...?

பெரியசாமி : ஆமாம்.

பாரதி : **நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த நிலைக் கெட்ட மனிதரை நினைத்து விட்டால்...**

சிதம்பரம் : பெரியசாமி கவலைப்படாதே...! வெற்றிக் கனி பறிக்கும் நேரம் வந்துவிட்டது. எப்பொழுதும் போல் பூங்காவில் இன்று மாலை தொழிலாளரைக் கூடவை...! பாரதி பேசுவார் என்று மத்தனமாக (இரகசியமாக)ச் சொல்லிவை...! இன்றுவரை காத்த இறைவன் இனியும் காப்பான்...!

பெரியசாமி : சரிய்யா... நான் வருகின்றேன்.

(பெரியசாமி போதல்)

சிதம்பரம் : என்ன மீனாட்சி...? எனது கணக்குப்படி கையிருப்பெல்லாம் நேற்றோடு தீர்ந்திருக்க வேண்டுமே...!

மீனாட்சி : ஆமாங்க... இத எப்படித் தெரிந்து கொண்டீர்கள்...?

சிதம்பரம் : இன்று கையில் வளையல் காலியாகி இருக்கிறதே! அதை வைத்துதான்...!

மீனாட்சி : நகை எப்ப வேண்டுமானாலும் கிடைக்குங்க...? தொழிலாளர் வயிறு காத்திருக்காதுங்க... அக்கா திதியன்னைக்குக் கிடைக்காத வாய்ப்பு இப்ப கிடைச்சிருக்குங்க... அதான்...

சிதம்பரம் : பரவாய் இல்லை...! ஆனால் நாளைய உணவிற்கு என்ன செய்யப் போகிறாய்...?

வள்ளியம்மை : கவலைப் படாதீர்கள் அப்பா...! எனது கைவளையல்கள் இருக்கின்றன. (கழட்டித் தருதல்) எடுத்துக் கொள்ளுங்கள்...

பாரதி : அதை எனக்குத் தருவாதாய்ச் சொன்னாய்...!

வள்ளியம்மை : ஒன்று உங்களுக்கு, ஒன்று தொழிலாளர்களுக்கு!

பாரதி : அதுவும் போதவில்லை என்றால்...?

வள்ளியம்மை : எனது காதில் அணிகளும், காலில் அணிகளும் இருக்கின்றன. அவற்றையும் தருகின்றேன்.

சிவா : ஆகா...!

சிதம்பரம் : இனி எனக்கொரு கவலையும் இல்லை... கொடு தாயே! அவை ஏழைகளுக்கு உதவட்டும்...!

பாரதி : வீட்டுக்கு ஒருவர் நாட்டுக்காக வேண்டுமென நான் நினைத்தேன், ஒரு வீடே நாட்டிற்காக உழைக்கிறது. சிதம்பரம் என் அருமை நண்பா...! நீயே... நீ...! நினது குடும்பமே நாடு...!

மீனாட்சி : எல்லோரும் சாப்பாட்டை மறந்துவிட்டோம் வாங்க சாப்பிட... பாரதி அண்ணா நீங்களும் வாருங்கள்.

*(திரை)*

## காட்சி - 10

அரங்கம் : இடப்புற அரங்கம்.

களம் : பூங்கா.

காலம் : ஒருநாள் மாலை...

உறுப்பினர் : தொழிலாளர், சிதம்பரம், சிவா, பாரதி, பெரியசாமி, சின்னசாமி, அப்பாதுரை, பி.ஏ.ஐயர், மக்கள்.

சிதம்பரம் : இன்று மார்ச்சு ஆறு... இதுவரை நாம் நமது போராட்டத்தால்... நாம் யாரென மில் நிறுவனத்திற்குக் காட்டிவருகின்றோம்... வெள்ளை நிறுவாகம் பணியும் நாள் வெகுதொலைவில் இல்லை...! அதுவரை பொறுமை காப்போம்...! தற்போழுது... விடுதலைக் கவிஞன் பாரதியின் பொன்னுரை கேட்போம்...

பாரதி : ஒளி படைத்த கண்ணினாய் வா, வா, வா!
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா, வா, வா!

களிபடைத்த மொழியினாய் வா, வா, வா!
கடுமைகொண்டு பொங்குவாய் வா, வா!வா!

அயலானுக்கு அடிமையில்லை என்று இம்மண்ணின் பெருமை காக்கும் கோரமில் தொழிலாளர் நல்லினமே! வணக்கம். நம் சிதம்பரம் பிள்ளை திலகர் கண்டெடுத்த நல்முத்து... வடக்கே திலகரின் குரல் ஓங்கி ஒலிக்கிறது என்றால்; தெற்கே சிதம்பரத்தின் குரல் ஒலிக்காமாலா இருக்கும்...? இத்தன்னலமற்ற தியாகியை நம்புக... இவர் மட்டுமல்ல, இவர் குடும்பமே உங்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளது. இன்று காலை இவரின் மகள் வள்ளியம்மை... நமக்கெல்லாம் உணவில்லை என்றபோது தமது கையணி, காளின்அணி, காதணிகளைக் கழட்டித் தந்தாள்... இது எனது உள்ளத்தை நெகிழ வைத்தது. இத்தகைய சிறப்பு மிக்க தலைவரை நாம் பாராட்டுகிறோம். நீங்களும் பாராட்டுங்கள். வந்தே மாதரம்.

(கைதட்டல்)

கட்டப்பன் : (மக்கள் கூட்டத்திற்கு இடையே தன்னை மறைத்துக் கொண்டு...) எல்லாம் சரி என்னைக்கு மில்லத் திறக்க விடுவீங்க. அதச்சொல்லுங்க...

பெரியசாமி : ஏய்! அங்க யாருடா? கூட்டத்துல குட்டிக் காலாட்டாப் பண்றது.

சிவா : பொறுமை தோழரே! பொறுமை! மில் நிறுவனம் விரைவில் பணியும், அதுவரையில் பொறுமையையும், ஒற்றுமையையும் காப்போம், பலர் பல வகையில் நம்மைப் பிரிக்கப் பார்க்கின்றனர். நமது பசியை மூலதனமாக்கப் பார்க்கின்றனர். நமது ஒற்றுமையின் சக்தி, உறுதியாக வெற்றியைப் பெற்றெடுத்துத் தரும்.

(பி.ஏ.ஐயர் வருதல்)

பி.ஏ.ஐயர் : பிள்ளைவாள்... வெற்றி கிடைச்சிடுச்சிவே...

சின்னசாமி : நாரதர் வந்துட்டீர்...! எங்கே நன்மை வரப்போவுது...?

பி.ஏ.ஐயர் : அம்பி... என்ன நாரதர்ன்னு தானே சொல்றேள்...! சொல்லிக்கோ...! நாரதர் கலகம் நன்மையில்தான் முடியும் தெரியுமோ...?

சிதம்பரம் : ஐயர்... என்ன செய்தி...?

பி.ஏ.ஐயர் : சிதம்பரம்வாள்... நீர் செயிச்சுட்டீர்! நிறுவாகம் பணிஞ்சிடுச்சு...

சிதம்பரம் : அப்படியா...? கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்கோ...

பி.ஏ.ஐயர் : போர்டு மீட்டிங் (Board meeting)... நடந்தது... அதுல 30 நாட்களாக மில் மூடினதால் ஏற்பட்ட நட்டத்தைவிட அவர்களுக்குக் கேட்பதைக் கொடுத்தால் வரும் நட்டம் குறைவுதான்னு முடிவு எடுத்துட்டாள்... தொழிலாளர் நலன்னுல்ல அக்கறை இல்லாத வெள்ளத்துரையைப் பிடித்து காய்ச்சிட்டா... நீங்க வைத்த கோரிக்கை எல்லாம் நிறைவேற்றிடலாமுன்னு உறுதியாகச் சொல்லிட்டாள்... மீட்டிங் (Meeting) முடிஞ்ச கையோடு... உங்க கையில வந்துட்டன்...

சிவா : ஐயா... நீங்க சொல்லுவதெல்லாம்...

பி.ஏ.ஐயர் : உண்மைதான்... உண்மைதான்... உண்மையைத்தவிர வேறொன்றும் இல்லை. இது சத்தியம்... போர்டுக்குச் (Boar) சிதம்பரம் பிள்ளையைத் துரை கையோடு அழைச்சுட்டு வரச் சொன்னாள்...

சிதம்பரம் : தோழரே! நமக்கு மாலைப் பொழுதிலே விடியல் செய்தி கிடைத்துள்ளது. மில் நிறுவனம் நமது கோரிக்கைகளை ஏற்றுள்ளது. அதற்கும் நன்றி சொல்வோம்...

சிவா : இந்த வெற்றிக்கு முழுக்காரணம் சிதம்பரம்பிள்ளைதான்...! இவரும், இவர் வைத்த சங்கமும் நீடு வாழ்க...!

பெரியசாமி : தொழிற்சங்கத் தலைவர் சிதம்பரம்...

அனைவரும் : வாழ்க... வாழ்க...

சின்னதுரை : தொழிலாளர் நலச் சங்கத் தலைவர் சிதம்பரம்...!

அனைவரும் : வாழ்க... வாழ்க...

பெரியசாமி : இத்துடன் கூட்டம் நிறைவுறுகிறது. நாளைக்கு வேலைக்குச் செல்ல தாயார் ஆகுங்கள்... மன்னிக்கனும் தயார் ஆகுங்கள்...

பி.ஏ.ஐயர் : என்ன பிள்ளைவாள் போகலாமா...?

சிதம்பரம் : கொஞ்சம் இருங்கள் பாரதியோடு பேசி அனுப்பிவிட்டு வருகிறேன்...

(சிதம்பரம் போதல்)

அப்பாதுரை : ஐயர் சாமி... என்ன நினைவிருக்கா...?

பி.ஏ.ஐயர் : அப்பாதுரை...! உன்ன மறக்க முடியுமா...? என் பெயரையே நாற அடிச்சவனாட்சே...!

அப்பாதுரை : இன்றும் அதே பேர் பி.ஏ.ஐயர் தானா...

பி.ஏ.ஐயர் : உம்... பி.ஏ.ஐயர்... ஐயர் பீயேன்னு போட்டுப் பார்த்தேன் நாத்தம்தான் அடிச்சுது. ஏகாம்பர ஐயர் பீன்னும் மாத்திப் பார்த்தேன் அதுவும் சரியில்லை 'ஏகாம்பர ஐயர் பிச்' ன்னு வைத்துப் பார்த்தேன். வெள்ளைக்காரன் திட்டுறாமாறி இருந்தது... இப்ப மாத்தி ஏகாம்பர ஐயர் பிச்சுன்னு வைச்சிகிக்கிட்டேன்... எப்படி...?

அப்பாதுரை : உங்க பேர இப்படி பிச்சு வைச்சிட்டேளே...

பி.ஏ.ஐயர் : அடே...! அடே...! குறைகாணுவதற்குப் பொறந்தவனே... எனது தூக்கத்தைக் கெடுத்துடாதேடா... ஏகாம்பர ஐயர் பிச்சுமணி... பிச்சுமணி ஏகாம்பர ஐயர்... ஐயோ குழப்பிட்டானே...! ஏய்...! இது என் பேர்...! நான் எப்படி வேணும்மாலும் வைச்சுக்கிறேன்...! போடா...!

(சிதம்பரம் திரும்பி வருதல்)

சிதம்பரம் : நாம் புறப்படலாம்...

பி.ஏ.ஐயர் : எங்கே...? (நினைவுற்றவராய்) ஓ... புறப்படலாம்... புறப்படலாம்...

(திரை)

## காட்சி - 11

**அரங்கம் : வலப்புற அரங்கம். கனவுக்காட்சி உச்சியரங்கம்.**

**களம் : பெரியசாமி வீடு.**

**காலம் : இரவு.**

உறுப்பினர் : சின்னமருது, பெரியமருது, ஊமைத்துரை, கர்னல் வேல்சு, பெரியசாமி, சின்னசாமி.

(பெரியசாமி தூங்குதல்)

சின்னசாமி : நிம்மதியாத் தூங்கி ரொம்ப நாளாச்சி. மில்லத் திறந்தாச்சு; உழைச்சும் களச்சாச்சி, பெரியசாமி அண்ணன் வரத்துக் குள்ளே தூங்கணும்... அட யாரிது? கொரட்டை கும்மாளம் போடுவது... அப்ப பெரியசாமி அண்ணன் தான்...

(பெரியசாமி... கையாட்டி முறுக்குதல்)

கனவு காட்சி... தொடங்கியாச்சி பாருங்க...

(கனவுக் காட்சி)

கர்னல் வேல்சு : சின்னமருது... ஊமைத்துரை... பெரியமருது பணியமாட்டீர்களா...? இப்போது பிணைக்கப் பட்டக் கைதிகள்... அக்... அக்... க... அ... (Ah! Ah!...) (சிரித்து)... பிரண்ட் (Frien) சின்னமருது... உன் கடைசி ஆசை...

சின்னமருது : மூவாயிரம் வெள்ளிக் காசுக்காக நட்பை மறந்த வேல்சு...! நீயும் மனிதனா...? என்னினிய தாய் நாட்டு மக்களே... என்றும் அந்நியன் அந்நியன் தான்... அன்பு நண்பன் ஊமைத்துரைக்காக உயிர் விடுதலைப் பெருமையாக நினைக்கறேன். போலிகளின் நட்புறவை விட; புகழ்மிக்க வீர நண்பனுக்காக எனதுயிர் போகட்டும்.

கர்னல் வேல்சு : உம்... ஊமைத்துரை... உனது ஆசை.

ஊமைத்துரை : அண்ணன் வீரபாண்டிய கட்டபொம்முவிற்குக் கயத்தாறு! தம்பியெனக்குத் திருப்பத்தூர் கோட்டைத் தென்மூலை... நாடு நகரங்களை மண்ணோடு மண்ணாக்கிய வெள்ளைப் பேடியே...! நட்பை... மதிக்காத துரோகியே...! எனது நாட்டில் எம்மைத் தூக்கிலிடும் நீயும் உன்னாட்சி அதிகாரமும் மண்ணோடு மண்ணாக வேண்டும்! தமிழ் மண்ணே! அண்ணா! உன் தம்பி வீரப் போரில் மடியாமல் கோழையாகத் தூக்கில் சாகிறான். அதுவும் அடைக்கலம் தந்த இரு நண்பர்களின் உயிர்க்கு எமனாய்.

கர்னல் வேல்சு : அதுவும் எனது கையால் சாகின்றனர் அது இவரின் பேட்...(Fate) விதி... பெரியமருது.

பெரியமருது : எந்நாட்டு மக்களே! நட்புக்காக உயிர்விடும் எங்கள் வரலாறு என்றும் நிலைத்திருக்கும்...! எங்களைக் காட்டிக் கொடுத்தவர் முகங்களில் காறி உமிழுங்கள்!

இறப்பிற்குப் பிறகு எனது தலையைக் காளையார் கோயில் கோபுரம் முன் புதையுங்கள்! எனது உடலைத் திருப்பத்தூரில் புதையுங்கள்! வணிகம் செய்ய வந்த அந்நியன் இன்று நாடாளும் பேராசை கொண்டு விட்டான். பொங்கி யெழுங்கள்... அந்நியம் பொடியாகட்டும்.

கர்னல் வேல்சு : தூக்கிலிடுங்கள்...! இந்த தேசத்துரோகியரை...!

பெரியசாமி : மக்களே! பொங்கியெழுங்கள்...! இந்த வெள்ளைக்காரனை விரட்டி அடியுங்கள்

(சின்னசாமியை அடித்தல்)

சின்னசாமி : அண்ணே! அண்ணே! இது என்ன கொடுமையாய்ப் போச்சு?

பெரியசாமி : அடியுங்கள் விரட்டி அடியுங்கள்!

சின்னசாமி : இந்த அடி அடிக்கிறாய். எப்படி எழுப்புவது? வந்தேமாதரம்...! வந்தேமாதரம்...!!

பெரியசாமி : வந்தே மாதரம்...! வந்தே மாதரம்...! அடக் கனவா...?

சின்னசாமி : நம்ம கவலை எல்லாம் தீர்ந்து போச்சு நிம்மதியாத் தூங்கலாம்னு வந்தா... இப்படிப் போட்டு பின்னிட்டீங்க...

பெரியசாமி : சின்னசாமி உன்ன அடிச்சிட்டேனா...? மன்னிச்சிக்கப்பா... வெள்ளக்காரப் பயலுவன்னு நினைச்சு அடிச்சுட்டேன்.

சின்னசாமி : அதுகிடக்கட்டும்... இன்றைய கனவுலயாரு?

பெரியசாமி : (சிரித்து) ஊமைத்துரை, பெரியமருது, சின்னமருது.

சின்னசாமி : இன்றைய கனவு முடிஞ்சதில்ல நிம்மதியாகத் தூங்குங்க... நானும் தூங்குகிறேன். (படுத்தல்)

(திரை)

## காட்சி - 12

**அரங்கம்** : **நடு அரங்கம்.**

**களம்** : **சிதம்பரம் வீடு.**

**காலம்** : **காலை.**

**உறுப்பினர்** : **சிதம்பரம், மீனாட்சி, சிவம், இளவரசன் (பிச்சை), பத்மநாபன் ஐயங்கார்.**

இளவரசன் : ஐயா இது சிதம்பரம் ஐயா வீடுதானே...?

அப்பாதுரை : ஆமாம், தம்பி நீங்க... (கையைப் பிச்சை எடுப்பது போல அசைத்துக் காட்டி) பூங்காவிலே...அந்த ஆளு... இல்ல...

இளவரசன் : ஆமாம் ஐயா...!

அப்பாதுரை : என்ன? சிதம்பரம் ஐயாவைப் பார்க்க வந்தீங்களா...? வாங்க...! வாங்க...! சிதம்பரம் தம்பி உங்களைப் பார்க்க இளவரசன் வந்திருக்கின்றார்.

சிதம்பரம் : வாருங்கள்... இளவரசன்... உங்களைப் பற்றி சிவம் சிறப்பாகக் கூறியிருக்கின்றார். உங்களுக்கு

ஒரு சிறு கடையை ஏற்பாடு செய்திருக்கின்றேன். சிறு முதலீடும் செய்திருக்கின்றேன். சிறுகக் கட்டிப் பெருக வாழ்க... இந்தாருங்கள் கடைக்குரிய திறவுகோல்...

இளவரசன் : ஐயா... இந்த ஏழைக்கு...

சிதம்பரம் : இந்த ஏழையின் பரிசு...!

(சிவா வருதல்)

சிவா : அடடே... இளவரசனா...! தம்பி... இனி நீ யார் காலையும் பிடிக்க வேண்டாம்! உழைத்து உயர்க.

இளவரசன் : சரியய்யா, இந்த உதவியை என்றும் மறக்கமாட்டேன் நன்றி... நன்றி...

சிதம்பரம் : சென்று வாருங்கள். (இளவரசன் போதல்) சிவம் கோரல்மில் சிக்கல் எல்லாம் தீர்ந்து விட்டது... இன்று தொழிலாளர்களைச் சந்திக்கச் சென்றீரே ஏதும் செய்தி உண்டா?

சிவம் : யாதொன்றும் குறையில்லை பராபரமே, எல்லோரும் மகிழ்வாகத்தான் இருக்கின்றனர். இப்போழுது மில் தொழிலாளர்க்கெல்லாம் யார் கடவுள் தெரியுமா...?

சிதம்பரம் : யார்...?

சிவம் : என் அருமைநண்பர்... வ.உ.சி., வ.உ... சிதம்பரம்...

சிதம்பரம் : கடமையைச் செய்கின்ற எளிய மனிதனைத் தெய்வமாக மாற்றிவிடாதீர்.

சிவம் : சிதம்பரம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும். நாமே விரும்பவில்லை என்றாலும்... நாம் கண்டிப்பாக வைக்கப்படுவோம்...

இது எனது கருத்தில்லை நண்பா! திருவள்ளுவர் கருத்து! தொழிலாளர், நாடே விடுதலை பெற்றது போன்று மகிழ்வாக இருக்கின்றனர்.

சிதம்பரம் : எல்லாம் இறைவன் செயல்.

சிவம் : இந்தச் சிதம்பரம் இறைவனின் செயலும் அதனுள் அடங்கும்...!

சிதம்பரம் : முன் புகழ்ச்சியும்... பாராட்டும்... நன்றோ...?

சிவம் : நல்லதை வரவேற்றுப் பாராட்டுதல் நமது கடமை. இல்லையெனில் அல்லதுகள் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்து விடும்... உம்...

(மீனாட்சி வருதல்)

மீனாட்சி : என்ன அண்ணா! நல்லது... அல்லது... என்று எதுகை, மோனையுடன்...

சிவம் : உள்ளதைச் சொன்னேன்! உன் கணவன் ஏற்றுக் கொள்ளவில்லை...

மீனாட்சி : என்னங்க... அண்ணனோடு...!

சிதம்பரம் : என்னைத் தெய்வம் என்கிறார். ஏற்கச் சொல்கிறாயா?

சிவம் : இதனை நான் மட்டும் சொல்லவில்லை. நம் தொழிலாளர் அனைவரும் சொல்கின்றனர்.

மீனாட்சி : தொழிலாளரும் சரி... நீங்களும் சரி... சரியாகப் புரிந்து கொள்ளவில்லை அவர் தெய்வமில்லை...

சிவம் : என்னம்மா சொல்கின்றாய்?

மீனாட்சி : அவர் தெய்வமில்லை... எல்லோரின் உள்ளம் கவர்ந்த மிகப் பெருந்தெய்வம் என்று அல்லவோ சொல்லியிருக்க வேண்டும்?

சிதம்பரம் : மீனாட்சி...!

சிவம் : அப்படி போடும்மா... மீனாட்சி யார்? என் தங்கையல்லவா?

மீனாட்சி : வாருங்கள் பெருந்தெய்வங்களே... சிற்றுண்டி தயார்...

சிவம் : என்னம்மா என்னையும் பெருந்தெய்வம் ஆக்கிவிட்டாய்...

மீனாட்சி : அண்ணா, உங்கள் ஆற்றல் உங்களுக்குத் தெரியவில்லை... இராமனுக்கு...

சிவம் : அனுமன் போல... உம்... என்னைக் குரங்கு ஆக்கிவிட்டாய்.

மீனாட்சி : இல்லை இலக்குமணன் போல... அவரது ஒவ்வோரு செயலுள்ளும் நீங்கள் இருக்கின்றீர்கள்.

சிதம்பரம் : அப்படிப்போடு மீனாட்சி, சிவம், மீனாட்சி யார் என்கிறாய் என் மனைவி... (இருவரும் சிரித்தல்) (பத்மநாபன் ஐயர் வருதல்)

பத்மநாபன் : நான் உள்ளே வரலாமா?

சிதம்பரம் : வாருங்கள் பத்மநாபம்... உணவருந்தலாமே?

பத்மநாபன் : உணவு முடித்துவிட்டேன்... நீங்கள் உண்டு வாருங்கள் அவசரமாகச் சிலவற்றைப் பற்றி பேச வேண்டும்.

சிதம்பரம் : அவசரம் என்ற பிறகு உணவா? செய்தி முன்பு... உணவு பின்பு... உம் சொல்லுங்கள்...!

பத்மநாபன் : மில் தொழிலாளர்களின் வெற்றியால் வெள்ளைத்துரையினம் நம்மீது கோபமாக இருக்கு...

சிதம்பரம் : கோபமா...? இருக்கட்டுமே...! நாமென்ன அவரின் பங்காளியரா...? இல்லையே...! பகைவர்தாம். பகைவர்க்குப் பகைவர் கோபமாகத்தான் இருப்பர்... அதுகண்டு நாம் அஞ்ச வேண்டியது ஒன்றுமில்லை, மேலே சொல்லுவீர்.

பத்மநாபன் : நமது சுதேசிக் கப்பல் கம்பனி...

சிதம்பரம் : சுதேசி டீம் நேவிகேசன் (Stream navigation) 1905 ஆம் ஆண்டு ஆகட்டு ஏழில் தொடங்கினோம்.

சிவம் : பாலவானந்தம் சமீன் பாண்டித்துரைத் தேவரைத் தலைவராகவும்; சிதம்பரத்தைச் செயலராகவும்; கொண்டு தொடங்கப்பட்டது. அதற்கென்ன இப்போழுது?

சிதம்பரம் : முறைப்படி 1906 - அக்டோபர் 16 இல் 1882 ஆம் ஆண்டு சட்டத்தின்படி பதிவும் செய்திடுகிறோம். அதற்கு என்ன?

பத்மநாபன் : எதற்காகக் தொடங்கினோம்...?

சிதம்பரம் : இந்திய வணிகரை இழிவாக நடத்தியதால்... வாணிகம் செய்யவந்தவனுக்கு வாணிகமே சிறந்த வடிகால் என்பதால்...

பத்மநாபன் : இதனால் பிரிட்டீசு(British) கப்பல் கம்பெனி படுத்துவிட்டது தெரியுமா?

சிதம்பரம் : தெரியும், அதற்காகத்தானே சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடங்கினோம்...

பத்மநாபன் : அந்த கம்பெனியின் முதலீட்டாளர்... யாரென்று...?

சிதம்பரம் : தெரியும்...! மாவட்ட ஆட்சியாளர், காவல்துறை அதிகாரியர், நீதிபதியர் மற்றும் இந்திய அடிவருடியர் சிலரும்...

பத்மநாபன் : இவர் நமக்கு எதிராகப் பல சதிகளைச் செய்கிறார்...!

சிதம்பரம் : செய்யட்டுமே...! அதை முறியடிப்பதுதானே நமது வேலை...! பத்மநாபன்... இன்று நேற்று அல்ல தொடக்கத்திலிருந்து அதைத்தான் செய்கின்றனர்...

பம்பாய் தாசுபாயிடம் குத்தகைக்குப் பெற்ற சூசான் கப்பலைக் திரும்பப் பெற வைக்கவில்லையா? தொடர்ந்து நாம் நமது கம்பெனியை நடத்தாமலா போய் விட்டோம்...

பத்மநாபன் : நடத்தினோம்...! கொழும்பிலிருந்து அதைவிடப் பெரிய கப்பலைக் கொண்டுவந்தீர்...! ஆனால்...

சிதம்பரம் : அந்த கப்பலுக்கும் அந்நியம் புகுந்து வேலை செய்கிறது. அதுதானே...!

பத்மநாபன் : ஆம்... சிதம்பரம்... அத்துடன்

சிதம்பரம் : பத்மநாபன்...அடுத்தவரை நம்பி இறங்குகிற செயல்களில் பல இடர்ப்பாடுகள் இருக்கத்தான் செய்யும்... நமக்கு எதிரியான ஆட்கள்

ஏமாந்தவர் அல்லர்! எதற்கும் தயாராக இருக்க வேண்டும்...!

பத்மநாபன் : அடுத்து நாம் என்ன செய்யலாம்?

சிதம்பரம் : சொந்தமாகக் கப்பல் வாங்க வேண்டியதுதான்...

பத்மநாபன் : என்ன சொந்தக் கப்பலா...? இது நம்மால் ஆகுமா?

சிதம்பரம் : என் ஒருவனால் ஆகாது... ஆனால் நம்மால் ஆகும்... இந்திய மக்களால் ஆகும்...

பத்மநாபன் : எனக்கு விளங்கவில்லை...

சிதம்பரம் : சிறு சிறு மழைத்துளிகள், ஒரு பெரும் காட்டாறு. நம் இந்திய மக்களின் சிறு சிறு பணத்துளிகள் ஒரு மாபெரும் கப்பல்...

சிவா : புரிகிறது... கப்பலுக்கான மூலதனத்தைச் சிறு பங்குகளாக ஏழையர் வாங்கக் கூடிய பங்குளாக வெளியிடல்தானே...

சிதம்பரம் : ஆமாம்... நம் இந்திய ஏழையரே முதலாளியர்...!

பத்மநாபன் : ஊர் கூடித் தேர் இழுப்பது எப்போது?

சிதம்பரம் : ஊர் முன்னேயே கூடிவிட்டது. தேர்வடம் தொடும் பணி மட்டும்தான் நமது... துணிந்து செயல்படுவோம்...!

பத்மநாபன் : இது அகலக் கால் ஆகாதா...?

சிதம்பரம் : அகலாத காலால் நடை கிடைக்காது... அகலும் காலுக்குத்தான் நடை கிடைக்கும்... ஓட்டம் கிடைக்கும்... நம்பிக்கையோடு செயல் படுவோம்...!

சிவா : நமது அடுத்தப் பணி...?

சிதம்பரம் : பணம் தேடலும் சொந்தக் கப்பல் வாங்கலும்...!

சிவா : என்று தொடங்கலாம்...?

சிதம்பரம் : என்றா? இன்றே! இன்றும் இன்னே...! இன்னும் இப்பொழுதே தொடங்குவோம்... நான் உடனடியாகக் கல்கத்தா செல்ல வேண்டும்...

சிவம் : நானும் உங்களோடு வரலாமா?

சிதம்பரம் : இல்லை சிவம்... இன்றைய தூத்துக்குடி சூழலுக்குத் தாங்கள் இங்கு இருப்பதுதான் நலம்...! நான் சென்று வருகிறேன்...! மீனாட்சி பெட்டியைக் கொண்டுவா...! (மீனாட்சி பெட்டியுடன் வருதல்) "இந்த ஊருக்கு நான் மீண்டும் வந்தால் சொந்தக் கப்பலுடன் தான் வருவேன் இல்லையெனில் வங்கக் கடலுள் வீழ்ந்து மடிவேன்". இது எனது அன்னைத் திருநாட்டின் மேல் ஆணை... நான் வருகிறேன்.

(சிதம்பரம் வெளியே போதல்)

மீனாட்சி : என்ன அண்ணா? என்ன நடந்தது? அவர் சாப்பிடாமல் கூட போகிறார்... எங்கே போகிறார்...?

சிவா : கப்பல் வாங்க... சொந்தமாகக் கப்பல் வாங்க...

மீனாட்சி : கப்பலா! உம்... அவருக்குத் தெரியாததா? எல்லாம் வல்ல இறைவன் அவருக்குத் துணையிருந்து வெற்றி தரட்டும்.

(திரை)

## காட்சி - 13

**அரங்கம்** : நடுவரங்கம்.

**களம்** : சிதம்பரம் வீடு.

**காலம்** : மாலை.

**உறுப்பினர்** : உலகநாதன் என்னும் மகராசன், மீனாட்சி, சிவா, அப்பாதுரை.

மகராசன் : (மரணப் படுக்கையில்...) அப்பா... அப்பா... (புலம்புதல்)

மீனாட்சி : மகனே...! உலகநாதா...! என் மகராசனே! உனக்கு என்னப்பா செய்கிறது...?

மகராசன் : அப்பா... அப்பா...

மீனாட்சி : அப்பா வந்துவிடுவார்... அப்பா வந்துவிடுவார்... நீ புலம்பாமல் தூங்கு...

அப்பாதுரை : அம்மா உனக்கும் உடம்பு சரியில்லை... கொஞ்சம் ஓய்வு எடும்மா...! நான் பார்த்துக்கொள்கிறேன்.

மீனாட்சி : சிவம் அண்ணன் எங்கே?

அப்பாதுரை : உங்களுக்கும்... தம்பி உலகநாதனுக்கும் உடம்பு சரியில்லை என்று நேற்று கொடுத்தத் தந்திக்குப் பதில் தந்தி வந்திருக்காம்... அதை வாங்க போய் இருக்கார்...

மீனாட்சி : ஐயோ, அவருக்குச் சொல்ல வேண்டாம் என்றுதானே சொல்லியிருந்தேன். சொல்லிவிட்டீங்களே...? பாவம் அவர் என்னத் துன்பப்படுகிறாரோ? (சிவா வருதல்) ஏன் அண்ணா தந்தி கொடுத்தீர்கள்...? சரி... பதில் தந்தி என்ன கொடுத்திருக்கின்றார்...?

சிவம் : ‘சிவம்! என் மனைவி மக்களை இறைவன் காப்பான். எடுத்த வேலையை முடித்த பிறகே வீடு திரும்புவேன்.’ அதான் அம்மா தந்தியில் உள்ளது...

மகராசன் : அப்பா... அப்பா... (உயிர்விடல்)

மீனாட்சி : ஐயோ மகனே...! நான் பெற்ற மகனே! என்னை விட்டுப்போனாயோ?... (அழுதல்)

அப்பாதுரை : தம்பி... உலகநாதா... (அழுதல்)

சிவம் : இறைவா... இது என்ன சோதனை...? சத்தியவான் அரிச்சந்திரனுக்கு வந்ததுபோல் சத்தியவான் சிதம்பரத்திற்கு நீர் தரும் சோதனையா...?

(சிவா வெளியே போக முனைதல்)

மீனாட்சி : அண்ணா... எங்கே போகிறீர்கள்...? என் மகனின் இறப்பை அவருக்குத் தந்தி கொடுத்துத் தெரிவிக்கவா?

சிவம் : ஆமாம்... மீனாட்சி...

மீனாட்சி : வேண்டாமண்ணா... வேண்டாம். இந்த நாட்டிற்காக அவர் செய்யும் செயலுக்கு எனது வீட்டு நிகழ்வுகள் தடையாக இருக்கக் கூடாது.

சிவம் : எப்படியம்மா?...

மீனாட்சி : அப்படித்தான் அண்ணா...

அப்பாதுரை : ஐயா இல்லாமல் எப்படியம்மா?

மீனாட்சி : ஐயா இருப்பதாகக் கருதி நாமே செய்வோம்.

(திரை)

## காட்சி - 14

**அரங்கம் : இடப்புற அரங்கம்.**

**களம் : சாலை.**

**காலம் : காலை.**

**உறுப்பினர் : சின்னசாமி, பெரியசாமி, அப்பாதுரை.**

சின்னசாமி : என்ன அண்ணே...! காலையிலே... நடக்கும்போதே கனவா...!

பெரியசாமி : என்ன சின்னசாமி கேலி பன்றே... இதுவரை நடக்கும் போதெல்லாம் கனவு கண்டதில்ல... சரி... நீயெங்க இந்தப் பக்கம்...?

சின்னசாமி : ஊரே அறிந்த ஆளுக்கு... பூணூல் எதுக்கு? இல்ல கேட்குறேன். நீங்க எங்க போறீங்கனும் எனக்குத் தெரியும்... நான் எங்கே போகிறேன்னும் உங்களுக்குத் தெரியும்... எதுக்குண்ணே ஒரு கேள்வி?

பெரியசாமி : (மேடைக்கு முன் கையைக் காட்டி) அவங்களுக்குத் தெரியாதே? அதான்...

சின்னசாமி : (மக்களைப் பார்த்து) இப்போ... வ.உ.சிதம்பரம் ஐயா நடத்தும் கப்பல் விழாவிற்குச் செல்கிறோம்...

(அப்பாதுரை வந்து சேருதல்)

பெரியசாமி : வாங்க அப்பாதுரை அண்ணே...! நீங்களும் கப்பல் விழாவிற்கா...?

அப்பாதுரை : ஆமாம்...! சிதம்பரம் ஐயா வந்திருக்காரே! அதான்...

பெரியசாமி : ஐயா ஊருல இல்லாத போது என்னென்னமோ நடந்துபோச்சு...

அப்பாதுரை : அவர் மகன் இறந்ததைச் சொல்றீங்களா?

பெரியசாமி : ஆமாம்... அந்த புண்ணியவதி மீனாட்சி அம்மா எப்படி இருக்காங்க...? உடம்பு தேறியிருக்கா...?

அப்பாதுரை : இப்ப கொஞ்சம் தேவலாம்... அவங்களும் விழாவுக்கு வருவாங்க பாருங்க...!

சின்னசாமி : சும்மா சொல்லக்கூடாது... சிதம்பரம் ஐய்யான்னா ஐயாதான்! அவர் பெருமிதம்பட வேண்டிய தமிழர்...

பெரியசாமி : வெறும் தமிழர் என்று மட்டும் சொல்லாதே கப்பலோட்டிய தமிழர் என்று சொல்லு... அதிலும் விடுதலை சிந்தனையாளர் கப்பலோட்டிய தமிழர் என்று சொல்லு.

சின்னசாமி : ஆங்கிலேயர், ஒவ்வொரு குத்தகைக் கப்பலாகக் கெடுத்தபோதும்...; இரண்டு கப்பல்களைக் கடலில் நிறுத்திவிட்டார்...!

பெரியசாமி : ஆமாம், ஆமாம்! பிரான்சு நாட்டிலிருந்து, எசு.எசு. காலியே (S.S. Galiyea) எசு.எசு.லாலா (S.S. LALA) என்றும் இரண்டு கப்பல்களைக் கொண்டு வந்திருக்காங்க...

அப்பாதுரை : அது மட்டுமில்லாது இரண்டு படகுகளும் வாங்கியிருக்காங்க. வேதமூர்த்தி என்பவர் ஐயாவிற்குத் துணையாகச் செயல் பட்டிருக்கார்...

பெரியசாமி : மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம் என்ற பாரதியின் கனவு நனவாகப் போகிறது...

சின்னசாமி : விழாத் தொடங்கப்போகிறது சீக்கிரம் வாங்க.

(திரை)

## காட்சி - 15

அரங்கம் : இடப்புற அரங்கம்; பாடற்காட்சி வலப்புற அரங்கம்.

களம் : தூத்துக்குடித் துறைமுகம்.

காலம் : முற்பகல்.

உறுப்பினர் : சிதம்பரம், சிவா, பாரதி, மக்கள், மீனவன், மீனவர் மனைவி, பெரியசாமி, சின்னசாமி.

(மீனவன் - மீனவன் மனைவி பாடுதல்)

எல்லாமும் இருந்திங்கும்
எல்லாமும் இருந்திங்கும்
எல்லாமும் இல்லாமல் போச்சி - இங்கு
எதனாலே இந்த நிலை யாச்சி?

கண்ணான கண்ணாட்டி
என்மனசு பொண்டாட்டி
என்னான்னு என்னான்னு சொல்லு - பதில்
எதனாலே என்று சொல்லி வெல்லு...

எல்லாமும் இருந்திங்கும்
எல்லாமும் இருந்திங்கும்
எல்லாமும் இல்லாமல் போச்சி - ஒற்றுமை
இல்லாமல் இந்தநிலை யாச்சி...

கண்ணான கண்ணாளா...
என்மனது பொன்னாளா
கண்ணாட்டி சொல்லிவிட்டேன் கேளு - மனம்
புண்ணாக்கிப் போடாமல் மாறு (எல்லாமும்...)

ஆட்டுத் தோலளவு
ஆட்டுத் தோலளவு
இடம் கேட்டு விற்க வந்த ஆளு - எப்படிப்
படமெடுக்கும் பாம்பானான்? கூறு...
(கண்ணான... கண்ணாட்டி)

ஆட்டுத் தோலளவு
ஆட்டுத் தோலளவு
இடங்கேட்டு விற்க வந்தான் மாற்றம் - நாம்
மடங்கொண்டு தந்து வைத்த ஏற்றம்...
(கண்ணான... கண்ணாளா)

பிரித்துப் பிரித்து வச்சி
பிரித்துப் பிரித்து வச்சி
பேதங்கள் வளர்த்து விட்ட ஆளு - இங்கு
பேதமின்றி போடும்வேடம் கூறு.
(கண்ணான... கண்ணா)

பிரித்துப் பிரித்து வச்சி
பிரித்துப் பிரித்து வச்சி
பேதங்கள் வளர்த்து விட்ட ஆளு - இங்கு
போடும் வேடம் நரியென்று கூறு.
(கண்ணான... கண்ணாளா)

அப்பம் பிரிக்கச் சொல்லி
அப்பம் பிரிக்கச் சொல்லி
அள்ளித் தந்த பூனைகளாய் நாமும் - அதைக்
கள்ளித் தின்ற வெண்குரங்கு யாரு?
(கண்ணான... கண்ணாட்டி)

அப்பம் பிரிக்கச் சொல்லி
அப்பம் பிரிக்கச் சொல்லி
அள்ளித் தந்த பூனைகளாய் நாமும் - அதைக்
கள்ளித் தின்ற வெண்குரங்கு வெள்ளைக்காரன்
(கண்ணான... கண்ணாளா)

எங்கள் தலைநிமிர
எங்கள் தலைநிமிர
பொங்கி எழுந்த சிங்கம் யாரு - அவர்
பொன்னான பெயரையிங்குக் கூறு
(கண்ணான... கண்ணாட்டி)

எங்கள் தலைநிமிர
எங்கள் தலைநிமிர
பொங்கி எழுந்த சிங்கம் கேளு - அவர்
பொன்னான சிதம்பரமே கூறு
(கண்ணான... கண்ணாளா)

பொங்கி எழுந்த சிங்கம்
பொங்கி எழுந்த சிங்கம்
என்ன செயல் செஞ்சாரு கூறு - அவர்
என்ன செயல் செஞ்சாரு கூறு.
(கண்ணான... கண்ணாட்டி)

பொங்கி எழுந்த சிங்கம்
பொங்கி எழுந்த சிங்கம்
தனிக் கடலில் கப்பல் விட்டார் பாரு... வெள்ளைத்
தலைகுனிய கப்பல் விட்டார் பாரு...
(கண்ணான... கண்ணாளா)

(மேடையில்)

சிவம் : இந்த விழாவிலே கலந்து கொள்வதை நான் பெருமையாக நினைக்கிறேன். தனக்கு வந்த எல்லாத் துன்பங்களையும் - அந்த துன்பங்களே துன்பப்படும்படியாக - அஞ்சா நெஞ்சத்துடன் போராடி வெற்றி கண்டுவிட்டார் சிதம்பரம்... வெள்ளை ஏகாதிபத்தியம் நடத்திய நரித்தனங்கள் அனைத்தையும் முறியடித்து... வெற்றி கண்டுவிட்டார்.

சிதம்பரம் : அன்புக்குரிய நெஞ்சங்களே! விடுதலை வேட்கை கொண்ட சிங்கங்களே! இது எனது உழைப்பு அன்று... நமது இந்தியத் திருநாட்டின் ஒவ்வொரு குடிமகனின் உழைப்பு! நீங்கள் சிறு துளியை ஒன்று கூட்டிப் பெருவெள்ளம் ஆக்கித் தந்தீர்...

அதை நான் இரண்டு பெருங்கப்பலாக ஆக்க முயற்சித்தேன்... அவ்வளவுதான்... வாணிகத்தால் நம்மை அடிமைப்படுத்தியவர் நம்நாட்டை விட்டு ஓட்ட இதனினும் சிறந்த வழி எனக்குத் தெரியவில்லை...! நாம் ஒன்றுபடுவோம்...! வெற்றி பெறுவோம்...!

பாரதி : எம்மினிய இந்தியத் திருநாட்டின் மக்களே! வந்தேமாதரம் என்ற சொல்லின் ஆற்றலாய் விளங்கும் நம் சிதம்பரம்... நமக்குக் கப்பல் ஓட்டிக் காட்டப் புகுந்துவிட்டார்... இது எவர்க்கும் எதிராகத் தொடங்கப்பட்டத் துறையன்று... நமக்கு நாமே தொடங்கியுள்ள துறை... சில துரைகளின் கொள்ளிக்கண் இதன்மேல் விழுந்துள்ளது, எமக்குத் தெரிகின்றது...! எத்தனை சோதனைகள் வந்தாலும் எதிர்த்துப் போராட வேண்டியது நமது கடன்...! நம்மைப் பிரிக்கக் காலனே வந்தாலும் காலால் உதையுங்கள்...! அன்று தமிழன் கப்பலோட்டி திரை கடல் ஓடி பொருள் சேர்த்தான்... இன்று இங்கு இந்தத் தமிழர் திரைகடலில் கப்பலோட்டி நமது மானம்

காத்தார்...! அதனால் என் அன்பிற்குரிய நண்பரை... நண்பர் சிதம்பரத்தைக் 'கப்பலோட்டிய தமிழர்' என்று அழைத்து வாழ்த்துக் கூறுகிறேன். கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி...

மக்கள் : வாழ்க... வாழ்க...

பாரதி : கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி

மக்கள் : வாழ்க... வாழ்க...

பாரதி : (பாடுதல்)

**வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் -**
**அடி**
**மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்.**
**பள்ளித்தளமனைத்தும் கோயில்**
**செய்குவோம்**
**- எங்கள் பாரத தேசமென்று தோள்**
**தட்டுவோம்.**

பெரியசாமி : கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. வாழ்க.

மக்கள் : வாழ்க... வாழ்க...

சிதம்பரம் : நமது கனவுகளில் ஒன்று நிறைவேறிற்று.

(திரை)

## காட்சி - 16

அரங்கம் : நடு அரங்கம்.

களம் : சிதம்பரம் வீடு.

காலம் : முற்பகல்.

உறுப்பினர் : சிதம்பரம், சிவம், அப்பாதுரை, காவலர்.

சிதம்பரம் : (தன் மகனை நினைத்து கண்ணீருடன் அமர்ந்திருத்தல்) (தனக்குள்) என் மகனே...! என் மகனே...! நாட்டுப்பணியால் இந்த வீட்டை மறந்தேன் என்று போய்விட்டாயா? இந்த அடிமை மண்ணில் வாழ வேண்டாமென்று போய்விட்டாயா?...

(கண்ணீரைத் துடைத்துக் கொள்ளல்)

சிவம் : சிதம்பரம்...! இது என்ன கண்ணீர்...? ஆனந்தக் கண்ணீரா? இல்லை அழுகைக் கண்ணீரா? வெள்ளையனுக்கு எதிரான வீரப்போரில் வெற்றியைச் சுவைக்கும் அன்பர் சிதம்பரமே... ஏன் கண்ணீர்...?

சிதம்பரம் : என்னதான் நாம் நாட்டிற்காக உழைத்தாலும்... வீடு நம்மைப் பாதிக்கத்தான் செய்கிறது. நீருக்குள் மீன் அழுவது போல அழுகின்றேன்...

சிவம் : இன்று அவன்... நாளை நாம் (திசை திருப்ப) நாட்டு நடப்பு என்னவென்று தெரியுமா?

சிதம்பரம் : என்ன? வங்கச் சிங்கம் விபின் சந்தரபால் பற்றியதுதானே...

சிவம் : ஆம்...! அவர் வெள்ளை அரசுக்கு அஞ்சாமல் நம் நண்பர் அரவிந்தகோசுக்கு எதிராக வாக்கு மூலம் தர மறுத்துவிட்டார்...

சிதம்பரம் : வங்கச் சிங்கம்... சிங்கம்தான்...! அதற்காக வெள்ளை அரசின் பரிசினைப் பெற்று விட்டாரே...!

சிவம் : ஆம்... அவமதிப்பு வழக்கு தொடுத்து ஆறுமாதம் கடும் சிறைத் தள்ளிவிட்டனர்... இவ்வாண்டு (1908) மார்ச்சு ஒன்பதில் விடுதலை ஆகிறார்...

சிதம்பரம் : சீப்பை ஒளித்து திருமணத்தை நிறுத்தப் பார்க்கிறது வெள்ளையரசு. ஒவ்வொரு இந்தியனுக்கும் விதிக்கப்படும் தண்டனை மக்கள் மத்தியில் போராட்டமாக வெடிக்கா விட்டால்... விடுதலை வெகுதொலைவுக் கனவாகிவிடும்...

சிவம் : ஆம்... புரட்சிக்குப் போராட்டம் இன்றியமையாதது.

வங்கத்தில் இந்த நாளைக் கொண்டாடப் போகிறனராம்.

சிதம்பரம் : நாமும் கொண்டாடுவோம்...! இந்தமுறை திருநெல்வேலியைக் களமாகக் கொண்டு மார்ச்சு ஒன்பதில் கொண்டாடுவோம்...!

சிவம் : அந்நிய ஆதிக்கம் தடைவிதிக்கும்...

சிதம்பரம் : அதையும் மீறி நடத்துவோம்... (அப்பாதுரை வருதல்)

அப்பாதுரை : ஐயா தானாக்காரர் வந்துள்ளார்...!

சிவம் : நமது செய்தி அதற்குள் வெள்ளை அரசுக்கு எட்டி விட்டதோ? வரச்சொல்லுங்கள்.

(காவலன் வருதல்)

காவலன் : ஐயா வணக்கம். மார்ச்சு ஒன்பது தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் பொதுக்கூட்டம் நடத்த தடைவிதிக்கப் பட்டுள்ளது. எங்கள் நீதிபதி ஈ.எச்.வாலேசு தங்களை எச்சரித்து வரச்சொன்னார். தாங்கள் கூட்டங்கள் நடத்தவோ, அதில் பங்கேற்கவோ கூடாது என்றும்; தங்களிடம் கலந்து கொள்ளமாட்டேன் என்ற கடிதத்தையும் கையோடு வாங்கி வரச்சொன்னார்.

சிவா : ஐயா...! காவலரே...! வந்த வேலை முடிந்துவிட்டதல்லவா? நீங்கள் செல்லலாம்...!

காவலர் : இல்லை கடிதம் கொடுத்தால் முடிந்தது...!

சிதம்பரம் : ஐயா காவலரே! 'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' எங்களை இதைச் செய், இதைச் செய்யாதே என்று கூறுவதற்கு எவர்க்கும் அதிகாரம் இல்லை. விபின் சந்திரபால் அந்நியர்க்கு அடிபணியா விடுதலை வீரர். உங்கள் அடாத செயற்கெல்லாம் வால்பிடிக்கும் கோழையர் அல்லர் யாம். திருநெல்வேலிச் சீமையிலே பேரணி நடத்தப்படும்... தாமிரபரணி ஆற்றங்கரை தைப் பூச மண்டபத்திலே பொதுக்கூட்டமும் நடக்கும்...

சிவம் : பிறகென்ன தாங்கள் செல்லலாம்...

காவலர் : வாலேசு துரையிடம் அப்படியே சொல்லிவிடலாமா?

சிதம்பரம் : ஓ... தாராளமாக... ஒரு சொல் சிதைவின்றி அச்சரச் சுத்தமாக அப்படியே சொல்லிவிடலாம்.

காவலர் : வருகின்றேன்...!

சிதம்பரம் : நல்லது. (காவலன் போதல்).

சிவம் : நான் ஓரடி நினைக்கும் முன்... வெள்ளையன் ஒன்பதடி நினைக்கிறான். நண்பர் ஐயங்கார் எங்கே?

சிதம்பரம் : பத்மநாபரையா...? திருநெல்வேலிக்கு அனுப்பியிருக்கின்றேன்...!

சிவா : ஏன்...?

சிதம்பரம் : விபின் சந்திரபாலின் விடுதலையைக் கொண்டாடும் வேலைகளைக் கவனிக்க...

அப்பாதுரை : அதான் இந்த தானாக்காரன் வருகையா? சிவம் ஐயா, வெள்ளைக்காரன் ஒன்றை நினைக்கும் முன்னே... உங்கள் நண்பர் ஒன்பதை முடிக்கிறார்.

சிவா : ஆமாம்... எண்ணித் துணிபவர் நம் சிதம்பரம்;

சிதம்பரம் : சிவம்! பேரணியும், பொதுக்கூட்டமும் சிறப்பாகச் செய்தல் வேண்டும். வங்கத்தைத் தமிழகம் விஞ்சியதாக இருக்க வேண்டும் புறப்படுவோம்...

(இருவரும் போதல்...)

அப்பாதுரை : போற போக்க பார்த்தால் ஐயா வீட்டையே மறந்துவிடுவார் போல இருக்கு...

(திரை)

## காட்சி - 17

அரங்கம் : வலப்புற அரங்கம். கனவுக் காட்சி உச்சியரங்கம்.

களம் : பெரியசாமி வீடு.

காலம் : இரவு.

உறுப்பினர் : சின்னசாமி, பெரியசாமி, இளவரசன், தீரன் சின்னமலை, ஆரிசு.

சின்னசாமி : பெரியசாமி அண்ணே! பெரியசாமி அண்ணே! அதுக்குள்ள தூக்கமா...? சரி நாமும் தூங்குவோம்...!

பெரியசாமி : தீரன்சின்னமலை...! தீரன்சின்னமலை...!

(கனவுக் காட்சி)

தளபதி ஆரிசு : என்ன தீர்ந்த கிரி...! சின்னமலை...! சிவன் மலைக்கும்... சென்னி மலைக்கும் இடை மலையே...! எப்படியிருக்காய்...? அக்... அக்... க... (சிரித்தல்)

தீரன் : ஏமாந்த நேரத்தில் ஏற்றங் காட்டிய வெள்ளை ஆரிசு... ஓடா நிலைப் போரில் ஓடி ஒளிந்தவனே! கையையும், காலையும் சங்கிலியால் கட்டி வைத்துவிட்டு வீரம் பேசும் வீணனே.

ஆரிசு : இருட்டறை சிறை எப்படி இருந்தது...?

தீரன் : உமது இருண்ட ஆட்சியைவிடக் கொடியதாக இல்லை...

ஆரிசு : இதோபார் சின்னமலை... நீ எதிரியாக இருந்தாலும் உனது... வீரத்தை மதிக்கின்றோம்... உன்னைக் கொல்ல எங்களுக்கு விருப்பம் இல்லை... ஒன்று செய்... நீ எங்கள் படையைக்கூட உடன் வைத்துக் கொள்ள வேண்டாம்... எங்களுக்கு வரி தருவதாக ஒப்புக்கொண்டு வரியில் ஒரு பகுதியை மட்டும் கட்டிவிடு...

சின்னமலை : ஆரிசு! உனது சிதை மொழி வாயை மூடு...! எங்கள் நாட்டிலே வாணிகம் செய்ய வந்தாய்...! ஆற்காட்டானைக் கடன்காரனாக்கி நாட்டைப் பிரித்தாய்...! விடுதலை வேட்கை கொண்டவரை அடாவடியாய்க் கொன்று குவித்தாய்... இன்று எங்கள் நாட்டைச் சுரண்டிச் சுடுகாடு ஆக்கிவிட்டாய்...! நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைப்பவர் யாம்...! அதன் விளைபயனை வரியாகக் கேட்க நீவிர் யார்? தன்னிலை தாழாமையும்... அந்நிலை தாழ்ந்தக்கால் உயிர் வாழாமையும் எம்குடி மரபு...

ஆரிசு : இப்படித்தான் கட்டபொம்மன் பேசினான் அவனுக்குக் கயத்தாறில் தூக்கு... மருதுபாண்டியர் மிரட்டினர் திருப்பத்தூரில் தூக்கு... எல்லோரையும் மண்ணோடு மண்ணாகப் புதைத்துவிட்டோம்...

சின்னமலை : அவர் தூக்கிலிட்டுச் செத்தவர் அல்லர்... உமது வெள்ளை அரசை வீழ்த்த நீ விதைத்த எமது வித்துக்கள்...

ஆரிசு : அதிகம் பேச வேண்டாம்...! மாற்றம் இருந்தால் சொல்...! உன் தம்பிகளையும் மனைவி மக்களையும் சேர்த்து விடுதலை செய்கிறோம்...

சின்னமலை : மாற்றமா...? எம்மிடமா... அக்... அக்... க... (சிரித்தல்)

ஆரிசு : மீண்டும் இவனை இருட்டுச் சிறையில் அடையுங்கள்...

(கனவுக் காட்சி முடிவு)

பெரியசாமி : தீரன் சின்னமலை... வீரன் சின்னமலை...

சின்னசாமி : அண்ணே கொஞ்சகாலமா இல்லாம இருந்துச்சு... மறுபடியும் தொடங்கிட்டீங்க... (எழுப்புதல்) எப்படியண்ணே உங்களுக்கு இப்படியெல்லாம் கனவு வருது...?

பெரியசாமி : நாட்டடிமை போகணுமின்னா...! நம்ம மனசுல அடிமை புத்தி போகணும்...! அதான் சிவாசிக்கு அவங்க அம்மா வீரக் கதைகளாய்ச் சொன்னாங்களாம்...

சின்னசாமி : அப்படி எந்த அம்மா... எந்தப் பிள்ளைக்கு வீரக் கதையைச் சொல்றாங்க...? அவுங்க வீரத்தை அவங்க அவுங்க புருசன் கிட்டேயில்லே காட்டுறாங்க...

பெரியசாமி : சும்மா இருப்பா...! உன் பொண்டாட்டிய குறை சொல்லுலேன்னா உனக்குத் தூக்கம் வராது...!

சின்னசாமி : அது கிடக்கட்டுமண்ணே, ஊர்பூரா ஒரே கலகமா இருக்கு... என்ன சேதி...?

பெரியசாமி : உனக்குத் தெரியாதா? வங்கச் சிங்கம் விபின் சந்தரபால் நாளைக்கு விடுதலை ஆகிறார்... வெள்ளைக்காரன், கூட்டம் நடத்தக் கூடாது என்று சட்டம் போட்டான். தடையை மீறி நாளைக்குப் பேரணியும் பொதுக்கூட்டமும் நடக்கப் போகுது... (இளவரசன் வருதல்)

இளவரசன் : நாளைக்குப் பேரணி திருநெல்வேலியில் நடக்கப் போவுது... நம்ம சிதம்பரம் ஐயா ஏற்பாடு பண்ணிக்கிட்டு இருக்கார்...

சின்னசாமி : சிதம்பரம் ஐயாவா...? அப்ப கண்டிப்பா நாம எல்லோரும் போகணும்...!

இளவரசன் : நீங்க நாளைக்கு வாங்க...! நான் இப்பவே கிளம்பிட்டேன்...!

சின்னசாமி : இந்த இரவிலேயா...?

இளவரசன் : நாளைக்குத் திருநெல்வேலியில நுழைய விடாம பண்ணினாலும் பண்ணுவாங்க... அதான்...

பெரியசாமி : அப்ப நானும் கிளம்புறேன்...!

சின்னசாமி : எனக்கு மட்டும் என்னா...? நானும் வர்றேன். (பாடுதல்) போவோமா பேரணிக்கு...

(மூவரும் போதல்)

கட்டப்பன் : 'போவோமா பேரணிக்கா'... சாவப் போறிங்கடா...!

(திரை)

## காட்சி - 18

அரங்கம் : இடப்புற அரங்கம்.

களம் : திருநெல்வேலி - தாமிரபரணி - தைப்பூச மண்டபம்.

காலம் : இரவு.

உறுப்பினர் : சின்னசாமி, பெரியசாமி, இளவரசன், பத்மநாபன், சிதம்பரம், சிவா, மக்கள்.

(திரைக்குப்பின்)

**வங்காளச் சிங்கம் விபின் சந்தரபால் வாழ்க... வாழ்க...**
**புரட்சி வீரன் விபின் சந்தரபால் வாழ்க... வாழ்க...**
**அந்நியர்க்கு அடிபணியா விபின் சந்திரபால் வாழ்க... வாழ்க...**
**அடக்கு முறைக்கு அஞ்சாத விபின் சந்தரபால் வாழ்க... வாழ்க...**

(திரை விலகல்)

சின்னசாமி : அப்பா எவ்வளவு பெரியகூட்டம்...? என்ன முழக்கம்? இவங்க எங்கே போகிறாங்க...?

இளவரசன் : தாமிரபரணிக் கரையில் தைப் பூச மண்டபத்தில் பொதுக்கூட்டம் இருக்கிறது அங்கேதான்...!

சின்னசாமி : அண்ணே... அதோ பாருங்க இந்தக் கூட்டத்துல கட்டப்பன் துண்டுல மறைச்சி ஏதையோ கொண்டுபோறான்...!

பெரியசாமி : கலகம் பண்ண வந்திருப்பான்... சரி மண்டபத்திற்குப் போவோம். (மண்டபத்தில்)

பத்மநாபன் : தேசிய தலைவன் அஞ்சா நெஞ்சன் விபின் சந்திரபாலின் விடுதலையைக் கொண்டாட வந்திருக்கும் எம்மினிய இந்தியத் திருநாட்டு மக்களே, வாணிகம் செய்ய வந்து, நம்மை அடிமைப் படுத்த நினைக்கும் வெள்ளையன் ஆட்சி இனி இல்லாமல் போகட்டும்! நாம் ஒன்றுபட்டால் இனி, வெள்ளையன்... என்ன ஆவானென்று நான் சொல்ல தேவையில்லை...! வந்தேமாதரம்...

சிவம் : புரட்சி வீரன் விபின் சந்தரபாலின் விடுதலையைக் கொண்டாடும் வீர நல்லுள்ளங்களே, வணக்கம், இது பொன்னாள்... வெள்ளையர் ஆட்சியைக் கல்லறைக்குள் சேர்க்கச் செய்யும் நன்னாள்...! ஆதிக்க வெறியர் சாதிக்க நினைத்ததைத் தவிடு பொடியாக்கும் இந்நாள்...! வெள்ளை ஏகாதிபத்தியமே...! நீ வீழப்போகிறாய்...! உன்னை வீழ்த்தாமல் ஓயமாட்டோம்! வந்தே மாதரம்...

சிதம்பரம் : எழுச்சி வீரரே...! புரட்சி நாயகரே...! வணக்கம்... இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? நீவிர், கலெக்டர் விஞ்சுத்துரை விளைத்து, வளைத்து வந்த தடைக் கற்களைத் தரைமட்டம் ஆக்கிவிட்டீர். நாம் விடுதலைச் செல்வர் என்பதை நிலைநிறுத்தி விட்டோம்... அந்நியன் தருகின்ற தடைகளைப் புல்லென மதிப்போம்.

**சொல்லெடுத்தால் சொல் எடுப்போம்...**
**கல் எடுத்தால் கல் எடுப்போம்...**
**வில் எடுத்தால் வில் எடுப்போம்...**

உறங்கிய சிங்கங்களைத் தடையென்னும் பெயரால் உசுப்பி விட்டார், துஞ்சும் புலியைத் தடையென்னும் பெயரால் தட்டி எழுப்பி விட்டனர். நமது நாட்டில் நம்மை ஆள அந்நியனா? அந்நியனுக்கு நாம் என்ன அடிமைகளா?

மக்கள் : இல்லை...! இல்லை...!

சிதம்பரம் : இந்த எழுச்சிப் போர் தொடரும்! புரட்சித் தீ பொங்கும்! அந்தத் தீயில் வெள்ளைப் பேய்கள் கருகிச் சாகும்! வந்தேமாதரம்...

மக்கள் : வந்தேமாதரம்...

பெரியசாமி : அப்பாடா... வெள்ளைக்காரன் ஏதாவது கலகம் பண்ணுவாங்கன்னு இருந்தேன் நல்லபடியா கூட்டம் முடிந்தது... சரி வாங்க எல்லோரும் தூத்துக்குடிக்குப் போவோம்.

சின்னசாமி : இல்லண்ணே, இரண்டு நாள் இங்கேயே தங்கி இருந்து போவோம், பாபநாசம் முதலான இடத்தப் பார்த்துட்டு போவோம்... (எல்லோரும் போதல், கட்டப்பன் வருதல்)

கட்டப்பன் : கலகம் இல்லாமலா முடிஞ்சது...! இது புயலுக்கு முன்னே உள்ள அமைதி! இனி வரப்போவுது பெரும் புயல்... (சின்னசாமி திரும்பி பார்த்தல்)

சின்னசாமி : அண்ணே, இதோ பாருங்க கட்டத்துரை...

பெரியசாமி : எங்கே அந்த துரோகி...? விடாதே. பிடியுங்கள்... (கட்டப்பன் கல்லால் அடித்துவிட்டு ஓடுதல்)

சின்னசாமி : சரி விடு... நேரம் கிடைக்கும்...

(திரை)

## காட்சி - 19

அரங்கம் : நடு அரங்கம்.

களம் : திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.

காலம் : மாலை.

உறுப்பினர் : நீதிபதி வாலேசு, வெள்ளைத்துரை, பி.ஏ.ஐயர், கலெக்டர் விஞ்சு, உதவி கலெக்டர் ஆசு, இலார்டு மெர்லி.

நீதிபதி வாலேசு : சிதம்பரம்...! சிதம்பரம்...! சிதம்பரம்...! இந்த மனிதன் யாருக்கும் அஞ்சாதவனாக இருக்கிறான்... ஒரு நீதிபதியான நான் சொல்லியும் கேட்கவில்லை... போராட்டம் நடத்துகின்றான்...!

வெள்ளத்துரை : சித்தாம்பரத்தால் நாம் அடைந்த நட்டங்கள் கொஞ்சம் இல்லை... கோரல் மில் போராட்டத்திலேயே அவனைச் சுட்டுக் கொன்னிருப்பேன்...! ஏதோ அவன் தப்பித்துக் கொண்டான்...!

பி.ஏ.ஐயர் : துரை... நீங்க...! (தனக்குள்) ஆளக்கண்டு பயந்து ஓடிப்போனது நேக்கில்லே தெரியும்...!

வெள்ளத்துரை : சித்தாம்பரத்தால் நான் பட்டதெல்லாம்... நட்டம்...! அவமானம்...!

நீதிபதி வாவேசு : இந்த ஆளாளப் பெரிய தலைவலி...

பி.ஏ.ஐயர் : பெரிசா தலையிருக்கில்லையோ...? வலியும் பெரிசாத்தான் இருக்கும்...!

நீதிபதி வாவேசு : சுதேசிக் கப்பல் விட்டு நம்ப பிரிட்டீசு (British) கம்பெனியைப் படுக்க வச்சுட்டான்...!

பி.ஏ.ஐயர் : நல்லா வளர்ந்து வந்த உங்க பங்கு இலாபம் இப்ப. நட்டத்துலே குட்டிக்கரணம் போட வைச்சுட்டன்...

உதவி கலெக்டர் : மக்களுக்கு நம்ம மேலே இருந்த பயத்த...

பி.ஏ.ஐயர் : இந்த ஒத்த மனிதன் கெடுத்துட்டன்...! இதோ பாருங்க... நீதிபதியாத் தீர்ப்பெழுத வேண்டிய கையால... உங்களுக்குப் பி.ஏ.வா கணக்கெழுதும்படி வச்சுட்டன்... என்ன பன்றது இது அவன் நேரம். நேர்ம நேர்மன்னு ஏதோ பண்ணிண்டே இருக்கான். நாம் அவாளண்ட மாட்டிண்டு தவிச்சிண்டு இருக்கோம்...

நீதிபதி வாலேசு : இந்த மனிதன் யாருக்கும் பயப்பட மாட்டேன் என்கிறான். சட்டம் படிச்சதால் சட்ட ஓட்டைகளை வைச்சு நம்மை மடக்கிடுறான்...

வெள்ளத்துரை : மூடிய மில்ல போராடித் திறக்க வைச்சான்... நம்ப பிரிட்டீசு கப்பல் கம்பெனியை மூடும்படியான நிலமையும் வந்தாச்சு... இந்த சித்தாம்பரத்தை ஏதேனும் ஒன்று செய்தாக வேண்டும்...

பி.ஏ.ஐயர் : சிதம்பரத்த பழிவாங்க ஒரு அருமையான திட்டம் இருக்கு...! ஆனா அதநீங்க சமத்தாச் செய்ய முடியுமா? அதுதான் சந்தேகம்.

நீதிபதி வாவேசு: என்ன மேன்...(Man) வழி...?

பி.ஏ.ஐயர் : நீங்க நினைச்சீங்கன்னா, நேத்து நடந்த கூட்டத்த வச்சே சிதம்பரம் அவனது கூட்டாளிகளை உள்ளே தள்ளலாம்.

கலெக்டர் விஞ்சு : 'கௌவ் மேன்' (How man?)... எப்படி?

பி.ஏ.ஐயர் : நீதியும் அதிகாரமும் நீங்களே...! காவல் துறையும் நீங்களே...! மாவட்ட ஆட்சியும் நீங்களே...! நீங்க நினைச்சாத் துரும்ப பேனாக்கி, பேன பெருச்சாளி ஆக்கலாம்...

கலெக்டர் விஞ்சு : என்ன மேன் (Man) சொல்ற...

பி.ஏ.ஐயர் : நேற்று சிதம்பரம் பேசியது தேசத் துரோகம்...

கலெக்டர் விஞ்சு : என்ன மேன் (Man)...? இதெல்லாம் கோர்ட்டுல (Court) நிக்காது...?

பி.ஏ.ஐயர் : கோர்ட்டும் இங்கதான் இருக்கு... நீங்க சொன்னீங்கன்னா அது தேசத்துரோகம்! அது மட்டுமல்ல அவனோடு கூட இருக்கானே சிவம்... சுப்பிரமணிய சிவம்... அவன் ஒரு தீவிரவாதி...! அவனுக்கு வீட்டில் அடைக்கலம் கொடுத்தது அடுத்தக் குற்றம்...

கலெக்டர் விஞ்சு : என்ன மேன்... சிவாமாங்க்! (Monk) 'டுறவி'...!

பி.ஏ.ஐயர் : துறவி தான்! அரவிந்தகோசும் துறவிதான்...! உங்களுக்குத் தேவை... கோர்ட்டுக்குச் சாட்சி... அதநான் உருவாக்கித் தர்றேன்... அத்தோட திருநெல்வேலியிலே கூட்டம் நடத்தத் துணையாயிருந்த பத்மநாப ஐயங்கார் அவரையும் புடிச்சு போடுங்கோ...!

உ.க.ஆசு : இப்படிச் செய்தால்...

பி.ஏ.ஐயர் : சிதம்பரம் சிறைபடுவான்... தேசத் துரோகச் செயலுக்கு 20 ஆண்டு... புரட்சிக்காரனுக்கு உடந்தையாக இருந்ததற்கு 20 ஆண்டு...

உ.க.ஆசு : இப்படி ஒரு தீர்ப்பை யார் தருவார்...?

பி.ஏ.ஐயர் : நாம் தான்... கலெக்டர் துரை விஞ்சு அவர்களே...! நீங்கள் கைது செய்து விசாரணை செய்யுங்கள். சிதம்பரம் வணங்க மாட்டான்... 106 ஆம் பிரிவில் வழக்கு தொடுத்து துரை வாலேசு நீதிமன்றத்திற்கு வழக்கு செல்லட்டும்... அங்கங்க எதிர் சாட்சிகளைப் பதிவு செய்யாமல் இருங்கள். செக்சன் நீதி மன்றத்திற்குத்தான் வழக்குச் செல்லும்... அங்கே துரை 'மின்கே' பார்த்துக்கொள்வார்.

கலெக்டர் விஞ்சு : இப்படிச் செய்தால்...?

பி.ஏ.ஐயர் : வழக்குமேல் வழக்குத் தொடரும்... வழக்கு முடிந்து சிதம்பரம் வெளியே வர குறைந்தது ஐந்து அல்லது பத்தாண்டுகள் ஆகும்... அதனிடையே...

உ.க.ஆசு : அதனிடையே...

பி.ஏ.ஐயர் : சுதேசிக் கப்பல் மாலுமி இல்லாத கப்பல்... ஒழித்து விடலாம்... தூத்துக்குடியும் தலைவன் இல்லாது போராட்டம் அழியும்... நமது கை ஓங்கும்...

உ.க.ஆசு : நல்லத் திட்டம்தான்... நேரில் ஒழிக்க முடியாத எதிரியை மறைமுகமாக ஒழிக்கச் சரியானத் திட்டம்... என்ன 'மொர்லியே' சரிதானா?

மொர்லியே : சரியில்லை...! நீதிமன்றத் தீர்ப்புகள் நீதிமன்றத்திற்கு வெளியே எழுதுவது சரியில்லை...! ஒரு விடுதலை விரும்பியின் வாய்ச் சொல்லுக்கு 40 ஆண்டுகள் தண்டனை என்பது டூ... மச்... (Too much) மிக அதிகம்... இது நடந்தால் நமது வைசிராய் இலார்டு மெண்டேவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எழுதுவேன்... இது உறுதி... நான் வருகிறேன்... (வெளியேறுதல்)

உ.க.ஆசு : என்ன நடந்தால்!... இது நடக்கும்! எல்லோரும் என்ன சொல்கிறீர்கள்...?

எல்லோரும் : இது நடந்தே தீர வேண்டும்...

உ.க.ஆசு : தூத்துக்குடியில் இருக்கும் அவர்களை உடனே கைது செய்ய வேண்டும்.

பி.ஏ.ஐயர் : ஒரு விண்ணப்பம்...

உ.க.ஆசு : வாட்... மேன்..? (What man?)

பி.ஏ.ஐயர் : சிதம்பரத்தைத் தூத்துக்குடியில் கைது செய்வது அவ்வளவு எளிதல்ல... அவர்களைத் திருநெல்வேலிப் பேச்சிற்கு என்று கூப்பிட்டு அனுப்பி, எதிர்பாராதவிதமாகக் கைது செய்யுங்கள்...

கலெக்டர் விஞ்சு : குட்... குட்... (good... good ...) உடனடியாக ஒரு ஆளை அனுப்பி அவர்களைப் பன்னிரெண்டாம் தேதிக்குள் சந்திக்கச் சொல்லுங்கள்.

(திரை)

## காட்சி - 20

அரங்கம் : இடப்புற அரங்கம்.

களம் : திருநெல்வேலி

காலம் : மாலை

உறுப்பினர் : சின்னாமி, பெரியசாமி, பட்டப்பன், கட்டப்பன், இளவரசன்.

சின்னசாமி : அண்ணே! அண்ணே!

பெரியசாமி : என்ன சின்னசாமி...?

சின்னசாமி : இடிவிழுந்தால் போல ஆயிப்போச்சு...! சிதம்பரம் ஐயா, பத்மநாபன் ஐயாவைத் திருநெல்வேலி கலெக்டர் விஞ்சுதுரை பேச்சுக்கு அழைத்தாரில்லையா...?

பெரியசாமி : ஆமாம். எல்லோரும் திருநெல்வேலி போயிட்டாங்களே...!

சின்னசாமி : தூத்துக்குடியில கைது செய்ய முடியாதுன்னு... பேச அழைப்பது போல் அழைச்சி திருநெல்வேலியில கைது பண்ணிட்டாங்களாம்!

பெரியசாமி : அடப் பாவமே...!

சின்னசாமி : திருநெல்வேலியும், தூத்துக்குடியும் பற்றி எரியுதாம்...! நாம தூத்துக்குடிக்குப் போக வேண்டாம்! இங்கேயே போராட்டத்துல கலந்து கொள்வோம்...! இளவரசன் கடைத் தெருவில் காத்திருக்கான்...! (போதல்)

(எதிரில் பட்டப்பன் வருதல்)

பட்டப்பன் : இந்தப் பக்கம் போகாதீங்க...! அங்கே துப்பாக்கிச் சூடு நடக்குது...!

பெரியசாமி : ஏன்...?

பட்டப்பன் : காவல் நிலையத்தை மக்கள் எரித்து விட்டனர்! கலெக்டர் ஆசு உத்தரவிட.... காவற்காரர்கள் கோபமாகக் கண்டமேனிக்குச் சுட்டுத் தள்ளுறாங்க...

பெரியசாமி : இளவரசனைப் பார்த்தியா?

பட்டப்பன் : ஓ... அந்தப் பையனா...? அவன் அங்கதான் இருக்கான்...! வெள்ளக்காரச் செயலைக் கண்டிச்சு வீர ஆவேசமாய்ப் பேசிக்கிட்டு இருக்கான்...

சின்னசாமி : அண்ணே...! நாம அங்க போகணுமா...?

பெரியசாமி : என்ன ஆனாலும் சரி போகத்தான் வேண்டும்...! அதோ இளவரசன்...

சின்னசாமி : எதிரே பாருங்கள் துப்பாக்கி ஏந்திய சிப்பாய்! அருகில் கட்டப்பன்...!

இளவரசன் : ஏன் அஞ்சுகிறீர்...? ஏன் ஓடுகிறீர்? நில்லுங்க! இந்த ஊனமுற்றவனக்கு இருக்கின்ற தைரியம் கூட உங்களுக்குக் கிடையாதா...? ‘வெள்ளையனுக்கு அஞ்ச வேண்டாம்‘. ஆறிலும் சாவு நூறிலும் சாவு அதில் நம்முயிர் நாட்டுக்காக... நாட்டு விடுதலைக்காகக் குரல் கொடுத்துப் போகட்டுமே... ‘அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே’ (மேடையின் ஒரு பகுதியில் கட்டப்பன்)

கட்டப்பன் : ஓ சிப்பாய்! அதோ தடி ஊன்றி எம்பி, எம்பி பேசுகிறானே! அவன் சிதம்பரத்தின் ஆள்...! விட்டா ஊரைக் கூட்டி உன்ன அடிச்சி கொன்னுடுவான்! அவன... குண்டு பட்டா என்ன ஆகுமுன்னு கொஞ்சம் போட்டுக் காட்டு

இளவரசன் : வெள்ளைக் காட்டாட்சி ஒழிக... (சிப்பாய் சுடுதல் - இளவரசன் வீழ்தல்) வந்தே மாதரம்... வந்தே மாதரம்...

பெரியசாமி : (தாங்கிப் பிடித்தல்) சின்னசாமி அந்தக் கட்டப்பயல விடாதே! (சின்னசாமி கட்டப்பனைப் பிடித்துக் கொள்ளுதல்) தம்பி இளவரசா...!

இளவரசன் : அண்ணே! கவலைப் படாதீங்க! எனக்கு வாழ்வு தந்த சிதம்பரம் ஐயாவுக்காக உயிர் விடுவதைப் பெரிதாகக் கருதுகிறேன்...! வந்தே மாதரம்...! வந்தே மாதரம்... (உயிர்விடுதல்)

பெரியசாமி : தம்பி... இளவரசா...! (அழுதல்)

சின்னசாமி : அன்னைக்குக் கட்டபொம்மனுக்கு எட்டப்பன், இன்னைக்கு இளவரசனுக்குக் கட்டப்பன் உங்களைப் போன்ற ஆட்களை உயிரோடு விட்டதுதான் தப்பு... (அடித்தல்)

கட்டப்பன் : ஐயா! தெரியாம செஞ்சிட்டேன்! என்னை விட்டிடுங்க... இனி தூத்துக்குடி, திருநெல்வேலி பக்கமே தலைவச்சி படுக்கமாட்டேன்...

பெரியசாமி : அவனை விடு...! இளவரசனைத் தூக்கிச் செல்வோம்...!

கட்டப்பன் : அப்பாடா! தப்பிச்சோம்... (ஓடுதல்)

(திரை)

## காட்சி - 21

**அரங்கம் : சிவசக்தி நடனம் உச்சி அரங்கம், பாரதி இடப்புற அரங்கம் செக்கிழுத்தல் நடு அரங்கம்.**

**களம் : (சிதம்பரம்) சிறை; (பாரதி) சென்னைக் கடற்கரை; (சிவசக்தி) தில்லை அரங்கம்.**

**காலம் : மாலை.**

**உறுப்பினர் : பாரதி, சிதம்பரம், சிவன், சக்தி, சிறைக்காவலர்.**

**(உருத்திரத்தாண்டவ நடனம்)**

பாரதி பாடுதல் :

இதுவென்ன சோதனை?
(சிதம்பரம் மண்வெட்டி சுமத்தல்.
இதுவென்ன வேதனை?
காவலன் சாட்டையால் அடிபடல்)
சொல்லடி சிவசக்தி! - பதில்
சொல்லடி நவசக்தி! (இதுவென்ன)

உன்திரு விடுதலை
எண்ணிய மைந்தரை

வன்சிறை கொடுமையுள்
வாடுவ தென்னடி?
காக்க மறந்தனையோ? - பயிர்
காவல் விடுத்தனையோ (இதுவென்ன)

(சிவன், சக்தி உருத்திரத்தாண்டவ நடனம்)

செந்நீரும் கண்ணீரும்
சிந்தி விளைபயிர்
வந்தே மாதரம்
என்று வளர்பயிர்
தீய்க்கத் திருவுளமோ?...
அருள் நோக்கம் மறந்தனையோ?
(இதுவென்ன)

நற்றமிழ் நாதனின்
நாடி தளர்ந்திட (சிதம்பரம் கல்லுடைத்தல்

கற்றவன் கைகளில் சாட்டை அடிபடல்)
சுத்தியல் தந்தனர்
தாக்க விடுந்தனையோ?... நிலை
தாழ விடுகுவையோ? (இதுவென்ன)

(சிவன், சக்தி உருத்திரத்தாண்ட நடனம்.)

நாட்டுக்கு விடுதலை
நாட்டிய செல்வனை
மாட்டுக்கும் கீழாக

(சிதம்பரம் செக்கிழுத்தல்
வாட்டுவ தென்னடி?
சாட்டை அடிபடல்)

ஆக்கம் மறந்தனையோ?... உயிர்
போக்கத் துணிந்தனையோ...?
செக்கினில் பூட்டியே
செருக்கினால் சிரித்தனர்
நக்கலர் மேலுற
நல்லவர் வாட்டினை...
சொல்லடி சிவசக்தி - பதில்
சொல்லடி சிவசக்தி...
(சிதம்பரம் மயங்கி விழுதல்)

சொல்லடி சொல்லடி...
சொல்லடி சொல்லடி...
சொல்லடி சொல்லடியே!
(பாரதி மயங்கி விழுதலும் சிவசக்தி உருத்திரதாண்டவ்மும்)

(திரை)

## காட்சி - 22

அரங்கம் : நடு அரங்கம்.

களம் : சிறைச்சாலை.

காலம் : காலை.

உறுப்பினர் : இராமையா, சிதம்பரம், சிறைக்காப்பாளர்.

இராமையா : சிதம்பரம் ஐயா நான் இராமையாக் கவுண்டர்... கோவை முதலியார் உங்களுக்கு உதவச் சொன்னார்.

சிதம்பரம் : இராமையா! எனக்கு உதவி செய்து நீங்கள் ஏதும் வம்பில் மாட்டிக் கொள்ளப் போகிறீர்கள்.

இராமையா : எந்தத் தவறும் செய்யாமல் சிறையிலே கல்லுடைத்தும், செக்கிழுத்தும் நீங்கள் துன்பப்படும் போது... உங்களுக்கு உதவுவதால் உயிர் போனாலும் தவறில்லை

சிதம்பரம் : உணர்ச்சி வேகத்தில் தவறுகள் செய்து விடாதீர்...!

இராமையா : உங்கள் தண்டனைக் காலம் நாற்பதிலிருந்து பத்தாகக் குறைக்கப்பட்டதல்லவா...? இலண்டன் இரிவ் கமிசன் அந்த பத்தையும் ஆறாகக் குறைத்துவிட்டது. அந்த ஆறும் குறைய வாய்பிருக்கிறது.

சிதம்பரம் : செத்தவன் வாயிற்கு வெற்றிலை எதற்கய்யா...?

இராமையா : என்ன தம்பி சொல்றீங்க...? சோகமா இருக்கீங்க...!

சிதம்பரம் : என் பையனைப் பறிகொடுத்த போது...

இராமையா : பெரிய மகனை இழந்த சோகமா...?

சிதம்பரம் : இல்லை ஐயா... அதைவிடப் பெரிய சோகம் என் பிள்ளையினும் மேலாக நான் தொடங்கிய 'சுதேசிக் கப்பல் கம்பெனி'

இராமையா : ஆமாம்... அதற்கென்ன...?

சிதம்பரம் : எவர்க்கு எதிராகத் தொடங்கினோமோ அவர்களிடமே ஒரு கப்பலை விற்றுவிட்டனர் என் கூட்டாளியர்.

இராமையா : கவலைப்படாதீர்... இதற்காகச் செத்தவன் வெற்றிலை என்று மனம் தளர்ந்து பேச வேண்டாம் சீக்கிரம் விடுதலை ஆவீர்கள்.

சிதம்பரம் : விடுதலை எனக்கா...? எதற்காக? இராமையா! கர்ணனைக் கொன்றது யார் தெரியுமா?

இராமையா : அருச்சுனன்...

சிதம்பரம் : இல்லை. அவன் செத்தவனைக் கொன்றவன். அவனுக்கு முன் ஆசிரியர் துரோணர், இந்திரன், தாய் குந்தி, அதன்பின் கண்ணன், அதன்பின்னே அர்ச்சுனனின் அம்பு...

இராமையா : ஓ... அப்படியா... அந்தக் கதை இப்போது ஏன்...?

சிதம்பரம் : அந்தக் கதையும் எனது கதையும் ஒன்றே... தவறுகளோடு சமாதானம் செய்து கொள்ள முடியாததால்... என்னால் பாதிக்கப்பட்ட அந்நிய வெள்ளையர். அவர் அடிவருடும் பேதையர் எல்லாம் ஒருங்கு கூடி என்னைக் கொன்றுவிட்டனர். குந்தி இருவரம் பெற்றுக் கர்ணனைக் கொன்றது போல, சுதேசிக் கப்பலை விற்று என்னைக் கொன்று விட்டனர்... என் நண்பர்.

இராமையா : நடந்ததை விடுங்கள்... நடப்பது இனி நல்லதாக இருக்கட்டும்...!

சிதம்பரம் : எங்கோ தவறு செய்துவிட்டேன்...! இதெல்லாம் எனக்குத் தேவைதானா...?

**யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்**

எதிலிருந்து எதிலிருந்து விலகி நிற்கின்றோமோ அதனால், அதனால் வரும் துன்பங்கள் நமக்கு இல்லை. உம்... அதிலிருந்து விலகாததால் தான்

இந்தத் துன்பமோ? ( சிறைக் காப்பாளர் வருகிறார்)

சி.காப்பாளர் : (திரைக்குப் பின் குரல் கேட்டல்) சிதம்பரம்... சிதம்பரம்...

இராமையா : சிறைக்காப்பாளர் வருகிறார்... நான் போகிறேன்... (இராமையா போதல், சிறைக்காப்பாளர் வருதல்)

சி.காப்பாளர் : சிதம்பரம்...! சிதம்பரம்....

சிதம்பரம் : நான்தான்...!

சி.காப்பாளர் : உமக்கு ஆசு (ஆஷ்) துரையைத் தெரியுமா?

சிதம்பரம் : ஓ... நான் இங்கு அனுபவிக்கும் துன்பங்களுக்கு மூலமே அவர்தான்.

சி.காப்பாளர் : அவர் வாஞ்சிநாதன் என்னும் இளைஞன் மணியாட்சியில் சுட்டுக்கொன்றதால் இறந்து விட்டார்...! அந்த இளைஞனும் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்து விட்டான்.

சிதம்பரம் : வருந்துகிறேன்...!

சி.காப்பாளர் : பரவாய்இல்லையே!... உம்மிடம் மாற்றம் தெரிகிறது. உமது எதிரியின் இறப்பிற்கும் வருந்துகின்றாயே.

சிதம்பரம் : தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம்! ஒரு ஈனனைக் கொன்றதற்காக நான் வருந்தவில்லை ஒரு விடுதலை போராட்ட வீரன் மறைந்தானே என்று வருந்துகிறேன்.

சி.காப்பாளர் : நீ திருந்தவே மாட்டாய்...! நாளைக்கு இரேசனைப் பாதியாக வெட்டிவிடுகிறேன்.

**(சிறைக்காப்பாளர் போதல்)**

சிதம்பரம் : இன்றும் எமது மண்ணின் விடுதலைப் போரட்ட உணர்வு குறையவில்லை... வாஞ்சிநாதா! நின் புகழ் வாழ்க...!

**(திரை)**

## காட்சி - 23

அரங்கம் : இடப்புற அரங்கம்.

களம் : பி.ஏ.ஐயர் வீட்டுத் திண்ணை.

காலம் : காலை.

உறுப்பினர் : பி.ஏ.ஐயர், முடிதிருத்தும் முனியன், அப்பாத்துரை.

(வீட்டின் புறத்திண்ணைக் கோடியில் பி.ஏ.ஐயர் அமர்ந்திருத்தல். முடிதிருத்தும் முனியன் முகத்திற்குக் கலவைப் பூசுதல்.)

பி.ஏ.ஐயர் : ஏய் முனியா! என்ன வாய் திறக்காம இருக்கே? நாட்டு நடப்பெல்லாம் எப்படி?

மு.முனியன் : ஒன்னும் இல்லிங்க சாமி...

பி.ஏ.ஐயர் : கத்திய திறக்குமுன்னே உன் வாயத்தான் கொஞ்சம் திறப்பா... இப்ப ஏன் பேசமாட்டேங்குறே...? ஏதும் விரதமா?

மு.முனியன் : ஒன்னும் இல்லிங்க சாமி...

பி.ஏ.ஐயர் : ஒன்றுமில்லை... ஒன்றுமில்லன்னு கிளிப்பிள்ளை மாதிரி கீரல் விழுந்த ரெக்காடா... (Recor) சொல்லிக்கிட்டு இருக்கே... சொல்லு.

மு.முனியன் : ஒன்னும் இல்லிங்க சாமி...

பி.ஏ.ஐயர் : ஒன்னுமில்லேன்னு பொய் சொல்லாதே! ஏதோ ஒன்னு இருக்கு... இதபாரு ஊர் நடப்ப வீட்டுப் பொன்னுங்ககிட்டேயும், நாட்டு நடப்ப உங்ககிட்டேயும் தான் தெரிஞ்சிக்க முடியும். சும்மா சொல்லு....

மு.முனியன் : என்னத்த சொல்லுறதுங்க... நாட்டு நிலைமையே ரொம்ப மோசமா இருக்குங்க... எதுவும் பேச முடியலே...

பி.ஏ.ஐயர் : ஏம்பா? உன் வாயி... உன் நாக்கு... நீ பேச வேண்டியதுதானே! எதுக்குப் பயம்?

மு.முனியன் : உங்களப் போல படிச்சவங்ககிட்ட நாங்க பயந்துதானே ஆகணும்... அதுமட்டும்

இல்லீங்க... நீங்க கூப்பிட்டு அனுப்பினதும் என் பெண்டாட்டி உங்கக்கிட்டே வாயத் திறந்து பேசக்கூடாது. போனீங்கன்னா வேலையை மட்டும் பார்த்துட்டுத் திரும்பச் சொன்னா. வீணாப்பேச வேண்டா முன்னுட்டாள்.

பி.ஏ.ஐயர் : ஏன் என்னிடம் உன் பெண்டாட்டிக்குப் பயமா?

மு.முனியன் : உங்ககிட்ட இல்லீங்க உங்க வாய்கிட்டத்தான் பயம்.

பி.ஏ.ஐயர் : வெள்ளக்காரங்கிட்ட பயப்படுகிற மாதிரி ஏதோ ஒரு விதத்துல பயம் இருந்தாச் சரி... அதுசரி என் வாய்க்கு ஏன் பயப்படுறே?

மு.முனியன் : வேண்டாங்க... அதுமட்டும் வேண்டாம்... வந்த வேலையை முடிச்சிட்டுப் போயிடுறேன்...

(கத்தியைத் தீட்ட மு.முனியன் போதல்)

பி.ஏ.ஐயர் : என்ன விதமா எந்தக் கடப்பாரை போட்டாலும் திறக்கமாட்டேங்குறானே? நம்பத்தியும் நாட்டு நடப்புபத்தியும் இவன கேட்டே ஆகணும்! முனியா... கத்தி தீட்டுறியா...? சும்மா சொல்லு... நான் உன்ன ஒன்னும் சொல்ல மாட்டேன்...

(மு.முனியன் கத்தியைத் தீட்டிவிட்டு வருதல்)

மு.முனியன் : எதைச் சொல்லச் சொல்றீங்க... வெள்ளைக்காரக் கொள்ளைக்காரன்... இம்மென்றால் சிறையும் ஏனென்றால் நாடுகடத்தலும் பண்ணுறான்.

பி.ஏ.ஐயர் : ஓ... அப்புறம்...

மு.முனியன் : அந்த வெள்ளைக் கொள்ளையனுக்கு இங்குள்ள படிச்சவங்களும் கோடாலிக் காம்பா நம்ம அழிக்க... நமக்காகப் பாடுபடுகிறவங்கள அழிக்கப் பயன்படுறாங்களாம்...

பி.ஏ.ஐயர் : படிச்சவனா? கோடாலிக் காம்பா?

மு.முனியன் : ஆமாஞ்சாமி! சிதம்பரம் சிதம்பரமுன்னு ஒருத்தர்...

பி.ஏ.ஐயர் : ரெண்டு பேரோன்னு பார்த்தேன்...

மு.முனியன் : இல்லிங்க ஒருத்தர்தான்...

பி.ஏ.ஐயர் : யாரு ஒட்டப்பிடாரத்து பிள்ளைவாளா? வி.ஓ.சியா...

மு.முனியன் : வி.ஓ.சி. இல்லீங்க வ.உ.சி. நல்ல மனுசங்க... வெள்ளைக்காரன் கொட்டத்தை அடக்க இந்த தூத்துக்குடியிலே கப்பல் கூட விட்டாருங்க... அவர...

பி.ஏ.ஐயர் : அவர...

மு.முனியன் : அவர சில வெள்ளைக்காரன்களும், நம்மவூர் படிச்ச மேதாவிகளும் திட்டம் போட்டு உள்ளத் தள்ளீட்டாங்களாம்...!

பி.ஏ.ஐயர் : அப்புறம்...

மு.முனியன் : அப்புறம் என்னாங்க! பொய்வழக்கு...! எல்லாம் அவங்களே! சிறையிலே தள்ளிட்டாங்க... ஒருவருசம் ரெண்டு வருசம் இல்லீங்க நாற்பது வருசம்... நீங்க முகத்தக் காட்டுங்க...

(முகத்தில் ஒரு பகுதியை மழித்தல்)

இதுக்கெல்லாம் முக்கிய காரணப்புள்ளி நம்ம அக்கிரகாரத்துலத்தான் இருக்காருன்னு பேசிக்கிறாங்க... சாமி

பி.ஏ.ஐயர் : அப்படியா? அப்புறம்...

மு.முனியன் : அப்புறம் என்னங்க சாமி ஆண்டவன் அருளால ஆறு வருசமா குறைச்சு இருக்காங்க... ஆனா...

பி.ஏ.ஐயர் : ஆனா... என்ன?

மு.முனியன் : சிதம்பரம் ஐயாவ உயிரோட வெளிய விடுறதாத் திட்டம் இல்லீங்களாம். சிறையில கல்லுடைக்க சொல்லுறாங்களாம்... செக்கிழுக்கச் சொல்லுறாங்களாம், சாட்டையால அடிச்சு சித்திரவதை செய்றாங்களாம். இதுக்கெல்லாம் சகுனி வேல பார்த்தவன் (கத்தியை முகத்துக்கு நேரே ஆட்டி) இந்த வூரிலேதான் இருக்கானாம்... அவன்...

பி.ஏ.ஐயர் : (திடுக்கிட்டு) என்ன...? என்ன...? என்ன பண்ணுவாய்...

மு.முனியன் : என்னால் முடிந்த அளவிற்கு என்ன செய்யணுமோ அதச் செய்வேன்...

பி.ஏ.ஐயர் : ஏய் முனியா! சித்தாம்பரம்... சீ... வெள்ளக்காரனோட சேர்ந்து சேர்ந்து அவனபோல பேசுறோம்... உம்... சிதம்பரத்துக்குச் செஞ்சிட்டா என்றேளே... சிதம்பரம் அவாளுக்கு என்ன செஞ்சிருப்பான்னு உனக்குத் தெரியுமா? நான் யாருன்னாவது தெரியுமா?

மு.முனியன் : அதெல்லாம் எனக்கு எதுக்கு சாமி? தெரியாது!

பி.ஏ.ஐயர் : ஒரு காலத்துல நான் சட்சுடா (Judge)! நீதிபதி...! எல்லாரும் பண்ணுறாளேன்னு... கொஞ்சம் அப்படி இப்படி கையை நீட்டிட்டடன்... இத மோப்பம் புடிச்சி வழக்குப் போட்டு எனது வேலையைப் போக்குனது யார் தெரியுமில்லே...!

மு.முனியன் : யாருங்க சாமி...?

பி.ஏ.ஐயர் : நீ சொன்னியே! அந்த சிதம்பரம்தான்... அவாதான் எனக்கு வினை விதைச்சா... இன்னைக்கு அத அவா அறுத்திண்டு இருக்கா...

மு.முனியன் : அப்ப சிதம்பரம் ஐயா உள்ள போறதுக்குக் காரணம் நீங்கதானா...?

பி.ஏ.ஐயர் : ஆமாம்... சாச்சாத்... நானே! எனது வாழ்க்கையை அவா கெடுத்தா... அவாள நான் கெடுத்தேன். கண்ணுக்குக் கண்... பல்லுக்குப் பல்... பழிக்குப் பழி... ஏய் முனியா! நான் மறுபடியும் நீதிபதியாக முடியிலேன்னாலும் மறுபடியும் வக்கீலாயிட்டேன்... ஆனால் அந்த சிதம்பரம்... வக்கீல் இல்லடா வைக்கோலாகக் கூட ஆக முடியாது... அதுக்கும் வேலை வைச்சுட்டேன்...

(முனியன் கத்தியை மடக்கி வைத்தல்)

ஏய் முனியா... நீ ஏன் கத்தியை மடக்கி வெச்சுட்டே... பாதியிலே ஏன்டா நிறுத்திட்டே...

மு.முனியன் : ஒரு விடுதலைப் போராட்ட வீரன உள்ளே தள்ளி பழிக்குப்பழி வாங்கிட்டதா பெருமைபடும் ஐயரே!

பி.ஏ.ஐயர் : என்ன ஐயரா! என்ன துணிச்சல்...? இப்படி பேசுறே...!

மு.முனியன் : (பாடுதல்)

'பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே - வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே' என்று எங்கள் முண்டாசு கவிஞன் பாரதி கொடுத்த துணிச்சல் தான்...

பி.ஏ.ஐயர் : ரெண்டு முண்டாசுகாரனும் சேர்ந்து உங்கள கெடுத்துட்டான்க...? அடே... அடே முனியா! நேக்கு அவமானம் ஆயிடும் செத்தமுடிச்சிட்டு போடா...

மு.முனியன் : ஐயரே! நீர் என்ன கெஞ்சினாலும் உமக்கு ஊழியம் செய்யமாட்டேன்...

பி.ஏ.ஐயர் : ஏய்! ஏய் முனியா! இதபார் உன்மேல கேசு (Case) போட்டு உள்ளத் தள்ளிவிடுவேன்...

மு.முனியன் : உம்மால அதுதான் முடியும்... அப்படியாவது என்ன உள்ள போடு - சிவா ஐயாவ, சிதம்பரம் ஐயாவ நான் அங்கேயாவது பார்க்க வாய்ப்பு கிடைக்கும்.

பி.ஏ.ஐயர் : ஏய்! இது சரியில்லை...!

மு.முனியன் : நீர் செய்தது மட்டும் சரியா?

பி.ஏ.ஐயர் : மீதி வேலைய முடிக்க நான் எங்கடா போவேன்?

மு.முனியன் : எங்கு போனாலும் என்னினத்தான் உம்ம முகத்தில் கைவைக்க மாட்டான். முடி வளரும் வரை காத்திரு. இல்லை கத்தி வாங்கி நீயே... உம்... உம்...

(மழிப்பது போல் கைகாட்டிவிட்டுப் போதல்)

பி.ஏ.ஐயர் : வாயத்திறக்காதவன வாயத்திறக்கவச்சு வாங்கிக் கட்டிக்கிட்டேன்... உம் நாம செஞ்ச தவறுக்கு நல்ல தண்டனை.

(சின்னதுரை வருதல்!
பி.ஏ.ஐயர் துணியால் முகத்தை மூடிக் கொள்ளுதல்)

அப்பாத்துரை : என்ன? பி.ஏ.ஐயரே...! என்ன முகத்தை மூடிக்கிட்டேள்...?

பி.ஏ.ஐயர் : ஒன்னுமில்லை... பல்லுவலி... முகம் வீங்கிடுத்து அதான்.

அப்பாத்துரை : மறைக்காதீங்க அய்யரே! முனியன் எல்லாவற்றையும் சொல்லிட்டுதான் போறான்.

பி.ஏ.ஐயர் : எல்லாம் நான் வந்த வழி.

அப்பாத்துரை : வழியில்லே... பழி... பழிக்குப்பழி... வரட்டா...

(போதல்)

பி.ஏ.ஐயர் : எல்லாம் என் தலைவிதி. உம்... எங்கு போயி தேடுவேன்...? யார நான் பார்ப்பேன்?

**(திரை)**

## காட்சி - 24

**அரங்கம் : நடு அரங்கம்.**

**களம் : சிறைச் சாலை வாயில்.**

**காலம் : மாலை.**

**உறுப்பினர் : சிதம்பரம், சிவா, கட்டப்பன்.**

சிதம்பரம் : என்னைக் கொடுமைப் படுத்திய அந்நியர் சிறையே! என்னை உயிரோடு வெளியே அனுப்பியமைக்கு நன்றி. எனக்கு விடுதலை. தூத்துக்குடி, திருநெல்வேலி செல்லக்கூடாது என்ற தடையுடன் எனக்கு விடுதலை...! இனி சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபடக்கூடாது என்ற தடையுடன் விடுதலை. விபின் சந்திரபாலின் விடுதலையை நான் கொண்டாடினேன். எனது விடுதலையை...

உம்... கிழ எருது... களைத்து விட்டது. எருதைக் காட்டிற்கு ஓட்டி விட்டனர்...! உம்... என்னை வரவேற்க ஒருவரும் இல்லையா?

(தொழுநோயாளராகச் சிவா வருதல்)

சிவம் : எனது கணக்கு தப்பவில்லை...! சிதம்பரம்... உம்மை வரவேற்க நாமே வந்துள்ளோம்.

சிதம்பரம் : ஐயா தாங்கள் யார்?

சிவம் : ஐயோ எனது விதியே! என் நண்பனுக்குக் கூட என்னை உரு தெரியாமல் மாற்றி விட்டாயே...! நான்தான்... சிதம்பரம்...! சிவம்... சுப்பிரமணிய சிவம்... நண்பா...

(சிதம்பரம் கட்டித் தழுவப்போதல்)

சிவம் : சிதம்பரம்... என்னைத் தொடாதே!

(போர்வையை விலக்குதல்)

சிதம்பரம் : இது என்ன கொடுமை...?

சிவம் : வெள்ளைச் சிறைவாசம் தந்த பரிசு... தொழு நோயளருடன் இருக்க வைத்து என்னை இந்த அலங்கோலப் படுத்திவிட்டனர். உம் சிவத்தைச் சவமாக்கி அனுப்பிவிட்டனர். என்னைத் தொடாதீர்...

சிதம்பரம் : சிவமே...! என் நண்பா...! உன்னை ஆட்கொண்ட நோய் என்னையும் ஆட்கொள்ளட்டும்!

(கட்டித் தழுவுதல்)

சிவம் : உயிர் போகுமுன் உம்மைப் பார்த்துவிட வேண்டுமென்று விரும்பினேன்... பார்த்துவிட்டேன் போதும். போதும்... இது போதும்...

(கட்டப்பன் வருதல்)

கட்டப்பன் : சிதம்பரம் பிள்ளை வாழ்க... சுப்ரமணிய சிவா வாழ்க... சிதம்பரம் பிள்ளை வாழ்க... சுப்ரமணிய சிவா வாழ்க!

சிதம்பரம் : யாரப்பா நீ...

கட்டப்பன் : என்னைத் தெரியலிங்களா...? நான் தான் கருணை மறவன்...!

சிதம்பரம் : கருணை மறவனா? நீ கட்டப்பன் இல்லை...

கட்டப்பன் : அட கண்டுபிடிச்சிட்டீங்களே! அது அப்போ! இப்போ கருணை மறவன். புதுக்கட்சி உருவாக்கி இருக்கேன்! உங்க ஆதரவு எனக்கே தர வேண்டும்!

சிவா : சிதம்பர நாதா! (கட்டப்பனை விலகுதல்) இனி இந்த மக்களுக்கு இவர்தாம் வழிகாட்டுவாரோ?

சிதம்பரம் : நீர் வாரும்... நாம் போவோம்...!

கட்டப்பன் : கடுகு சிறுத்தாலும் காரம் குறைவதில்லை... சிதம்பரம் சிதம்பரந்தான்...

(திரை)

**(நாடகம் முற்றும்)**

# பின் இணைப்பு - 1

## வ.உ.சிதம்பரனார் ஒருபா ஒருபஃது.
## பேரா. புலவர் பூவை. சு.செயராமன்

காப்பு
(குறள் வெண்பா)

அன்னைக் கலைத்தாயே! அன்பர் சிதம்பரனார்
பண்புணர்த்தும் பாப்பத்தும் ஈய்.

நூல்

(நேரிசை வெண்பா)

பொன்னமை தாய்நாடு செஞ்சீர்மை எய்திட;
முன்னைப் பழங்கேடு தீர்ந்திட; - பின்னை
வருங்கேடும் ஆழ்ந்திட வேட்பம்யாம் செம்மை
தருஞ்சீர் சிதம்பரமே வா! (வேட்டபம் - விரும்புவேம்.)

வாடிக் கிடந்த திருநாட்டார் கொள்ளடிமை
தேடி அழித்த சிதம்பரமே! - ஓடி
பகையொழிய திட்டமிட்டுப் பாங்கமைத்த வீர
உகை கொண்டு மீண்டும் பிற. (உகை - உவகை, மகிழ்ச்சி)

பிறந்த பிறப்பின் பெரும்புகழ் தாங்கு
சிறந்த சிதம்பரச் செல்வா! - மறந்துபோகும்
நாட்டபி மானம் நிலைநாட்ட எம்மிடையே
மீட்டும் பிறப்பெடுத்துப் பேண்.
(நாட்டபி மானம் - நாட்டுப் பற்று)

பேணா(து) அறம்விட்டு கையூட்டு வாங்குபழி
நாணாதார் வீழ்த்திட நற்சால்பின் - தூண்தாங்கி
பேணும் சிதம்பரச் சீர்நாதா! பேணாரைப்
பூண்கட்(டு) உலக்கையால் போடு.
(பூண்கட்டு - இரும்புப் பூண் கட்டப்பட்ட)

போட்டுப் பழகிய பாழ்மதுவால் மாந்தரினம்
வேட்டழுற் புக்குமெழில் விட்டிலாய் - நாட்டிலின்று
கெட்டுக் கிடக்கின்றார்; கேண்மைச் சிதம்பரமே!
பட்டழிந்து போகாமல் பார்.

(வேட்டு - விரும்பி, கேண்மை - உறவு, நட்பு.)

பாருள்ள பன்னாட்டு வல்வணிகர் ஈண்டுற்று
சீரைச் சிதம்பரத்தாய்! வீண்படுத்தி - நீரையும்
காசாக்கி நீள்விலைக்கு விற்கின்றார்; வீரமிகு
நேசாநீ தோன்றி நிறுத்து.

(நீள்விலை - நீண்ட, அதிகமான விலை.)

நிறுத்தி நிறுவிய கப்பல் குழுமம்
கறுத்தமன அந்நியர்பால் விற்ற - சிறப்பில்லாப்
பாவியர்போல் தம்வாக்கு விற்றழியும் வீணரை
மேவி சிதம்பரத்தாய் வீழ்த்து.

(வாக்கு - வாய்மை, வாக்கு உரிமைச் சீட்டு.)

வீழ்த்திடும் சாதியம்; வேண்டாத வல்லடிமை;
தாழ்த்திடும் பெண்ணடிமை சார்ந்தின்றும் - பாழ்படுத்தி
வாழும் அறிவிலியர் மாற வழிகண்டு
சூழ்வை சிதம்பரத் தாய். (சூழ்வை - சூழலை வை.)

தாயாகி தந்தையாகி பல்வழியும் மக்களுக்கு
ஞாயாகி நின்ற சிதம்பரத்தாய்! - பேயாய்ச்
சுரண்டல்செய் பேதமை நீங்க இவண் நீ
வரல் வேண்டும் வான்புகழ் கொண்டு. (இவண் - இங்கே.)

கொண்ட மடையால் வடிவிக்க எண்ணிநீ
கண்டு சுதேசியக் கப்பலை - மண்டலை
வங்கக் கடல்விட்ட வாய்மைச் சிதம்பரமே!
எங்கள் மனந்திகழ் பொன்.

(மண்டலை - அலை மண்டும், அலை பெருகும்.)

(நூல் முற்றும்)

# பின் இணைப்பு - 2

## நூலாசிரியரின் படைப்புகள்

| வ.எண். | நூலாசிரியர் படைப்புகள் | ஆண்டு |
|---|---|---|
| 1. | அருள்மிகு கலைமகள் திருப்பள்ளி எழுச்சி | 1994 |
| 2. | மாரியம்மன் இரட்டை மணிமாலை | 1997 |
| 3. | பூண்டி புதுமை உலூர்தன்னை இரட்டைமணிமாலை, மாமரி அம்மானைப் பத்து | 2001 |
| 4. | நாமகள் வெண்பா மாலை | 2001 |
| 5. | திருக்கடையூர் அமிர்தகடேசர் ஒருபா ஒருபஃது | 2001 |
| 6. | புதுவை மணக்குளப் பிள்ளையார் மும்மணி மாலை | 2002 |
| 7. | பூவை கூத்தனூர் கலைமகள் ஒருபா ஒருபஃது | 2002 |
| 8. | கலைமகள் திருப்பதிற்று அந்தாதி | 2002 |
| 9. | பட்டுக்கோட்டை நாடியம்மன் திருப்பள்ளி எழுச்சி | 2002 |
| 10. | குருநாதன் பாமாலை குறிப்புரை கருத்துரை | 2002 |
| 11. | கிறித்துவ மும்மை மும்மணிக்கோவை | 2002 |
| 12. | தொன்போசுகோ சலேசியக் குடும்பத்தின் அடிப்படை விதிமுறைகள்—மொழிபெயர்ப்பு | 2003 |
| 13. | பூவையின் கடுகுகள் ஆயிரம் என்னும் அகரச்சூடி | 2004 |
| 14. | புனித தோம்னிக்கு சாவியோ காப்புமாலை | 2005 |
| 15. | சமயபுரம் அன்னை அந்தாதி | 2005 |
| 16. | கலைமகள் இரட்டைமணி மாலை | 2006 |
| 17. | இரங்கற்பாமலர் | 2006 |
| 18. | அனுமன் திருப்பதிற்று அந்தாதி | 2007 |
| 19. | ஆரோக்கிய அன்னை திருப்பள்ளி எழுச்சி | 2007 |
| 20. | சைவத்திருக்குடும்ப நான்மணி மாலை | 2007 |
| 21. | அருள்மிகு வெக்காளியம்மன் பதிகம் | 2007 |
| 22. | அன்னை வேளாங்கண்ணி அருட்புகழ் வெண்பா மாலை | 2008 |
| 23. | ஆட்சியில் தமிழ் இரட்டை மணி மாலை | 2008 |
| 24. | அமுதகடேசர் பொன்னூசல்—எண்ம மங்கலம் | 2008 |

| | | |
|---|---|---|
| 25. | வேளைநகர் ஊர்வெண்பா – வேளை நகர் அன்னை இனமாலை | 2008 |
| 26. | நற்கடமை நாற்பது | 2009 |
| 27. | காரைக்கால் கவின் நள்ளை முக்கால் | 2009 |
| 28. | பூவையின் அம்பர் அகரம் (அம்பகரத்தூர்) மாகாளி மாலை, தமிழ் அன்னை இரட்டைமணி மாலை, அறிஞர் அண்ணா ஒருபா ஒருபஃது | 2009 |
| 29. | வரதராசன்பேட்டை அழகணி அன்னை திருப்பள்ளி எழுச்சி | 2010 |
| 30. | மாணவர்க்குக் குறள்வழியில் ஒரு நூறு ஒழுக்கம், திரும்பிப் பார்க்கிறேன் | 2010 |
| 31. | தொல்காப்பியச் செம்மல் அடிகளாசிரியர் அருட்காப்புமாலை, இயன்மொழி வாழ்த்து | 2010 |
| 32. | திருக்கடவூர் அன்னை அபிராமி அருட்கண் பத்து, திருக்கடவூர் அருள்மிகு அன்னை அபிராமி அடிமுடிக் கலிவெண்பா | 2010 |
| 33. | சென்னை அன்னை காளிகாம்பாள் ஊர் இன்னிசை | 2010 |
| 34. | அன்னை மாமரி அடைக்கல மாலை | 2010 |
| 35. | தமிழ் அன்னைக் கண்படை நிலை, தமிழ் அன்னைத் துயிலெடை நிலை | 2010 |
| 36. | பத்துப் பிறப்பின் பெருமானே! எந்தாய்த் தமிழைக் காப்பாய் | 2010 |
| 37. | மா, விளம், காய், கனிச்சீர் (அகரச்சூடி) | 2011 |
| 38. | கந்தன்குடி வெண்பா மாலை, தென்றல் மாலை | 2011 |
| 39. | திருமகள் ஒருபா ஒருபஃது | 2012 |
| 40. | தமிழ் அன்னை மணிமாலை | 2012 |
| 41. | இல்லற மாந்தர்க்கு இனிய ஒருநூறு குறள் ஒழுக்கம் | 2012 |
| 42. | அந்தமான் வெற்றிமலை முருகன் இரட்டை மணிமாலை | 2012 |
| 43. | ஆசிரியர்க்கான அரிய குறள் ஒழுக்கம் ஒருநூறு | 2012 |
| 44. | திருவள்ளுவர் போற்றித் திருஅகவல் | 2013 |
| 45. | மனித மாண்பிற்கான ஒருநூறு குறள் | 2013 |

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா - மொபசான் சிறுகதைகள் - ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| படைப்பு நெறிமுறைகள் | 150.00 |
| Comparative Studies in Literary Cultures | 100.00 |
| Sangam Classics : New Perspectives | 105.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள் | 100.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| தமிழ் வாழ்க்கை வரலாற்றியலக்கியம் | 170.00 |
| கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை | 45.00 |
| தமிழ் நாடக வகையும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு.என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1 | 85.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2 | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2 | 75.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல் - 1 | 125.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல் - 2 | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல் | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல் | 95.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல் | 190.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல் - 1 | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல் | 90.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல் | 55.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல். நன்னூல் | 120.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.) | 65.00 |
| வல்லம் புராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம் - விளம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு | 100.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணச்கூறுகளும் | 85.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |
| பெயரியல் | 55.00 |
| தமிழ் இசுலாம் உருவாக்கமும் திருக்குர் ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |
| விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் தமிழியல்பண்புகள் | 75.00 |